பக்கங்கள்: இருபத்துநான்கு

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 30 புதன்கிழமை (14.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 230

14 JUL 2010

# வன்னியில் பல பகுதியிலும் நிரந்தர இராணுவத் தளங்கள்

## நிறுவ ஏற்பாடுகள் தயார் என்கிறார் கோத்தபாய

வெள்ளாங்குளம், ஜூலை 14

முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் நிரந்தர இராணுவத் தளங்களை நிறுவியதைப் போன்று, வன்னியின் ஏனைய பிரதேசங்களின் பல பகுதிகளிலும் அவற்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முப்படையினரும் பொலிஸாரும் மிக உயர்வான மட்டத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டியது மிகமிக அவசியம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.



வெள்ளாங்குளத்தில் உள்ள படைத் தளத்தில் உள்ள 61 ஆவது பிரிவின் தலைமையகத்தில் இராணுவத்தினர், விமானப் படையினர் மத்தியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உரை நிகழ்த்தினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் மீண்டும் தலையெடுக்காதவாறு பாதுகாப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் நிரந்தரமான தளங்களை நிறுவியது போன்று வன்னியின் ஏனைய பிரதேசங்களிலும் சகல வசதிகளுடன் கூடிய இராணுவத் தளங்களை அமைக்க (24 ஆம் பக்கம் பார்க்க)

## தனுனவின் தாயாரை ஆஜராகும்படி உத்தரவு

கொழும்பு, ஜூலை 14

வங்கிப் பெட்டகத்தில் பணம் வைப்பிலிட்ட குற்றச்சாட்டு தொடர்பில் தனுன திலகரண்டனவின் தாயாரான அசோகா திலகரட்னவை அடுத்த மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இவர் மீதான குற்றச்சாட்டை சட்ட மா அதிபர் நேற்று சுமத்தினார். நிதிச் சட்டங்களுக்குப் புறம்பாக 52 ஆயிரத்து 700 அமெரிக்க டொலர்கள், 20 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்கள் மற்றும் 15 லட்சம் ரூபா ரொக்கப்பணம் ஆகியவை வங்கிப் பெட்டகத்தில் தனுன அசோகா திலகரட்னவால் வைப்பிலிடப்பட்டிருந்தன என்று அக் குற்றச்சாட்டில் (24 ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி தலைமையில் கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம்

## றொட்றிக்கோ மைதானத்தில் பொதுமக்களுக்கு உரையாற்றுவார்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சிக்கு இன்று வருகைதரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திய பின்னர் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றவிருக்கின்றனர் என்று மாகாண ஆளுநரின் கிளிநொச்சி அலுவலகம் நேற்று மாலை தெரிவித்தது.

அதேவேளை, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்து நண்பகல் 12 மணிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி விளக்கம் அளிப்பார். அதைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

பிற்பகல் 2.45 மணிக்கு, ஐந்து மாவட்டங்களிலும் இருந்து வரும் அரசஅதிபர்கள், தலைமையில் திணைக்களத் தலைவர்கள் (24 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பநல மருத்துவமாது மரணம்

## வேலணை வைத்தியசாலை டாக்டர் பிரியந்தாவை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை14

வேலணை அரசினர் பிரதேச வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது சரவணை தர்சிகாவின் மரணம் தொடர்பாக அந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியப் பொறுப்பதிகாரி பிரியந்த செனவிரத்னாவை கைதுசெய்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு ஊர்காற்றுதுறை நீதிவான் இ.வசந்தசேனன் நேற்று மாலை உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணை நேற்றுப் பிற்பகல் நீதிமன்ற நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் நடைபெற்றது. (24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரசாங்க அதிபராக இமெல்டா நேற்றுப் பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக திருமதி இமெல்டா சுகுமார் நேற்றுப் பதவியேற்றார்.

பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நேற்றுக்காலை வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைவாகவே நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திரு கே.கணேஷ் கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து சேவையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்கப்பட்டு அவரது இடத்திற்கு முல்லைத்தீவு (24 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து ரணில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்துவார்

கொழும்பு, ஜூலை 14

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்திய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஏனைய கட்சிகளுட னும் தாம் இதுகுறித்து பேச்சு நடத்த இருப்பதாக நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை ஏற்க கிழக்குத் திமோர் மறுப்பு

### கிறிஸ்மஸ் தீவில் தொடர்ந்து தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூலை 14

இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளிலிருந்தும் புகலிடம் கோருபவர்களை கிழக்குத் திமோரில் தங்க வைப்பதற்கு, ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் முன்வைத்த யோசனையைக் கிழக்குத் திமோர் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் நிராகரித்துவிட்டது. (24 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய செனட் தேர்தலில் யாழ்ப்பாணப் பெண் பிராமி போட்டி

கொழும்பு, ஜூலை 14

ஆஸ்திரேலிய செனட் சபைத் தேர்தலில் கிறீன் கட்சியின் வேட்பாளராக, அங்கு புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பா ணத் தமிழ் பெண் ஒருவர் போட்டியிடு கின்றார் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிராமி ஜெகன் (வயது - 30) என்கின்ற முன்னாள் ஊடகவியலாளருக்கே இச்சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இவர் சிறுமியாக இருக்கும்போதே உள்நாட்டு யுத்தம் காரணமாக குடும்பத்தினருடன் நாட்டை விட்டு வெளியேறி சோமாலியா, தன்சானியா, மலேசியா போன்ற நாடுகளில் தங்கியிருந்து பின் ஆஸ்திரேலியாவைச் (24 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டாலும் இனம் சார்ந்த அதிகாரப் பகிர்வே தேவை

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

''வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டாலும்- இணைக்கப்படவிட்டாலும் இனம் சார்ந்த அதிகாரப் பகிர்வே எமக்குத் தேவை.''

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசனலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் இந்திய அரசுடன் என்ன விடயங்கள் குறித்து பேச்சு நடத்தப்படும் என்று எமக்கு கூட்டமைப்பு தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எமது கட்சியுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

''வடக்கு, கிழக்குப்பிச்சினைக்கான அரசியல் தீர்வை விரைவில் முன்வைக்க இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தங்களை (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்.கோட்டை புனர்நிர்மாணப் பணிகளை உடன் ஆரம்பிக்குமாறு அமைச்சர் அறிவுறுத்து

## நேற்று யாழ்.வந்த குழுவினர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ்ப்பாணக் கோட்டை புனர்நிர்மாணப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தொல்பொருளியல் திணைக்களத்துக்கு தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்திரா வன்னி ஆராய்ச்சி பணித்தார். யாழ்ப்பாணத் திற்கு நேற்று வருகை தந்த அமைச்சர் குழு வினர் மாலை 5.30 மணியளவில் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்கள்.

இதன் போது யாழ்ப்பாணக் கோட்டையின் புனர்நிர்மாணத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு தொல்பொருளியல் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார். கடந்த 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இதன் புனர்நிர்மாணப் பணிக்காக இந்த வருடம் 33 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கோட்டை புனரமைக்கப்படுவதன் மூலம் யாழ்.குடாநாட்டுக்கு வருகைதரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதே நோக்கம் என்று கூறிய அமைச்சர், கவனமான முறையில் கோட்டையை புனரமைக்க வேண்டும் என்றும் புனரமைப்பின் போது தொல்பொருளியல் சான்றுகளை பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பணிகள் தொல்பொருளியல் திணைக்களத்துடனும் தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடனும் இணைந்து யாழ்.பிரதேச செயலகம் மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது அமைச்சின் செயலாளர்கள், தொல்பொருளியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், படைத்தரப்பினர் ,பௌத்த குருமார்கள் ,அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்கஅதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-டி)

## கோண்டாவில் விபத்தில் சுன்னாகம் வாசி பலி

யாழ்ப்பாணம், ஜூலை 14

கோண்டாவில் உப்புமடம் சந்தியில் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஹன்ரர் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சரவணமுத்து நடேசபாத இருதயன் (வயது 65) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் ஓய்வு பெற்ற ப.நோ.கூ.சங்கப் பணியாளர் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதியால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இவர், எதிரே வந்த ஹன்டருடன் விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## சிறுவர் நூலகக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

சாவகச்சேரிப் பிரதேச சபையினால் கச்சாய் பொதுநூலக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நூலக சிறுவர் பகுதிக்கான புதிய கட்டிடத் திறப்புவிழா நாளை வியாழன் காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதிய கட்டடத் தொகுதி யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (1-131)

## போக்குவரத்து அமைச்சர் வெல்கம கோண்டாவில் டிப்போவுக்கு விஜயம்



யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம கோண்டாவில் போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு வருகை தந்தார்.

போக்குவரத்துச் சபைக்குப் புதிதாக நியமனம்பெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் 60 பேருக்கு அமைச்சர் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ஜி வெல்கம, மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்து சேன மற்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை, கோண்டாவில் டிப்போ அதிகாரிகள், ஊழியர்களும் கலந்துகொண்டனர். (ஒ-23)

## ஆனைக்கோட்டையில் நாளை சிறுவர் நூல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வலிகாமம் தென்.மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகம் மற்றும் ஆனைக்கோட்டை பொது நூர்லகம் ஆகியன உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிறுவர் நூல் கண்காட்சி நடத்தவும் சிறுவர் கழகத்தை அமைக்கவும் ஏற்பாடு செய்துள்ளன.

இந்த நிகழ்வுகள் ஆனைக்கோட்டை பொது நூலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கு.இரத்தினராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய அதிபர் ந.சிவகடாச்சமும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் தென். மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கமும் கலந்து கொள்வர். (ஒ)


### காணி விற்பனை

துன்னாலை வடக்கு, கரவெட்டியில் வீதி ஓரமாகப் 10½ பரப்புக்காணி பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : T.P.:0774939793

### கார் (CAR) வடகைக்குத் தேவை

மருத்துவப் பிரதிநிதி ஒருவருக்கு நல்ல நிலையிலுள்ள கார் (CAR) வாடகைக்குத் தேவை. (MARUTHI SUZUKI) விரும்பத்தக்கது. தொடர்புகொள்ளவும். 0773762729

### சேவை நலன் பாராட்டு விழா



**திரு.சின்னத்தம்பி கந்தசாமி**

அதிபர் தரம் 2:I

எமது பாடசாலையில் பத்தொன்பது வருடங்கள் சேவையாற்றி அதிபர் தரம் 2:I இற்கு பதவியுயர்வு பெற்று தற்போது யா/எழுதுமட்டுவாள் அ.த.க.பாடசாலையில் கடமையை பொறுப்பேற்றுள்ள எமது முன்னாள் அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை.

### விசேட பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்
### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் (வடக்கு மாகாணம்) அவர்களின் NP/15/JA/G/82 இலக்கம் கொண்டதும் 2010.04.28 ஆம் திகதிய கடிதம் மூலம் 1973ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்கள் விதி 18 (1) இன் கீழ் சங்கத்தின் பொதுச்சபையைக் கூட்டுவதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டத்தினை பின்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைய 2010.07.17 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் கூட்டப்படுகின்றது. முழு அங்கத்துவத்தினையும் பெற்றுள்ள சகல அங்கத்துவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிகழ்ச்சிநிரல்

01. மௌன வணக்கம்
02. தலைமையுரை
03. நெறியாளர்குழு உறுப்பினர் தெரிவு

பொ.மோகன்,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்,
யாழ்ப்பாணம்.
(சி/569236)

### கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பொருளாளரும், தேர்த்திருப்பணிச் சபைச் செயலாளருமான க.சகாதேவன் (கிராம அலுவலர்) அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா இரஞ்சிதம்மா (ரஞ்சிதம்)**

அவர்கள் 12.07.2010 அன்று மீளாத்துயில் கொண்ட செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கர்ணந்தோட்ட கந்தனை வேண்டி நிற்கின்றோம்.

கர்ணந்தோட்டம்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,
நாரந்தனை, சரவணை.
(100614)

பரிபாலன சபையினரும்
தேர்த்திருப்பணி
சபையினரும்

### World Grate Opportunity

சாவகச்சேரியில் அண்மையில் புதிதாக நிறுவப்பட்ட நிறுவனத்திற்கு Manager, Administrator, Assistant Manager, Supervisor போன்ற பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. நீங்கள் O/L, A/L சித்தி பெற்றவராயின் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

இன்றே அழையுங்கள். 021 4915550
Contact.V.Udayarajan- 0717494735

### கோழிக்குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 Kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் 17.07.2010 விநியோகிக்கப்படும்.

★ ராஜீவ்,
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.
T.P. No: 021 222 2867, 0776090926

### தேவை

தையல்வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: ஆகாஸ் ரெய்லறிங்,
இல. 19, கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P.No: 0776701495, 021 2270119

### போட்டிப் பரீட்சை வழிகாட்டி

காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் வெளிக்கள போதனாசிரியர்களுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை வழிகாட்டி

தொகுப்பு: த.தவசேகர் விலை: ரூபா. 150/-

கடந்தகால வினாத்தாள்களை முக்கியமாக உள்ளடக்கியது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்பு பிரிவு [யாழ்.நகர்] நடைபெறவுள்ளது.

### கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயஆசிரியை திருமதி பாக்கியலீலா சிவானந்தன் அவர்களின் அன்புத் தந்தையாரும், வித்தியாலய மாணவி செல்வி சி.வைஷ்ணுகாவின் அன்புப் பேரனுமாகிய

**அமரர் வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் ஆறாத்துயரில் பங்கு கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய அவரின் குலதெய்வத்தையும் வேண்டிநிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்,
யா/மீசாலை விக்கினேஸ்வர.ம.வி.
(சி/569231)

### இதய அஞ்சலி



வேலணை பிரதேச வைத்திய சாலையில் கடமையாற்றிய குடும்பநல உத்தியோகத்தர்

**செல்வி சரவணை தர்சிகா**

கடந்த 10.07.2010 அன்று அகால மரணமடைந்தமையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை பிரதேச வைத்தியசாலை
அபிவிருத்திச் சங்கமும், பணியாளர்களும்.
(100618)

### துயர்பகிர்கின்றோம்

யாழ்.பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி பூலோகராசா சந்திரகாந்தா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பூலோகராசா திரவியம்**

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பிரதேச செயலக நலன்புரி சங்கம்,
யாழ்ப்பாணம்.
(100616)

### மரண அறிவித்தல்

**சரவணமுத்து நடேசபாத இருதயன்**
(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், சங்கானை ப.நோ.கூ.ச.)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து நடேசபாத இருதயன் நேற்று (13.07.2010) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் தபேசன் (ஓமான்), ஜிரானு (மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம். T.P. 021 2240618

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மஹிந்த-ரணில் பேச்சில் இணக்கம்

நாட்டில் சர்வாதிகாரம், குடும்ப ஆட்சி என்பன தீவிரமாகவும் வெட்டவெளிச்சமாகவும் தலைதூக்கும் ஆபத்து நெருங்கிவிடப்போகிறது என்று அஞ்சிய ஜனநாயக விரும்பிகளுக்கு நேற்றைய பத்திரிகைகளைப் படித்ததும் சற்று மன ஆறுதல் கிடைத்திருக்கும்.

ஏற்கனவே குடும்ப ஆட்சி ஏற்பட்டுவிட்டது என்பதனை ஓர் அரசியல்வாதி என்ற நிலையில் மட்டுமல்லாது, நண்பர்களுடன் பேசும்போதும் கவலை தெரிவித்து வந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயத்தில் முனைப்புடன் செயற்பட்டதால் இந்த நாடு, சர்வாதிகாரத்துக்கு விலைபோகாமல் தடுக்கக்கூடிய ஒரு புறச்சூழ்நிலை மெல்லிய கீற்றாகவேனும் தென்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது -

1978ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி நாடாளுமன்றுக்கு பொறுப்புக் கூறும் நிறைவேற்று அதிகாரப் பிரதமர் ஆட்சி முறையைக் கொண்டுவர கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சிமுறை அரசமைப்புச் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், அது குறித்து பிய்த்தல்கள், பிடுங்கல்கள் நிறையவே விளைச்சலாகும். பல இழுபறிகள் உண்டாகும்; இடைஞ்சல்கள் உண்டாக்கப்படும். உத்தேச ஆட்சிமுறை 2016ஆம் ஆண்டு நவம்பருக்கு முன்னர் நடைமுறைக்கு வர ஏற்பாடு செய்யப்படுமா?, அல்லது மஹிந்தவின் இரண்டாவது பதவிக்காலம் முடிவடைந்தபின்னர் மட்டுமே நடைமுறை நிலைப்பாடு வருமா?, அதன் போது அரசாங்கத் தரப்புகளுக்குள் தகராறு உண்டாகுமா? என்பனவெல்லாம் பொறுத்திருந்து அவதானிக்கப்படவேண்டியவை. அத்தோடு இவை வாதப் பிரதிவாதங்களுக்கு உட்படக் கூடியவை; ஆராயப்பட வேண்டியவை.

எப்படியோ, நிறைவேற்று ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேலான காலப்பகுதிக்குப் பதவி வகிக்கலாம் என்று மஹிந்தரும் அவரது சகபாடிகளும் போட்ட திட்டம் கைவிடப்படுவதற்கும், நாட்டில் சர்வாதிகாரம் தொடராமல் இருப்பதற்கும் இடப்பட்ட பூட்டு இது என்று கருதுவதில் தப்பில்லை.

இந்த அளவுக்கு அரச தலைவர் இறங்கிவருவார் என்பதனை நம்புவது கடினமாகத்தான் இருக்கிறது. எனினும் இரண்டு தடவைகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு ஜனாதிபதி பதவி என்ற பொன்னாடையைப் போர்த்து வதில், இப்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல தரப்புகள் அதிருப்தி கொண்டுள்ளன என்ற பின்னணியில் ரணிலின், நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும் நிறைவேற்றுப் பிரதமர் ஆட்சி முறைக்கு ஒத்துப்போவது தமக்கு இல்லாவிடினும் தாம் வளர்த்து வரும் அரசியல் வாரிசுக்கு நன்மை செய்யட்டும் என்று ஜனாதிபதி கணக்குப் போட்டிருக்கலாம். யார் அறிவார்?

எப்படியோ ஐவர் ஜென்னிங்ஸின் ஆட்சிமுறைமையை மாற்றியமைத்து 1972 இல் இலங்கை நாட்டை சோஷலிசக் குடியரசாக மாற்றியவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. அதன் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 தேர்தலில் ஐ.தே.கவுக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனது சொந்த அரசியல் பேராசையை ஈட்டும்பொருட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மாற்றினார். தேர்தல் தானும் நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி இரண்டாவது தடவையும் ஜனாதிபதியானார்.

அவர் செய்த வசதியை 12 வருடங்கள் தொடர்ச்சியாக ஆண்டு அனுபவித்தவர் ஜே.ஆரின் எதிராளி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் இளைய புதல்வி சந்திரிகாதான்!

இந்த ஆட்சிமுறைச் சுழற்சியில் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் (நிர்வாக) முறை திரும்பவும் எட்டிப்பார்க்கிறது.

அந்தந்தக் காலத்தில் பதவிக்கு வந்து ஆட்சி அதிகாரத்தைச் சுவைத்து அனுபவித்த அரசியல் தலைவர்களின் நலனுக்காக, புதிய அரசாட்சி முறைகளை அறிமுகப்படுத்துவது இந்த நாட்டின் ஓர் அரச ஒழுங்காகி உள்ளது. சாபக்கேடாகிவருகிறது என்று சொல்லலாம்.

எப்படியோ, ஜனநாயகம் தனக்கேயுரிய தனித்துவத்துடனும் உண்மைத்தன்மையுடனும் இலங்கை நாட்டில் நடைமுறைக்கு வருவது என்பது துர்லபமாகியே வருகிறது!

அந்த வரிசையில் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மீண்டும் வெஸ்ட் மினிஸ்டர் முறையின் ஒரு வடிவத்தை நடைமுறைப்படுத்த கொள்கை அளவில் ஏற்பட்ட இணக்கம், சர்வாதிகாரத்துக்கும் குடும்ப ஆட்சிக்கும் வகைசெய்யாமல் இருப்பதற்கான ஒரு வழித்துணையாக இருக்கும் என்று நம்பலாம்.

# நெருக்கடியான வேளையில் முல்லையில் பணியாற்றினேன்; அதேபோன்று யாழ்.மக்களுக்காகவும் எனது பணி தொடரும்

## புதிய அரச அதிபர் இமெல்டா கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை14

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச அதிபராக இருந்து மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும் என்னால் முடிந்த சேவையை வழங்கியதைப் போல, யாழ்.மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்கும் எனது சேவையை வழங்குவேன்.

யாழ்.மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்றுள்ள திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச அதிபராகக் கடமையாற்றிய அவர், பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நேற்றுக் காலை வழங்கப்பட்ட உத்தரவுக்கமைவாக பிற்பகல் யாழ்.மாவட்ட அரச அதிபராகப்பதவியேற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து திணைக்கள அதிகாரிகள் மத்தியில் உரை நிகழ்த்தும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

1984ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட நான் 2002இல் முல்லைத் தீவுக்கான அரச அதிபராக பதவியேற்றுக் கொண்டேன். 2005இல் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத் துக்கு உள்வாங்கப்பட்டேன். வவுனியா மாவட்டத்தின் அரசஅதிபராக அப்போது பதவியிலிருந்த கே.கணேஷ் தான் என்னை முல்லைத்தீவு அரச அதிபராக நியமிக்குமாறு அமைச்சுக்கு சிபார்சு செய்தவராவார்.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் நலன்கருதி பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கிறேன். யுத்த அனர்த்தம், ஆழிப் பேரலை ஆகியவற்றால் மக்கள் அதிகம் இழப்புக்களைச் சந்திக்கவேண்டியிருந்தது. எட்டு ஆண்டுகளில் எட்டாயிரம் வீடுகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிர்மாணித்து வழங்கியிருக்கிறேன்.

யுத்தவேளையில் இடம்பெற்ற ஷெல்வீச்சின் போது மூன்று தடவைகளுக்கு மேலாக நான் உயிர் தப்பி இருக்கிறேன். எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ள இடத்தில் எனது சேவையை வழங்கியிருக்கிறேன்.

அரச அதிபராகப் பதவியேற்பது தொடர்பான விடயத்தில் சில ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தன.



எனக்கு வழிகாட்டிய குருவாகவே கணேஷை நான் மதிக்கிறேன். எனக்கு தனிப்பட்ட விதமாகவும் உத்தியோக ரீதியாகவும் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் வழிகாட்டியாக இருப்பவர் அவரே.

பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாகவே நான் பதவியேற்கிறேன். நான் பிறந்ததும் படித்ததும் யாழ்.மாவட்டமே. யாழ். மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்குவேன்.

### முன்னாள் அரச அதிபர் நன்றி தெரிவிப்பு

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்ட மக்களுக்குத் திருப்திகரமான சேவையை என்னால் வழங்க முடிந்தது. இதயசுத்தியுடன் இறை நம்பிக்கையுடன் எனது சேவையை முன்னெடுக்க முடிந்தது. நான் தொடர்ந்தும் பதவியிலிருக்க விரும்புவதாக சிலர் நினைக்கலாம்.

எனது சேவையின் நிலைமையை அறிந்தே அமைச்சினால் பதவியில் தொடர்ந்தும் இருக்கும்படி பல முறை வேண்டப்பட்டிருந்தது.

முல்லை அரச அதிபராக கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமாரை யாழ்.அரச அதிபராக பதவியேற்கும்படி பணித்துவிட்டு பின்னர் மறு அறிவித்தல் வரும்வரை பதவியேற்க அனுமதிக்காதமையானது பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் தவறாகும். அதன் காரணமாகவே நியமனம் தொடர்பான சர்ச்சை ஏற்பட்டிருந்தது - எனக் குறிப்பிட்டார். (1-14-டி)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழா நாளைமறுதினம் ஆரம்பம்

மாவிட்டபுரம், ஜூலை 14



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த காம்யோற்சவம் நாளை மறுதினம் ஆனி மாதம் 32 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 9 ம் திகதி (09.08.2010) திங்கட்கிழமை ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழாவோடு நிறைவு பெறும். ஆலயத்தின் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான மஹா ராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் இதனை அறிவித்துள்ளார்.

ஆலயத் திருவிழாக்கள் தினமும் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு நிறைவுபெறும். முக்கிய விழாக்களாக 5 ஆம் நாள் ஷண்முகப்பெருமான் திருநடனமும், 20 ஆம் நாள் (04.08.2010) திருக்கார்த்திகை விழாவும், 24 ஆம் நாள் அன்று ஞாயிற்றுக் கிழமை (08.08.2010) தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் திங்கட்கிழமை (09.08. 2010) ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலையில் கண்டகிரி தீர்த்த உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

பக்தர்கள் எவ்வித தடைகளும் இன்றி ஆலயத்துக்குச் சென்று தமது சமய அனுஷ்டானங்களை நிறைவுசெய்வதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதிகள், சுகாதார வசதிகள், பூசைக்குரிய அர்ச்சனைப் பொருள்களைப் பெறுவதற்குரிய வசதிகள் என்பன சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவிருக்கின்றன என்று ஆலய ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார்.

ஆலயத் தொண்டர் சபையினரின் மகேஸ்வர பூசையும் வழமைபோன்று நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-க)

# குடத்தனையில் உப பொலிஸ் நிலையம்

வடமராட்சி,ஜூலை14

வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் உப பொலிஸ் நிலையம் ஒன்று கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை - வரணிச் சந்தி 6ஆம் கட்டையடியில் அமைந்துள்ள இந் நிலையத்தை வடபகுதிக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சமரக்கோன் திறந்துவைத்தார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் கீழ் இந்த உப பொலிஸ் நிலையம் இயங்கிவருகிறது. (50-236)

# உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ,ஜூலை14

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இணுவில் பொது நூலகம் நடத்தும் இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

3நாள் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் 17ஆம் திகதி சனிக்கிழமை கணக்கியல், பௌதிகவியல், வணிகக்கல்வி, இரசாயனவியல், அரசறிவியல் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெறும்.

மறுநாள் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொருளியல், இணைந்த கணிதம், இந்துநாகரிகம், உயிரியல், புவியியல், இரசாயனவியல் பாடங்களுக்கான கருத்தரங்கும் 19ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ்,அரசறிவியல் பாடங்களுக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது. (50-6)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 31 | 15.07.2010 வியாழக்கிழமை |
| திதி: | : சதுர்த்தி பி.ப. 04.33 வரை |
| நட்சத்திரம் | : மகம் மு.ப. 12.43 வரை |
| சுபநேரம் | : 07.30-09.00 வரை |
| ராகுகாலம் | : 01.30-03.00 வரை |

சதுர்த்தி விரதம்

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா 3 நாள்களுக்கு

வலி.வடக்கு,ஜூலை14

கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்வுகள் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டுடன் காலை நிகழ்வுகள் அதிபர் அகிலதாஸ் தலைமையில் செல்லையா அரங்கில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் பிரதேச சபை செயலாளர் பா. செந்தில் நந்தனன், கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியமும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வரவேற்புரையை பிரதி அதிபர் க.வேலாயுதமும் நினைவுரையை திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியமும் வழங்கவுள்ளார்கள்.

நூற்றாண்டு மலரை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பேராசிரியர் க.தேவராஜா வெளியிட்டு வைக்க மாணிக்கம் சுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார்.

நூற்றாண்டு விழா நூல் மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி நிகழ்த்தவுள்ளார்.

மாலை நிகழ்வுகள் 5 மணிக்கு திருமதி சுகிர்தலட்சுமி சுப் பிரமணியம் தலைமையில் கார்த்தி கேசு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவனும் தொழில் அதிபருமான கா.வை.சற்குணமும் சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையின் பொருளாளர் எஸ்.குகனேந்திரன், முன்னாள் பிரதி அதிபர் ப.ஜெகநாதன், முன்னாள் ஆசிரியர் கு.பாலயோகன், இலங்கை வங்கி யாழ்.கிளை உதவி முகாமையாளர் த.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை கல்லூரி மேற்பார்வையாளர் திருமதி ரதிசந்திரநாதனும் நினைவுரையை செங்குந்த இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி எல்.விசுவலிங்கமும் நிகழ்த்துவர்.

மாலை கலை நிகழ்வுகளில் நடன நிகழ்வுகள், குரு இசை, காத்தவராயன் சிந்து நடைக்கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளன. (50-201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வு கண்டு உவகை கொள்கின்றோம்

எமது கல்லூரியில் சிறந்த சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகைகள் அதிபர் தரம் II பெற்று தம்பணி தொடரும்வேளை இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்



திரு வ.நந்தீஸ்வரன்
(B.B.A. (Hons) Dip.in Edu. M.Ed)
அதிபர்
ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை.



திரு இ.கணேசானந்தன்
(BCom, Dip.in Edu)
அதிபர்
தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை

ஆசிரியர் கழகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
சுன்னாகம்.

(100566)



## பதவி வெற்றிடம்

கட்டட நிர்மாண வேலைகள், நீர்க்கசிவு, வெப்பத்தடுப்பு சம்பந்தமான பொருள்கள் சந்தைப்படுத்தும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளில் வெற்றிடம் உள்ளது.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்.
   ( NCT or அதற்குச் சமனான தகைமை உடையோர்)
2. கட்டடப் பொருள் விற்பனையாளர்
   (Advance Level, ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.)

தகுதி உடையோர் 17.07.2010 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரைக்குள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

**SARUKAYA CONSTRUCTION**
**No.70/1, Palaly Road,**
**Iluppaiyady Junction, Jaffna.**
**T.P: 077 0280236, 077 3880590**

(100609)


## *University of Jaffna, Sri Lanka.*
## *Faculty of Arts.*

### FIRST EXAMINATION IN FINE ARTS & ARTS – 2009 (FIRST SEMESTER)

***Postponement of Examination***
***Course Units: English and Social Harmony***

The Examinations for above Course Units which are scheduled to be held on 17th July 2010 is postponed to 24th July, 2010 (Saturday) due to Mahapola Ceremony.

There is no change in the time table for 18th July 2010. Candidates are requested to note the Change of date.

Registrar. *University of Jaffna,* *Jaffna.* 2010.07.13.

### தொட்டிக்குள் வீழ்ந்து குழந்தை மரணம்

தண்ணீர் நிரப்பியிருந்த தொட்டிக்குள் தவறி வீழ்ந்து ஒன்றரை வயது ஆண் குழந்தை மரணமானது.

நேற்றுமுன்தினம் மாலை கெற்பேலி மேற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகரன் சுதர்சன் எனும் குழந்தையே உயிரிழந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

இந்த மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர் வரும் 26 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொடிகாமம் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி இ.தவமலருக்கு நீதிவான் ஏ.எம்.எம். ரியாஸ் உத்தரவிட்டார். (ஒ-207)

### குடும்பஸ்தர் மரணம்

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் நேற்று மரணமானார்.

எழுதுமட்டுவாழ் தெற்கிலிருந்து இடம் பெயர்ந்து வரணி, குடமியனில் வசித்து வந்தவரான முருகேசு ஜெயம் (வயது 55) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-207)


## வேலை வாய்ப்பு

E.M.I நிறுவனத்தில் வேலைவாய்ப்பு.
அடிப்படைச் சம்பளம் 6000/- வழங்கப்படும்.
4 மாதப் பயிற்சி. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 5263585, 078 3033783, 077 6125911



## கிருஸ்ணா திருமண சேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் 1975 ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரம் 35 1/3 பாவம் உள்ள பெண்ணிற்கு அரச துறையிலோ தனியார் துறையிலோ வேலை பார்க்கும் மணமகன் தேவை. 1973 - D.S கண்டாவளை, 1978 - BANK வேலை இவர்களுக்கு அழகிய பெண்கள் தேவை. இன்னும் உள்ளூர், வெளியூர் குறிப்புக்கள் இருக்கின்றது.

செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212229032


## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

மேற்படி திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப் படவுள்ள பின்வரும் வீதி வேலைக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01. | மறவன்புலவு வீதி 1 கி.மீ | M6/C7 (பெருந்தெருக்கள்) | 1,000.00 | 70,000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

1. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. **ICTAD** வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
3. மோசடியான் அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததினால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் கீழ் விளங்கக் கூடாது.
4. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் மு.ப. 8.30 இல் இருந்து பி.ப. 4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்
6. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 15.07.2010 முதல் 28.07.2010 வரை வேலை நாள்களில் மு.ப. 9 மணியில் இருந்து பி.ப. 3 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.
7. அந்தந்த வேலைக்குரிய பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 29.07.2010 மு.ப 10.30 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் மாவட்டச் செயலகத்தில் வைத்துத் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
8. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கோள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பேற்க மாட்டார்.

திரு கே.கணேஸ்
தலைவர், மாவட்ட கேள்விச் சபை.

(சி/569233)

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), துணுக்காய்
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள். இதற்கு அமைய முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.08.09 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்வுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் திகதி 24.07.2010 சனிக்கிழமை மு.ப. 9 மணி**

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களும் தவிசாளர் பெயர்களும்:**

| கிளையின் பெயர் | கிளை இல. | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| துணுக்காய் | 01 | திரு இ. புவன்ராஜ் | துணுக்காய் அ.த.க. பாடசாலை |
| கல்விளான் | 02 | செல்வி க.கலைவாணி | கல்விளான் அ.த.க. பாடசாலை |
| கொத்தம்பியாகுளம் | 03 | செல்வி இ.சுகிர்தா | கொத்தம்பியா குள கிளைக் கட்டடம் |
| திருநகர் (யோகபுரம் 2.4) | 04 | திரு க.சிறிகரன் | திருநகர் கிளைக் கட்டடம் |
| பாரதி நகர் (யோகபுரம் 1.5) | 05 | திரு வி.பாலசுந்தரம் | பாரதிநகர் கிளைக் கட்டடம் |
| புத்துவெட்டுவான் | 06 | திரு ஆர்.தனுசன் | புத்துவெட்டுவான் கிளைக் கட்டடம் |
| தென்னியன்குளம் | 08 | திரு எஸ்.சுரேந்திரா | தென்னியன் குள பொதுநோக்கு மண்டபம் |
| புகளேந்தி நகர் 1.9 | 09 | திரு வி.முகுந்தன் | புகளேந்தி நகர் கிளைக்கட்டடம் |
| கோட்டைகட்டியகுளம் | 10 | திரு பி.பிரதீப் | கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை |
| பழைய முறிகண்டி | 11 | திரு ஜெ.சதீஸ் | ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை |
| அமைதிபுரம் | 12 | திரு ச.அருள்நாதன் | ஆரோக்கியபுரம் கிளைக் கட்டடம் |
| ஸ்ரீமுருகன் | 13 | திரு பெ.பவளராஜ் | ஸ்ரீமுருகன் கிளைக் கட்டடம் |
| அணிஞ்சயன்குளம் | 14 | திரு க.சசிகரன் | அணிஞ்சயன் குளம் கிளைக் கட்டடம் |
| தேறாங்கண்டல் | 15 | திருமதி உ.சுபாசினி | தேறாங்கண்டல் கிளைக் கட்டடம் |
| ஐயன்கன்குளம் | 16 | திரு கோ.தங்கேஸ்வரன் | ஐயங்கன் குளம் அ.த.க.பாடசாலை |
| அம்பலப் பெருமாள்குளம் | 17 | திரு அ.சிங்கநாயகம் | கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
மணற்குடியிருப்பு.
முல்லைத்தீவு.

எஸ்.தவராஜா
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.
முல்லைத்தீவு.

(100608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை முனை வரையான வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப் படையினர் அனுமதி

## பண்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள்

கொழும்புத்துறை,ஜூலை14

அதியுயர் பாதுகாப்பு வலயமாகவிருந்த அரியாலை கிழக்கு பூம்புகார் முதல் அரியாலை முனை வரையான வயல் நிலங்களில், நெற்செய்கையை மேற்கொள்ள படைத்தரப்பினர் 15 வருடங்களின் பின்னர் அனுமதி அளித்துள்ளதாக அரியாலை கமத்தொழில் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இப்பகுதியில் 200க்கு மேற்பட்ட ஏக்கர் நெற்காணிகள் இருக்கின்ற போதிலும் தற்போது பெரிய வெளிப் பகுதியில் இனங்காணப்பட்ட 30 ஏக்கர் நெல்வயல்களை 60 விவசாயிகள் இணைந்து எதிர் வரும் பெரும்போகச் செய்கையை மேற்கொள்ளவுள்ளதாக சம்மேளனத் தலைவர் த.சபாரட்ணம் தெரிவித்தார். இப்பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் பெருமளவில் காணப்படுவதால் குறிப்பிட்ட வயற்பகுதியைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காரை முனைகளிலிருந்து அரியாலை முனைவரையான வயல் நிலங்களில் கடல்நீர் உட்புகுந்தமையால் உவர்த்தன்மை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் கடற்கரையை அண்டி பாதுகாப்பு அரண்கள் அமைக்கப் பட்டமையால் ஏற்பட்ட நில அமைப்பு மாற்றங்களால் கடல்நீர் உட்புகுந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அரியாலைப் பகுதியில் பெரும்பாலன வயல் நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து வயல் நிலங்களைப் பண்படுத்துவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த மழையை அடுத்து பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் நடவடிக்கையாக சீரழிந்த வரம்புகளை புனரமைப்பதிலும் நிலங்களின் பற்றைகளை அகற்றி உழுது பண்படுத்துவதிலும் மக்கள் ஆர்வம் காட்டுவதைக் காணமுடிகிறது.

அரியாலை கொட்டுக்கிணற்றடிப் பகுதி, நாவலடி, கட்டடி, இறக்கத்தடி, பெரிய வெளி, பூம்புகார், மற்றும் செம்மணிப் பகுதிகளில் உள்ள வயற் காணிகளே இவ்வாறு பெரும்போக விதைப்புக்குத் தயாராகி வருகின்றன. வயல் வேலைகளில் ஈடுபடுவோர் காலையில் வயற்பகுதிகளுக்குச் சென்று மாலையில் திரும்பிவிட வேண்டும். இரவில் தங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(50-135)

# சிவில் அமைப்புக்களின் ஒன்றிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் சிவில் சமூகங்களின் ஒன்றிணைப்புக் கூட்டமொன்றுக்கு ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் 657/1, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகத்தில் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்தக் கூட்டம் ஆரம்பமாகும். இதன் முக்கிய நோக்கங்களாக சிவில் சமூகங்களினதும், ஆணைக்குழுவினதும் தொடர்புகளை அதிகரிப்பதும், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான ஒரு வலையமைப்பை இந்தப் பிரதேசத்தில் நிறுவுவதுமேயென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)




# வீதிப் பெயர்களில் தமிழ்க்கொலை மாநகரசபை கண்டுகொள்ளவில்லையா?

நல்லூர்,ஜூலை14




குடாநாட்டில் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்கப் போட்டி போட்டுவரும் வர்த்தக நிறுவனங்கள் தமது விளம்பரத்திற்காக வீதிகளின் பெயர்களை ஆங்காங்கே வைத்து தமிழ்க்கொலை செய்வதை இப்போது சர்வசாதாரணமாகக் காணக் முடிகிறது.




ஏற்கனவே சில வீதிகளின் பெயர்ப் பலகைகளில் காணப்பட்ட தமிழ்க் கொலைகள் குறித்து பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் தற்சமயம் நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் பொருத்தியுள்ள பலகையிலும் மணிக்கூட்டு வீதியில் பொருத்தியுள்ள பலகையிலும் காணப்படும் தமிழ்க் கொலைகளையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

பெயர்ப்பலகைகளை நாட்ட விரும்பும் நிறுவனங்கள் தயாரித்துள்ள குறிப்பிட்ட பலகைகளை மாநகரசபை பார்வையிட்ட பின்னரே அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-111)

# மாநகரசபையின் அதிரடியால் மருதடிக்குளம் சுத்தமானது

கைதடி,ஜூலை14



யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு முன்னால் குளத்தில் தேங்கிக் கிடந்த கழிவுகள் யாழ்.மாநகர சபையின் அதிரடி நடவடிக்கையால் அகற்றப்பட்டுள்ளன.

மேற்படி குளத்தில் இருந்த கழிவுகள் யாவற்றையும் அகற்றி மாணவரின் நலனில் உடனடி அக்கறை எடுத்திருப்பதனை பாடசாலை சமூகமும், பெற்றோர்களும் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

குளத்தில் கழிவுகள் தேங்கியுள்ளமையால் மாணவருக்கு டெங்கு பரவும் அபாயம் உள்ளதாகக் கடந்த மாதம் 29ஆம் திகதி உதயன் சுட்டிக் காட்டியிருந்தான். இதனையடுத்து மாநகரசபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

யாழ்.மாநகரசபைபோல் ஏனைய அரச திணைக்களங்களும் இவ்வாறு உடனடிச் செயற்பாட்டில் ஈடுபடுமேயானால் குடாநாடு விரைவில் அழகு பெறவும் வளம்பெறவும் வாய்ப்புள்ளது எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (50-288)

# நெருப்புக் காய்ச்சலுக்கான தடை மருந்தேற்றல்

உடுவில்,ஜூலை14

நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடைமருந்து உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வழங்கப்படவுள்ளதாக உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.ஜெயகுமரன் அறிவித்துள்ளார்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உணவு தயாரிப்பாளர்கள், உணவு கையாளுபவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களுக்கே இந்தத் தடை மருந்து வழங்கப்படவுள்ளது.

எனவே மேலே குறிப்பிட்ட தொடர்புடைய ஆள்களை வேலைக்கு வைத்துள்ள (உணவுச் சாலைகள், தேநீர்க் கடைகள், வெதுப்பகங்கள், விடுதிகளில் உணவு தயாரிப்பவர்கள்) நிறுவனங்கள் தங்கள் பகுதி பொது சுகாதார பரிசோதகர் அல்லது உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (க)

# அதிபுகை கக்கினால் தண்டம்; நோயாளி வாகனங்கள் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.குடாநாட்டில் புகை கக்கியபடி பயணம் செய்யும் வாகனங்கள் மீது போக்குவரத்து பொலிஸார் கடும் நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

சன நடமாட்டம் அதிகமாகவுள்ள வீதிகளில் பயணிக்கும் சில வாகனங்கள் அதிகளவிலான புகையைக் கக்கியபடி செல்கின்றன.

புகை அதிகளவில் வெளியே செல்வதால் வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள் தள்ளப் பட்டுள்ளனர். அத்துடன் சூழலும் மாசடைகின்றது.

சில வேளைகளில் இத்தகைய வாகனங்களால் வெளியேறும் புகை வீதியையே மறைப்பதால் விபத்துக்களும் ஏற்படக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகளவில் புகையைக் கக்கிச் செல்லும் நோயாளி வாகனங்கள், பொலிஸாரினால் வீதிகளில் மறிக்கப்பட்டு தண்டப் பணம் விதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (எ-224)

# வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

பாஷையூர் மீன் சந்தையின் உள்ளக வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பலவருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த சந்தையில் உள்ள வீதி தற்போது தார் ஊற்றிச் சீர் செய்யப்பட்டிருப்பதால் இதனைப் பயன் படுத்துவோருக்கு இதுநாள்வரையும் இருந்த சிரமங்கள் நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-224)

# நெரிசலால் திணறும் வீதி!

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.நகரில் சத்திரச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ்.வீதி வாகன நெரிசலால் திணறி வருகின்றது.

இந்தப் பகுதியில் அதிகளவிலான வாகனங்கள் வீதியோரமாக நிறுத்தி வைக்கப் படுவதாலேயே வாகன நெரிசல் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதனை விட வீதியோரத்தில் சிலர் பொருள் களை வைத்து விற்பனை செய்தும் வருகின்றனர்.

இதனால் மக்கள் கூட்டமாக நின்று பொருள்களைக் கொள்வனவு செய்தும் வருவதாலும் நெரிசல் நிலை மேலும் அதிகரிக்கிறது. (எ-224)


# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மாநகரசபையின் வேலத்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ்ப் பாண மாநகரசபையால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன்பிரகாரம் முதல் நாளாகிய நேற்று முன்தினம் சுகாதாரப் பகுதிக்கான பல வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாம் நாளான நேற்று கல்வி, நூல் நிலைய, விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்று மூன்றாம் நாள் நிகழ்வாக சுற்றாடல் தின வேலைத்திட்டங்களும், நாளை வீதி வேலைப்பகுதி வேலைத் திட்டங்களும் நிறைவேற்றப்படும். அத்துடன் நாளை மறுதினம் வேலைப்பகுதி, நீர்வேலைப்பகுதி வேலைத்திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்படும். இறுதியாக ஆறாம் நாளாகிய 17ஆம் திகதி மக்கள் பயன்பாட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (க)



கால்நடை அபிவிருத்திப் பிரதி அமைச்சர் ஏச்.ஆர்.மித்திரபால நேற்று வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார உற்பத்தித் திணைக்களத்துக்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில், கால்நடை அபிவிருத்தி அமைச்சின் வடமாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சிவநாதன், பிரதி அமைச்சருக்கு மாலை அணிவித்து வரவேற்பதை முதல் படத்திலும், திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் வடமாகாணப் பணிப்பாளர் டாக்டர் சிவநாதன், பிரதி அமைச்சர் ஏச்.ஆர்.மித்திரபால, கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் டாக்டர் குமார் டி.சில்வா, இணைப்புச் செயலாளர் பி.எம்.ஹேமச்சந்திரா உள்ளிட்டோர் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச மட்ட கால்நடை உற்பத்தி சுகாதார நிலையங்களின் அதிகாரிகளில் ஒரு பகுதியினரை மூன்றாம் படத்திலும், பிரதி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வடமாகாண செயற்கை முறைச் சினைப்படுத்தல் திணைக்களத்துக்குச் சென்று பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:- உமா, பாலினி, கலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூலை 14

யாழ். மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மாவட்ட ஆங்கில தினப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கான உரையாடல் நாடகம் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளை உரிய நேரத்திற்குப் போட்டி நடைபெறும் இடத்திற்குச் சமுக மளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (50-86)

* * *

வடமராட்சி,ஜூலை14

கெருடாவில் பரந்தாமன் திறந்த பாட சாலையின் ஆரம்ப நிகழ்வு நாளை வியா ழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்த பாடசாலையின் இணைப்பாளரும் அதிபருமான சே.அருந்தவ ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்வார். வடமராட்சி வலயத்தில் ஆரம்பிக்கப்படும் 4 திறந்த பாடசாலை களில் முதலாவது பாடசாலை இதுவாகும். மேற்படி பாடசா லையில் கல்வி கற்பதற்காக 60 மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை ஏனைய மூன்று திறந்த பாடசாலைகளும் கற்கோவளம் புனிதநகர், குடத்தனை, அம்பன் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (50-201-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூ.சங்கங்களின் சமாசத்தின் சங்கானை பிராந்திய சபையின் 88 ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தின விழா எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு மூளாய் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கணேச வாசிகசாலை கேட்போர்கூடத்தில் சபைத் தலைவர் ஜே.பி.வி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.ஜே.அருந்தவநாதனும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி.சிவகுமார், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் செ.இலகுநாதன், மேற்படி சமாசத்தின் மாவட்டச் செயலாளர் சு.நகு லேஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் க.கமலநாதன், வட்டு. மத்திய கல்லூரி அதிபர் நா.சபாரத்தினசிங்கி, வட்டு தெற்கு கிராம அலுவலர் என்.சிவபாலன், சங்கானை ப.நோ.கூ.ச. பணிப்பாளர் சி.தவ ராசா, சங்கானை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க உப தலைவர் சீ.விக்னேஸ் வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (50-201)

* * *

கோப்பாய்,ஜூலை 14

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசில் தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாட சாலை முதல்வர் சி.திரிகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் பொறியியலாளருமான சி.ஆதவன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் து.துசியந்தனும், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசி ரியர் வை.சிவலிங்கனும் கலந்துகொள் வர். (50-204-72)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 14

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களின் ஆரம்பக் கல்வி செயன்முறைக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக் கம் பிற்பகல் 3 மணிவரை பாடசாலை மண்டபத்தில் அதிபர் சூ.நோபேட் உதய குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் கலந்துகொள்வார். (201)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 14

அகில இலங்கை திருமுறை மன்றத் தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி ஆலயத்தில் நடைபெறும் ஆலய பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகப் பாடல்கள் பாராய ணம் இடம்பெறவுள்ளது. (50-201)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை14

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் மாணிக்கவாசகர் குருபூசை தினம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயிலில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் 'அமுதடி அடைந்த அன்பர்' என்னும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்துவுள்ளார். (50-204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

மட்டுவில் கமலாச்னி வித்தியாலயத் தில் மாணிக்கவாசகர் குருபூசைத் தின விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் செ.பேரின்பநாதன் தலை மையில் வித்தியாலய சுப் பையா கலைய ரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப் பாளர் (அழகியல்) கோ.கைலாச நாதன் கலந்துகொள்வார். இந்நிகழ்வில் 'திருவாச கத்தேன்' என்னும் தலைப்பில் ஆசிரியர் த.நாகேஸ்வரன் சிறப்புச்சொற்பொழி வாற்றுவார். (50-201)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை 14

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.பிராந் திய நிலையதில் விண்ணப்பப் படிவங் களைப் பெற்று பூர்த்தி செய்து யாழ்.பிராந் திய [illegible] [illegible] (50-201)


# தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல:1591 06.03.1972

சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் 2010 ஜூலை மாதம் நடைபெறவுள்ளது. கிளைகளின் வாக்காளர் இடாப்பு 30.06.2010ஆம் திகதியுடன் முடிவுறுத்தி காட்சிப் படுத்தப்பட்டு உள்ளது. அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து வேறு தொழில் பிரதேசத்தில் உள்ளமையால் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் அங்கத்து வத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.
17.07.2010

மு.தவபாலன்
செயலாளர்.

(சி/569230)






உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 663 திகதி 12-07-2010

வெற்றி எண்கள்

19 29 44 53 Y (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 26,655,250/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 26,655,250/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 27 | 2,000/= | 54,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 383 | 1,000/= | 383,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 681 | 1,000/= | 681,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16263 | 60/= | 975,780/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7946 | 40/= | 317,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 191748 | 20/= | 3,834,960/= |
| | | மொத்தம் ரூ. | 7,046,580/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 600180873-6-46 |
| கம்பஹா | 600194550-5-35 |
| மட்டக்களப்பு | 600190391-8-48 |
| யாழ்ப்பாணம் | 600183445-8-28 |
| இரத்தினபுரி | 600188823-7-17 |
| கண்டி | 600181839-2-02 |
| கொழும்பு | 600194293-7-37 |
| கொழும்பு | 600190168-5-25 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,446,580/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 27,175,090/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்

2010 ஜூலை 15 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



# தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல:J/1591 06.03.1972

## பதவி வெற்றிடம்

1. பதவி: அலுவல்கள் அலுவலக உதவியாளர்
2. சம்பள குறியீட்டு இலக்கம்: 317/15
3. சம்பள அளவுத்திட்டம் : 9450-75 x 10-80 x 10-11000 (சங்கம் வழங்கும் இதர படிகளும்)
4. தகைமைகள்:
   (அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் ஒருவருட அனுபவத்துடன் 5ஆம்வகுப்புச் சித்தி.
   அல்லது
   (ஆ) 8 ஆம் வகுப்புச் சித்தி
5. வயது: 18-45

* சங்கம் கோரும் பிணையை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
* சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* விண்ணப்பப் படிவத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் போட்டோப் பிரதி இணைத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்படிவங்கள் யாவும் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 29.07.2010 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
* கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "அலுவலக அலுவல்கள் உதவியாளர் 317/15 பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.
* பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதியில்லாத விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம். (சி/569229) பொது முகாமையாளர்.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 1949.05.24
மறைவு : 2007.06.18

அமரர்
தில்லையம்பலம்
கந்தசாமி

(முன்னாள் காசாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.ச)

திதி: திருதியை

எமது குடும்பத்தை நல்வழிப்படுத்தி எமக்கு நற்கல்வி ஊட்டி சீருடனும் சிறப்புடனும் வாழவைத்த எம் தெய்வத்தை வணங்குகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரிய அரசடி,
கண்டி வீதி,
சாவகச்சேரி. (100541)

குடும்பத்தினர்
கந்தசாமி
அறக்கொடை நிதியம் (KCT)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி காமிலா பரணிதரன் அவர்களின் அன்புத் தந்தை

### வேலாயுதபிள்ளை அம்பிகைபாலன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர். (சி/569225)

நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

## இதய அஞ்சலி



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்ப நல மருத்துவமாதுவாக சேவை புரிந்து வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் 10.07.2010 அன்று அகால மரணமடைந்த குடும்ப நல மருத்துவமாது

செல்வி

### சரவணை தர்சிகா

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(சி/569226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பநல மருத்துவ மாது தர்சிகாவின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாகக் குடும்பநல மருத்துவ மாதுக்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

குடும்பநல மருத்துவ மாதுக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை முதலாவது படத்திலும், மரணமான சரவணை தர்சிகாவிற்கு மௌன அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும், குடும்பநல மருத்துவமாது ஒருவர் கண்ணீர் மல்கியபடி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் தமது நியாயத்தை எடுத்துக் கூறுவதை மூன்றாவது படத்திலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் கையளிக்கப்பட்ட மகஜரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வாசிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன், உமா, டிலீப், தமிழினியன்)

### தர்சிகாவின் மரண விசாரணையை துரிதப்படுத்தக் கோரி

# சுகாதார சேவைகள் அலுவலக வாயிலை மூடி மருத்துவ மாதுக்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக நேற்று செவ்வாய்க் கிழமை காலை 7 மணி முதல் குடும்ப நல மருத்துவ மாதுக்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டார்கள்.

வேலணையில் கடமை நேரத்தில் மரணமான குடும்பநல மாது தர்சிகாவின் மரணம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரிய பதிலை முன்வைக்க வேண்டும் என்றும், குடும்பநல மருத்துவ மாதுக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக காலை 7 மணிக்கு ஒன்று கூடிய குடும்பநல மருத்துவ மாதுக்கள் பணிமனையின் பிரதான வாயில்களைப் பூட்டி அலுவலர்கள் எவரையும் உள்ளே செல்லவிடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவருமே கறுப்புப்பட்டி அணிந்திருந்ததுடன், கறுப்புக் கொடிகளை ஏந்தியுமிருந்தனர். தர்சிகாவின் மரணத்துக்கு நீதி கேட்டு உரத்த குரலில் ஒன்றிணைந்து கோஷம் இட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் ''வேலியே பயிரை மேயுதே யார் கேட்பார்'', தாய் மரணத்திற்கு விசாரணை செய்யும் மேலதிகாரியே எம் மர ணத்திற்கு எங்கே விசாரணை'', ''தலைமையே மௌனம் ஏன்''?, தற்கொலையர்யின் அதன் காரணத்தைக் கண்டு பிடி'' என்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகள் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பரித்தனர். அத்துடன் இங்கு உரையாற்றிய யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் ஜி.சதீஸ் தனது உரையில்,

வேலணையில் கடமை நேரத்தில் மரணமான குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் இறுதிச் சடங்கின்போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த எவரும் ஏன் பங்குபற்றவில்லை எனவும் பணிமனையின் சார்பில் கறுப்புக்கொடியோ அல்லது அஞ்சலிப் பிரசுரமோ ஏன் வெளியிடவும் இல்லை எனவும் கேள்வியெழுப்பினார். அத்துடன், ஏனைய இடங்களில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் நாம் எமது பிராந்திய மக்களின் நன்மை கருதி எவ்வித போராட்டமும் இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆனால் எமது சக தொழிற்சங்க உறுப்பினர் மரணத்தின் போது நாம் மௌனமாக இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இப்போராட்டம் காரணமாக 110 அவசர அம்புலன்ஸ் சேவையும் இடம்பெறவில்லை. ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை பிரதான வீதிக்கு வரவேண்டாம் என்று கூறியதுடன், அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அலுவலகத்துக்குள் செல்ல முயன்றபோது அவரை செல்லவிடாமல் தடுத்துக் கோஷங்கள் எழுப்பினர். பின்னர் குடும்பநல மருத்துவமாதுக்கள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் கண்ணீர் மல்க தமது கோரிக்கையை முன்வைத்தார்கள்.

(50-224-4)

## புதிய திட்டம்

கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களை இலகுவில் பெற்றோர்கள் இனங்கண்டு கொள்வதற்கு புதிய திட்டம் ஒன்றை யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை மேற்கொண்டுள்ளது.

ஆசிரியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அவர்களின் புகைப்படம் அவரவர் வகுப்பறைக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் மாணவர்களில் பெற்றோர்கள் ஆசிரியர்களை இலகுவாக அறிந்து கொண்டு அவர்களுடன் தமது பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகத் தொடர்புகொள்ள முடியும் என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்தனர். (எ-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# 'கண்ணகி புரம்' வானொலி நாடகம் நூறாவது பகுதியில் நுழைகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கை தேசிய வானொலிகளில் ஒலிபரப்பப்படுகின்ற 'கண்ணகிபுரம்' எனும் தொடர் நாடகம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது தொடரில் நூறாவது பகுதியில் காலடி வைக்கிறது.

'கண்ணகி புரம்' தொடர்நாடகம் தமிழ்; சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் கடந்த 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஒலிபரப்பாகத் தொடங்கியது. இத்தொடர் 11 அலைவரிசைகளில் தேசிய மற்றும் பிராந்திய வானொலி சேவைகளில் ஒரே நேரத்தில் ஒலிபரப்பப்படுகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை, யாழ்.எவ்.எம்., பிறை எவ்.எம் ஆகியவற்றிலும் சிங்கள வானொலி சேவைகளில் மாலை 6.45 மணிக்கும் தென்றலில் மாலை 5.45 மணிக்கும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒலிபரப்பப்படுகின்றது.

இந்த நாடகத்தின் 100ஆவது தொடர் ஒலிபரப்பப்படுவதையிட்டு எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறை எவ்.எம். மற்றும் யாழ்.எவ்.எம்.ஆகியவற்றில் மாலை 6.30 மணிக்கும் தமிழ் வர்த்தக சேவை மற்றும் தென்றலிலும் மாலை 5.30 மணிக்கும் விசேட வானொலி நிகழ்வொன்று ஒலிபரப்பப்படவுள்ளது.

மேலும் இந்த நாடகத்தில் இதுவரை ஒலிபரப்பப்பட்ட பகுதிகளை www.kannagipuram.com என்ற இணையதள முகவரியில் பார்வையிட முடியும். (எ-16)

# களை கட்டுகிறது சவாரிச் 'சீசன்'

யாழ்ப்பாணம், ஜூலை14

நீர்வேலிச் சவாரித் திடலில் மாட்டுவண்டிச் சவாரிச் 'சீசன்'களை கட்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் தற்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நீர்வேலித் திடலில் நடைபெற்று வருகின்றன.

சவாரிப் போட்டியில் பங்குபற்றுவதற்காக வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து காளை மாடுகள் பெருமளவில் கொண்டு வரப்படுகின்றன.

மாட்டு வண்டிச் சவாரியைப் பார்க்க வரும் மக்களின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. (எ-224)

# யாழ்.நகரப் பகுதியில் பொலிஸார் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில்

நல்லூர், ஜூலை14

யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் பொலிஸாரின் பாதுக்காப்புப் பணிகள் தற்போது தொடர்ச்சியாக 24 மணிநேரமும் இடம்பெற்று வருகின்றன.

வீதிகளில் இரவு ரோந்துக் கடமையிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுவோரை பொலிஸார் வழிமறித்து விசாரணைகளை மேற்கொள்வதோடு சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாரின் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையால் நகரில் திருட்டு மற்றும் குற்றச் செயல்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று நல்லூர், கோப்பாய் பகுதிகளிலும் பொலிஸார் இரவு வேளைகளில் வீதிகள் மற்றும் முக்கிய சந்திகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-244)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்.பருத்தித்துறைப் பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக உயரமுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-201)

# 'கால் நடைகளைக் கட்டிவையுங்கள்' கோப்பாய் விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 14

நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேசங்களில் மக்கள் தமது வளர்ப்புக் கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும்.

பிரதேச விவசாயிகள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பகுதிகளில் உள்ள தோட்டக்காணிகளில் வெங்காயம், மரவள்ளி, மரக்கறி போன்றன பயிரிடப்பட்டுள்ளன.

சிலர் தமது வளர்ப்புக் கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கட்டாக்காலிகள் போல அவிழ்த்து விடுவதால் அவை இந்தப் பயிர்களை ஒருகை பார்த்துவிட்டே அழித்து விட்டுச் செல்கின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் தமது வளர்ப்புக் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் கோரியுள்ளனர். (எ-224)

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் தினப் பரிசளிப்பு வைபவங்கள்

சுழிபுரம், ஜூலை 14

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நிறுவுநர் தின, பரிசளிப்பு வைபவங்கள் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2 மணியளவில் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி து.எங்கரசுவும் கலந்துகொள்வர். நிறுவுநர் தின உரையை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபருமான ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். (க)

## பாதீனியத்துக்குக் கொள்ளி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

கோப்பாய்ப் பகுதியில் பெருகிக் காணப்பட்ட பாதீனியச் செடிகள் இலகுவேலைத் திட்டத்தின் மூலம் பிடுங்கி அழிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் இராச வீதியில் அடர்ந்து வளர்ந்திருந்த பாதீனியச் செடிகளை இவ்வாறு பிடுங்கித் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன. (எ-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் விலை போகாத அமிர்

**தமிழரசுக் கட்சியின் முன்னாள் செயலதிபர், காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் 21ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.**


முன்னணியில் தமிழரசுக் கட்சி

தந்தையினதும் அவருடன் இணைந்த தலைவர்களதும் அர்ப்பணிப்பான செயற்பாட்டால் 1956 ஆம் ஆண்டு முதல் வட கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மைக் கட்சியாகத் தமிழரசுக்கட்சி முதல்நிலை பெற்றது. இதனால் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்குரிய உரிமை இவர்களுக்குக் கிடைத்தது. இதனால் விரும்பியோ விரும்பாமலோ மாறி மாறி வந்த அரசுகள் தமிழரசுக்கட்சியுடன் உடன் பாட்டுக்கு வருவது தவிர்க்கமுடியாத நிகழ்வாயிற்று. இப்பின்னணியிற்றான் 1957இல் பண்டா - செல்வா ஒப்பந்தமும், 1965இல் டட்லி - செல்வா ஒப்பந்தமும் உருவாகின. இவ்வொப்பந்தங்களை அன்றைய அரசுகள் அமுல் நடத்தாவிட்டாலும் தமிழர் பக்கக் கோரிக்கையின் அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கி இவை காணப்பட்டதுமன்றிப் பின் வந்த ஒப்பந்தங்களுக்கும் முன்னோடியாக அமைந்ததோடு தமிழர் பக்க நியாயங்களையும் பிரதிபலிப்பனவாகவும் இவை அமைந்தன. ஒற்றுமையின் அடிப்படையில் தமிழ்க் காங்கிரசுடன் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகத் தலைவர் அமிர்தலிங்கம் திகழ்ந்ததோடு, நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இவரைச் சென்றடைந்தது. அப்போது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இவர் ஆற்றிய உரைகள் அரசினால் கொண்டுவரப்பட்ட மசோதாக்கள் மீது இவர் ஆற்றிய உரைகள் இவரை ஒரு முதிர்ச்சியான அரசியல் வாதியாக உயர்த்திவிட்டது.

1983 இல் ஏற்பட்ட இனக்கலவரமும், தமிழர் விடுதலைக்கூட்டணிப் நாடாளுமன்ற உறுப்பினர்களது நாடாளுமன்றப் பதவி புதிதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்ட தனிநாட்டுக் கொள்கைக்கெதிரான சட்டமூலத்தின் மூலம் பறிபோனது. இக்காலத்தில் இந்தியாவுடன் நெருங்கி உறவாடவேண்டிய கட்டாயமிருந்தது. மாறுவேடத்தில் இலங்கையை விட்டு புதுடில்லி சென்ற தலைவர் அமிர்தலிங்கத்தினதும் அன்றைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தியினதும் சந்திப்பு தமிழர் பிரச்சினையில் ஒரு திருப்புமுனையாகின்றது. இரண்டே இரண்டு மணித்தியாலங்களில் ஈழத்தமிழர் பிரச்சினையையும் அவலங்களையும் 'அமிர்' தமது ஆங்கிலப் புலமையால் இந்தியப் பிரதமருக்கு விளக்கியபோது அவர் இவரது திறமையால் பெரிதும் கவரப்பட்டார். தமிழ்நாட்டவரோடு மட்டும் பேசிப்பழகிய அம்மையாருக்கு ஈழத்திலும் இப்படிப்பட்ட தலைவர் ஒருவர் இருப்பதைக்கண்டு பிரமித்ததோடு அடுத்த நாள் புதுடில்லியில் நடைபெற இருந்த இந்தியக் குடியரசு தின விழாவுக்கு வருகை தந்த ரஷ்யத் துணை ஜனாதிபதி போன்ற பிரமுகர்களுக்கும் 'அமிர்' அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டார். இக்காலங்களில் தமிழகத்திலும் இந்தியாவிலும் உள்ள முக்கிய அரசியற்கட்சித் தலைவர்களைச் சந்தித்து எமது பிரச்சனை பற்றி விளக்கியதன் மூலம் இந்தியாவை எமது பிரச்சினையில் அக்கறை கொள்ள வைத்தார். அதுமட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் சென்று எமது பிரச்சினையை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்த பெருமையும் 'அமிருக்கு' உண்டு.

இலங்கை - இந்திய ஒப்பந்தம்

1987இல் உருவாகிய இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு மைறகல்லாகும். முன்னர் இலங்கை அரசுக்குள்ளேதான் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமோ எனில் இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக அமைந்தது மட்டுமன்றி இது ஒரு சர்வதேச ஒப்பந்தமாக இருப்பதால் இலங்கை அரசு இதனை மீறிச் செல்வது மிகமிகக் கடினமாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் முதல் முதலாக வடகிழக்குப் பிரதேசங்கள் வரலாற்று ரீதியாகத் தமிழ்மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை இவ்வொப்பந்தம் அங்கீகரித்தது. இடைக்கால அரசில் மூத்தோரான தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் இளையோரான போராளிக் குழுவினரும் இணைந்து செயற்பட ஒழுங்குகள் காணப்பட்டன. இவ்வொப்பந்தத்தின் பின்னணியைத் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் 'செல்வா ஈட்டிய செல்வம்' என்ற நூலில் மிகவும் கச்சிதமாக விளக்கியுள்ளார். இவ்வொப்பந்தத்தின் செயலாக்கத்திற் போராளிக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும், இந்திய அமைதிப் படையினரின் வருகையும் அதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் இதனைச் செயலிழக்கச் செய்தன. அத்துடன் இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தி யின் படுகொலையும் இந்தியாவை எமது நலனில் அக்கறை காட்டாத விரோதியாக்கி விட்டது.



விடுதலைப் புலிகளதும், ஏனைய போராளிக் குழுக்களதும் பங்களிப்பாலும் எமது பிரச்சினை இன்று சர்வதேசத்தின் கண்களைத் திறந்திருக்கின்றது. எனினும், உள்ளூரில் எமது மக்கள் மத்தியில் கடந்த 30 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கம் பற்றிக் குறிப்பாக அழிவுகள் பற்றி மனக்குமுறல்கள் இருக்கவேதான் செய்கின்றன. இதனால் ஒருவித விரக்தியில் கையறு நிலையும் மக்கள் மனதிற் குடிகொண்டு விட்டது. குறிப்பாக வன்னிப் பிரதேச மக்கள் 'அனாதைகள்' என்ற நிலைக்கு, "இழக்க வேண்டியவற்றை எல்லாம் இழந்த நிலைக்கு" உள்ளாக்கப்பட்டு விட்டனர். இதனால் எமது 60 வருடப் போராட்டத்தில் தமிழரசுக்கட்சி முன்னின்று நடாத்திய முதல் 30வருட காலப் பகுதியைக் காட்டிலும் பிற்பகுதியான 30 வருடத்தில் பேரழிவுகளை எமது இனம் சந்தித்துவிட்டது.

## நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் வாய்ப்பின் மூலம் தமிழர்களின் பிரச்சினையை உலகறிய வைத்தவர்

இளைஞர் கையில் தமிழ்த்தலைமை

இக்காலத்தில் தமிழ் அரசியல் தலைமை மிதவாத அரசியல் தலைவர்கள் கைகளை விட்டு மெல்ல மெல்ல ஆயுதம் தாங்கிய போராளிகளின் கைக்குச் செல்லத் தொடங்கியது. துரதிர்ஷ்ட வசமாக மூத்தோரிடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்று எமது இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்க இருந்த போராளிகளால் இதனைப் பக்குவமாக ஒப்பேற்றிவைக்க முடியவில்லை.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**(சிரேஷ்ட துணைத் தலைவர்**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி)**

இயக்கத்தலைவர்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையின்மை, மூத்த தலைவர்களைப் புறந்தள்ளியமை, தீர்க்கதரிசனமின்மை, உள்ளக, வெளியுலகக் களநிலைகள் பற்றிய தெளிவான விளக்கமின்மை ஆகியன ஒரே அணியில் நின்று இவர்களைச் செயற்படுவதற்கு வழிவிடவில்லை. மிகவும் தீர்க்கதரிசனத்துடனும், கலந்துரையாடல் மூலமும், சர்வதேச நியதிகளைச் சரியாகப் புரிந்துகொண்டும் செயற்பட்டிருந்தால் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் நமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்க முடியும். 1995 இல் சந்திரிகா பண்டாரநாயக்காவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் பரிசீலிக்கத்தக்கது. இவ்வாறே 2004 இல் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையும் தமிழர் தாயகத்திற் பெருமளவு சுயாட்சியையும், மத்தியில் போதிய அதிகாரத் தையும் தந்திருக்கும். எனினும் இவையாவும் தவறவிடப்பட்டு இன்று தமிழரசுக்கட்சியினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரதும், தமிழீழ

தமிழ்க்காங்கிரசும் தமிழரசுக் கட்சியும்

இதனை மனதிற்கொண்டு தான் தமிழரசுக்கட்சியைத் தந்தை செல்வா ஆரம்பித்த போது சாத்வீகமே அதன் இலட்சியமாக இருத்தல் வேண்டும் என வற்புறுத்தினார். 1949இலும் மக்கள் திக்கற்ற நிலையில் தான் காணப்பட்டார்கள். 1947ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்ற கோஷத்துடன் நாடாளுமன்றம் சென்ற தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும், மந்திரிப்பதவிக்காக தமது இலட்சியத்திலிருந்து, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து தடுமாறியபோது காலத்தின் தேவையாக இலங்கைத் தமிழரசுக்கட்சி தோன்றி தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அடிப்படையில், ஒரு பூரண சமஷ்டி அடிப்படையில் நமது பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் எனக்கூறியது. இச்சந்தர்ப்பத்தில் இக்கட்சியைத் தொடக்கி வைத்து 1949இல் தந்தை செல்வா ஆற்றிய உரையின் சில பகுதிகளை இங்கே தருவது பொருத்தமாகும்.

'யாம் கோருவது இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டிற்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள - சமஷ்டி அரசு - இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால், இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகின்றது. ........

எங்களுடைய ஒரே ஒரு நோக்கம் ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும். செய்ய வேண்டிய வேலை எவ்வளவு கஷ்டமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆயினும் அப்பணியைச் செய்துமுடிக்க எம்மால் இயலும். அதைச் செய்தே தீரவேண்டும். எமக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல விஷயங்கள் உள்ளன. யான் முன் குறிப்பிட்டதைப்போல, எமது மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் உறுதியான அரசியற் கொள்கையே எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். யாம் சிறந்த முறையில் - நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால், எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்திற்குக் காரணமாயிருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும்'.

ஆதலால் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இடைநடுவில் மந்திரிப் பதவிக்காகத் தமிழ் மக்களைக் கைவிட்டபோது தந்தை செல்வா தமிழ்மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத்தோன்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தொடங்கி இவ்வுரிமைப்போரை 'அமிர்' போன்ற இளம் தளபதிகளையும் இணைத்து நடாத்திச் சென்றதும் வரலாறு. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் வெற்றிடத்தை இலங்கைத் தமிழரசுக்கட்சி கச்சிதமாக ஒப்பேற்றியதும் வரலாறு.

தார்மீகக் கடமையில்

இவ்வாறே இன்று ஆயுதப்போராட்டம் தோல்வியுற்ற நிலையில் அரசியலில் ஒரு பெரிய வெற்றிடம் காணப்படுகின்றது. இத்தகைய வெற்றிடம் தான் 1949 இலும் காணப்பட்டது. இதனால் அவ்வெற்றிடத்தை எவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி நிரப்பியதோ அதேபோன்று இன்றுள்ள அரசியல் வெற்றிடத்தையும் நிரப்பும் தார்மீகப் பொறுப்பும் கடமையும் தமிழரசுக் கட்சிக்குண்டு. காரணம் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஜனநாயக வழிநின்று 1949இல் இருந்து ஒலித்து வரும் கட்சியும் இதுதான். ஆனால் சூழல் மாற்றத்தால் விரக்தியின் விளிம்பில் நிற்கும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது காலத்தின் தேவையாகிறது. இத்தகைய நம்பிக்கையை சாத்வீகத்திலும், ஜனநாயகக் கட்டமைப்பிலும் நம்பிக்கை கொண்ட தந்தை செல்வா கூறியது போன்று 'நம்பிக்கைக்குரிய ஊழியர்களை' 'நிலைதடுமாறாத தலைவர்களைக்' கட்சி அரவணைத்து மக்கள் முன்செல்வதன் மூலமே சாதிக்க முடியும். எதற்கும் உறுதியான தலைவர்களின் வழிகாட்டல் இதற்கு அவசியம். ஆதலால் அல்லற்பட்டு திக்கற்ற நிலையில் நிற்கும் மக்களுக்கு அறிவூட்டும் கடமை தமிழரசுக் கட்சிக்குண்டு. தமிழரசுக்கட்சித் தலைவர்கள் செய்த தியாகங்களை மக்கள் இன்றும் மறக்கவில்லை. அவர்களை நன்றியுணர்வுடன் நினைவுகூரும் மக்கள் வட கிழக்கு மாகாணங்களில் உளர். தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளின் சின்னமே தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னமாகும். இவ்வீடு தமிழர் தாயகத்தை இணைக்கும் பாலம் மட்டுமன்றி மடிந்த நமது தியாகிகளான தலைவர்களது நினைவுச் சின்னமும் கூட. இதனால் தமிழரசுக்கட்சியும் வீட்டுச்சின்னமும் தமிழரின் உரிமைப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவையாகின்றன.

(முற்றும்)

## பொன்சேகா உட்பட மூவருக்கு எதிராக நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு,ஜூலை14

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, அவரது மருமகன் தனுன திலகரத்ன உட்பட மூவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த தருணத்தில் அவரின் ஆலோசனைக்கு ஏற்ப வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்த ஆயுத தளவாடங்கள் ஊடாக பல கோடி ரூபா மோசடி செய்தனர் என இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 21 குற்றச்சாட்டுக்களைக் கொண்ட மேற்படி குற்றப்பத்திரிக்கை சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் அவசர வழக்கு ஒன்றை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று மாலை சமர்ப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ள குற்றப்பத்திரிகைகளை எதிரிகளுக்கு கையளிப்பதற்காக அவர்களை நீதிமன்றில் ஆயராகுமாறு கொழும்பு நீதிமன்றம் அழைப்பானை இவ்வாரத்துக்குள் அனுப்புவதற்கு உத்தேசித்திருப்பதாக நீதிமன்றப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை14

மாவிட்டபுரம், வீணியவரை இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய அத்திபாரக்கல் நடும் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.15 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (204)

* * *

புலோலி மத்தி அவ்வொல்லைப் பிள்ளையார் கோயிலில் எழுத்தருளியுள்ள காத்தவராயனுக்கான பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை இரவு ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளுடன் நிறைவுபெறும்.(204-236)

* * *

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் இத்திருவிழாவின் வேட்டை, சப்பரத் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தேர்த்திருவிழா 24ஆம் திகதி சனிக்கிழமையும் சமுத்திரத் திருவிழா மறுநாள் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறும். (204-236)

* * *

நீர்வேலி வாய்காற்தரவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த

# திருமலை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 400 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

## சர்வதேச புலம்பெயர் அமைப்பு நடவடிக்கை

திருகோணமலை,ஜூலை14

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களில் 400 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச புலம்பெயர்தல் அமைப்பின் தலைமைப் பணியக மீள்குடியமர்வுத் திட்டப் பொறுப்பதிகாரி பிரியந்தா குலதுங்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கன்னியாவில் 50 குடும்பங்களுக்கும், மொரவேவாவில் 100 குடும்பங்களுக்கும், திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் 250 குடும்பங்களுக்கும் தற்காலிக குடிசைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் விவரித்துள்ளார்.

200 குடும்பங்களுக்கு வாழ்வாதார வசதிகள் ஐ.ஓ.எம். அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன. நெற்செய்கையை மேற்கொள்வதற்காக லாண்ட்மாஸ்டரும் இதர உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, கால்நடை வளர்ப்பை மேற்கொள்வதற்கான உதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து சுயவிருப்பில் திருகோணமலைக்குத் திரும்பியவர்களுக்கும் சுயவிருப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஐ.ஓ.எம். அமைப்பினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை சர்வதேச புலம் பெயர் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் கையளிப்பு வைபவமொன்று நடைபெற்றது. இதில் பயனாளி ஒருவருக்கு மீன்பிடிப்படகொன்றும் இன்னொரு பயனாளிக்கு ஓட்டோ ஒன்றும் வழங்கப்பட்டன.

ஐ.ஓ.எம். தலைமை அலுவலக அதிகாரி பிரியந்த குலதுங்க இவற்றைப் பயனாளிகளிடம் கையளித்தார். இந்த நிகழ்வில், ஐ.ஓ.எம். அலுவலக அதிகாரி நிரோஷனும் பங்குபற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

### தென்கிழக்குப் பல்கலைக்கழக

# வெளிவாரி கற்கை நிலையத்தில் பயிலும் மாணவருக்குப் பரீட்சை

திருகோணமலை,ஜூலை14

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கற்கை நிலையத்தில் பல்வேறு பாடநெறிகளைப் பயின்றுவரும் மாணவர்களுக்கான பரீட்சைகளை இம்மாத இறுதியில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கான இரண்டாம் பருவ பரீட்சை இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் ஒலுவில் வளாகத்தில் நடைபெறும் என சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.ஜ.நௌபர் அறிவித்துள்ளார்.

உவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்குரிய இரண்டாம் பருவப் பரீட்சையும் 24ஆம், 25ஆம் திகதிகளில் கொழும்பு, திருகோணமலை நகரங்களில் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகருக்கான பரீட்சை நிலையம் இரத்மலானை இந்துக்கல்லூரியிலும், திருகோணமலை நகருக்கான பரீட்சை நிலையம் ஸாஹிறாக் கல்லூரியிலும் இயங்கும் என்றும் நௌபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஆங்கில சான்றிதழ் பாடநெறியில் பயின்று வரும் மாணவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 24ஆம் திகதி ஒலுவில் வளாகத்தில் நடத்தப்படவுள்ளது என்றும் பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் பரீட்சை அனுமதி அட்டை, நேரஅட்டவணை ஆகியவை தபால்மூலமாக அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ளி)

# பொலிஸ் கான்ஸ்டபிள் ஆற்றில் வீழ்ந்து பலி

### அம்பாறையில் சம்பவம்

அம்பாறை,ஜூலை 14

அம்பாறை,விஜயபுர பகுதியிலுள்ள தொங்கு பாலம் மீது நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஆற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என அங்கிருந்து கிடைக்கும்தகவல்கள் கூறுகின்றன.




இச்சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது அவர் அங்கு உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் சவளக்கடைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 37 வயதான பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபரின் சடலம் அம்பாறை வைத் தியசாலையில் பிரேத அறையில் நேற்றுமுன்தினம் வைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய முகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ளி)

# கரடியனாறு விவசாயப்பண்ணையை திறக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூலை14

கடந்த 24 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும் மட்டக்களப்பு கரடியனாறு விவசாயப்பண்ணையை மீண்டும் திறக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

1986ஆம் ஆண்டு முதல் விவசாயப் பண்ணை தொடர்ந்து மூடப்பட்டிருக்கிறது. இதனால் 300இற்கு மேற்பட்ட தொழிலாளர் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கரடியனாறு, கோப்பாவெளி, புல்லுமலை, இலுப்படிச்சேனை, மரப்பாலம், உறுகாமம், செங்கலடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்களத் தொழிலாளர்களும் மலையகத் தொழிலாளர்களும் இப்பண்ணையில் பணியாற்றி வந்துள்ளனர். கடந்த கால் நூற்றாண்டு களாக இவர்கள் தொழில்வாய்ப்பின்றித் தவிக்கின்றனர் என்றும் அவர் மேலும் விவரித்துள்ளார்.

எனவே இப்பண்ணையை மீண்டும் திறப்பதனால் பலநூற்றுக் தொழில்வாய்ப்பை ஈட்ட முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் அமைச்சர் ஆறுமுகன் தலைமையில் ஹற்றனில்

கொழும்பு,ஜூலை14

நுவரெலியா மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி ஹற்றனில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இ.தொ.கா. தலைவரும் பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம், மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜெகதீஸ்வரன் மற்றும் மாவட்டக் கல்விமான்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக இ.தொ.கா. ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நுவரெலியா, அம்பேகமுவ, கொத்மலை, ஹங்குராங்கெத்த மற்றும் வலப்பனை ஆகிய பிரதேசங்களில் இனங்காணப்பட்ட அபிவிருத்திப் பணிகள் அமைச்சர் ஆறுமுகனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.

கல்வி, வீடமைப்பு, மின்சாரம், போக்குவரத்து, சுகாதாரம், வேலைவாய்ப்பு, மலையகத்திற்கென தனிப் பல்கலைக்கழகம், ஹட்டன் டிக்கோயா நகரசபையை மாநகர சபையாகத் தரமுயர்த்தல் மற்றும் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.




இவ்விடயங்கள் தொடர்பில் நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அபிவிருத்துக் குழுக்களை அமைப்பது பற்றிய பிரேரணை முன்வைக்கப்பட்டது.

அமைக்கப்படவிருக்கும் குழுவில் பிரதேச கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படுவர். அக்குழுக்களூடாக பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவது என்று உத்தேசிக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் ஆறுமுகன் கூறியவை வருமாறு:-

இங்கு விவாதிக்கப்பட்ட விடயங்கள் பலவற்றுக்கான தீர்வுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மலையகப் பல்கலைக்கழகம், நகரசபை தரமுயர்வு, புதிய நகரசபைகளை உருவாக்குதல் போன்றவற்றுக்கான முயற்சியில் சாதக நிலை ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பு மறுசீரமைப்புத் தொடர்பாக மலையக மக்களினதும், ஏனைய கட்சிகளினதும் கருத்துகளை உள்வாங்கி அறிக்கை தயாரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான அபிவிருத்திக் கூட்டங்களை வெகுவிரைவில் ஏனைய பிரதேசங்களிலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது - இப்படி அமைச்சர் ஆறுமுகன் தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட பொருளாதார பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம்,

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமது அமைச்சு பங்களிப்புச் செய்யும் என்றும் -

வீடமைப்புத் தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார் - இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ளி)

# போலி சாரதி அனுமதிப் பத்திரங்களை தயாரித்து வந்த மூவர் குருநாகலில் கைது

கொழும்பு,ஜூலை14

சாரதி அனுமதிப் பத்திரங்களைப் போலியாகத் தயாரித்து விநியோகித்து வந்தனர் எனக் கருதப்படும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குருநாகல் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஓட்டோ ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோதே இவ்விடயம் அம்பலத்திற்கு வந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பான ஆவணங்கள், காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்கள், அவற்றை மீளப்பெறுவதற்கான ஆவணங்கள், தேசிய அடையாள அட்டைகள் - அவற்றின் பிரதிகள், கனரக வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்கள், இறப்பர் முத்திரைகள் எனப் பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எத்தகைய வாகனங்களுக்கும் இவர்கள் மூன்று வாரங்களுக்குள் சாரதி அனுமதிப் பத்திரங்களை தயாரித்து வழங்கியுள்ளனர்.

இதற்கென 8,000 ரூபா முதல் 15,000 ரூபா வரையான தொகையை அறவிட்டுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ளி)

# நல்லதண்ணீர் - கதிர்காமம் பஸ்சேவை ஹற்றன் டிப்போவால் இடைநிறுத்தம்

நுவரெலியா,ஜூலை 14

ஹற்றன் பஸ் டிப்போவால் நல்லதண்ணீர் நகரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கதிர்காமத்திற்கான பஸ்சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது எனப் பிரதேச மக்கள் விசனிக்கின்றனர்.

இது குறித்து பிரதேச மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

நல்லதண்ணீர் நகரிலிருந்து கதிர்காமத்திற்கு நடத்தப்பட்டுவந்த பஸ்சேவை இப்போது நுவரெலியா நகரிலிருந்து நடைபெறுகின்றது.

தற்போது கதிர்காமம் உற்சவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் செறிந்து வாழும் இப்பிரதேசத்திலிருந்து நாளாந்தம் பெருந் தொகையான பக்தர்கள் கதிர்காமம் செல்லவுள்ளனர். எனினும், கதிர்காமத்திற்கான நேரடி பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரிகர் களின் நன்மைகருதி ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை கதிர்காமம் உற்சவம் ஆரம்பமான வேளையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தமிழ்மக்களிடையே விசனத்தைத் தோற்றுவித்துள்ளது.

எனவே, கதிர்காமம் செல்லும் மக்களின் நன் மைகருதி ஹற்றன் டிப்போ இச்சேவையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.

இதேவேளை, கதிர்காமம் டிப்போவால் நல்லதண்ணீர் நகர்வரை நடத்தப்படும் பஸ்சேவை, ஒன்றுவிட்ட ஒருநாள் வழமையாக இடம்பெற்று வருகின்றது.

இச்சேவை பிரதியமைச்சர் முத்து சிவலிங்கத்தின் முயற்சியால் கடந்த 2007 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய அமுத விழாவும், ஸ்தாபகர் தின விழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட, வன்னியசிங்கம் பரந்தாமன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் இ.ரவீந்திரன் நிற்பதையும் பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.சிவநாதம் உரை நிகழ்த்துவதையும் முதலிரு படங்களிலும்-

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய பிரதி அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலைநிகழ்வில் ஒரு காட்சியையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி மூன்று படங்களிலும் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

# மறவன்புலோ மீள்குடியேற்றத்துக்குத் தயாராகின்றது

**யோகராசா ஜெயகாந்தன்**
அதிபர், சகலகலாவல்லி வித்தியாலயம்
மறவன்புலோ, சாவகச்சேரி.

இந்த மக்களைப் பற்றி எழுதும்போது அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான ரூஸ்வெல்ட் குறிப்பிட்ட

''எங்கிருக்கிறீர்களோ அங்கே,
எது முடியுமோ அதை
எது இருக்கிறதோ அதை வைத்துக் கொண்டு''

என்ற முக்கியத்துவம் மிக்க கூற்றிலிருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும்.

மறவன்புலோ மக்கள் தாமுண்டு தமது வேலையுண்டு என்று வாழ்ந்தவர்கள். வயலும், தென்னந்தோப்புகளும், பனங்கூடல்களுமாகக் கிடந்த வளத்திற்குள் தமது வாழ்வைப் பிணைத்து உடலைவருத்தி உழைத்தவர்கள். மேலே மணற்பாங்கானாதும் கீழே களிமண் படையையும் கொண்ட மறவன்புலோ வயல்கள் மழை நீரை தேக்கி வைத்திருக்கும் தன்மை கொண்டவை. இதுவே இவ்விட வயல்கள் செழித்து வளருவதற்குக் காரணமாக இருக்கின்றது. கடலை அண்டிய பிரதேசமாக இருப்பதனால் தென்னை நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றது. இவற்றுடன் பனை வளமும் சேர்ந்து மறவன்புலோவை ஒரு தன்னிறைவுக்கிராமமாக உருவாக்கியுள்ளது.

கடலுணவுக்குத் தட்டுப்பாடு இல்லாத மறவன்புலோவில் மந்தை வளர்ப்புத் தொழிலும் மிக இலகுவாக மேற்கொள்ளப் பட்டது. இதனால் பசுப்பால் உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தது. தமது உற்பத்திப் பொருள்களான தேங்காய், பனங்கிழங்கு, அரிசி, மிளகாய், பனங்கட்டி போன்றவற்றை தலையில் சுமந்தபடி நடந்து வந்து சாவகச்சேரிச் சந்தையில் விற்றவர்கள் மறவன்புலோ மக்கள். மறவன்புலோவிலிருந்து சாவகச்சேரி மூன்றரைக் கிலோ மீற்றர் என்பதால் அவர்கள் நகருக்கு நடந்து வருவதில் தயக்கம் காட்டுவதில்லை.

மறவன்புலோ மக்களின் பிள்ளைகள் கல்வி பயிலும் நிறுவனம்தான் சகலகலாவல்லி வித்தியாலயம். க.பொ.த.(சா/த) மட்டும் கல்வி பயில இவ்வித்தியாலயத்தில் வாய்ப்புக்கள் இருந்தன. இந்தப் பாடசாலை வயல்களின் நடுவே அமைந்திருந்தமையால் காற்றோட்டமான வகுப்பறைகளுக்குக் குறைவில்லை. இவர்கள் தமது உயர்தர வகுப்புப் படிப்பதற்காக சாவகச்சேரி நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலையை நாடுவார்கள். அதிகமானவர்கள் யா/டிறிபேர்க் கல்லூரியிலேயே உயர்தரத்தைப் பயின்றனர்.

சாவகச்சேரி நகரப் பாடசாலைகளுக்கு அவர்கள் நடந்து வந்து அல்லது ஈருளியில் வந்தே கல்வி பயின்றனர். மறவன்புலோ மக்கள் பிரயாணம் செய்யக் கூடிய ஒரே ஒரு பஸ் 'கேரதீவு' என்ற பெயர்ப்பலகையுடன் வரும் இ.போ.ச.பேருந்து மட்டுமே. இதுகாலை ஒன்பது மணிக்கே மறவன்புலோ வருவதால் காலையில் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்கு வருகை தர முடியாது என்பதால் அவர்கள் நடந்தும், ஈருளியிலும் நகரப் பாடசாலைகளை வந்தடைவர்.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யுத்தம் காரணமாக இடப்பெயர்வினால் அவர்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகக் குழப்பிப் போயிற்று.

அவர்கள் வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், கொழும்பு, வெளிநாடு என்று இடம் பெயர்ந்து தற்காலிகமாகக் குடியேறினர். மறவன்புலோவில் அவர்களின் சொத்துக்களும், ஜீவனோபாய பொருளாதாரக் கட்டுமானங்களும் முற்றாக அழிந்துபோயின. அவர்களின் வதி விடங்கள் அனைத்தும் முற்றாக அழிந்து போயுள்ளன. சென்ற வருடம் மீள் குடி யேற்றத்திற்கான ஆரம்பக்கட்ட நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இப்பகுதி மக்கள் தமது பிறந்த ஊரில் குடியேறும் நம்பிக் கையுடன் காணப்பட்டனர்.

தற்போது மறவன்புலோ மக்களுக்கு முந்நூறு வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பு என்ற (SDC) அரச சார்பற்ற நிறுவனம் அனைத்துக் கட்டுமானப் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டுள்ளது. கூரை வேலைகள் முடிந்து ஓடு போடக் கூடிய நிலையில் கட்டுமானப் பணிகள் உள்ளன. இந்த நிறுவனமே மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தையும் மீளக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. முற்றாகத் தரைமட்டமான இப்பாடசாலையின் கட்டுமானப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மறவன்புலோ சகலகலாவல்லிப் பாடசாலையை செயற்றிறனுடன் நடத்துவதற்கு மாகாணக் கல்வி அமைச்சும், தென்மராட்சிக் கல்வி வலயமும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

சகலகலாவல்லி வித்தியாலயம் 'ட' வடவமான 270 அடி நீளமான கட்டடத் தொகுதியுடன் சமயலறை, நீர்த்தாங்கி, மலசலகூடம், காவலாளி அறை, முகப்பு மதில் என்பவற்றுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. கட்டடத் தொகுதியில் அதிபர் காரியாலயம், பிரார்த்தனை மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன அமையவுள்ளது. குறைந்த நிலப்பரப்பைக் கொண்ட இவ்வித்தியாலயத்தின் கட்டடத் தொகுதி மேல்மாடிகளாக அமையவில்லை என்பது ஒரு குறைபாடாகும். இக்கட்டடத் தொகுதியைத் திட்டமிட்டவர்கள் எதிர்காலத்தில் மேல்மாடிக் கட்டடங்களை அமைக்க வேண்டும் என்பது பலரின் கருத்தாக உள் ளது.

சொந்த ஊரை விட்டு,
பிறந்தமண்ணை விட்டு,
வசித்த வீட்டை விட்டு,
கல்வி பயின்ற பாடசாலையைவிட்டு எங்கெல்லாமோ அலைந்து நலிந்த மறவன்புலோ மக்களுக்கு மீண்டும் அந்த முக்கியத்துவம்மிக்க வாசகத்தை நினைவூட்ட வேண்டும். எங்கிருக்கிறீர்களோ- மறவன்புலோவில், எது முடியுமோ-வயல் வேலைகளும் தென்னந்தோப்புக்களை உருவாக்குவதும், எது இருக்கிறதோ அதை வைத்துக் கொண்டு- அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியா லும் ஏனைய உதவியாலும் பெறப்பட்ட வற்றை வைத்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையில் முன்னேறுங்கள். விடாப் பிடியாக முயற்சித்து முன்னேறுங்கள். கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடமாயினும் அவதானத்துடன் செயற்படுங்கள். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் முன்னேற்றமான பாதைக்கு இட்டுச் செல்லுங்கள். கல்விக்காக சகலகலாவல்லி வித்தியாலயத்தை நாடுங்கள். நீங்கள் முகமலர்ச்சியுடன் தோட்டம் துரவுகளிலும், வயல் வரம்புகளிலும் நடந்து திரியும் காட்சியைக் காண யாவரும் விரும் புவர். வாழ்க்கையின் சுவாரஸ்யமே எதிர்பார்த்துக் காத்திருப்பதுதான்.

***


**சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு**

ஒரு மாதம் வளர்க்கப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ரூபா 60/= மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவு.
தொ.பே:- 0217200616, 0777884971

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் பின்வீதி முடமாவடிச் சந்திக்கும் தலங்காவில் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772720112

**வீடு, வளவு விற்பனைக்கு**

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7 குழியையுடைய காணியில் சகல வசதிகளுடனும் கூடிய புதுவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0717353524

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No. - 1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் (விசேட விலையில்) 19.07. 2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். T.P.:021 222 6944
கூட்டி பாம், வட்டுக்கோட்டையிலும். பதிவு செய்யலாம். T.P.:0213216290
குறிப்பு (எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்)

**புறொயிலர் விற்பனைக்கு**

நிறைகூடிய புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது. கிலோ 480/= திங்கள், புதன், சனி, ஞாயிறுகளில் பகல் 12 மணி வரை. குமரன் பாம், 227, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம். 0776180675.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

மிற்னைன் பைரகா புறொயிலர் குஞ்சுகள் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.
விவரங்களுக்கு: எஸ்.கிருஸ்ணகுமார் மானிப்பாய். தொ.பே: 0772338084

New batches and Paper class
MIS
ICT - 10 / 11
100% pass rate for last 3 years
R.Kumaran - B.Sc.
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு......
# 74, Sabopathy Lane, Thalaiyaali, pirambady,Jaffna
TPNo : 0776577359





LG No 1 Dealer in SriLanka

Fridge, Deep freezer, Bottle cooler, Airconditioner, T.V, மற்றும் சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடன் பெற்றுக்கொள்ள

LG JAFFNA ELECTRICAL

Show Rooms

141,Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.

No: 04,New Market, Chavakachchri. T.P: 0213008702

Authorized Dealer for Abans

94 (6), Stanley Road, Jaffna. 021 222 2353

Cool Line: 0777725258


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பின் கர்வம்

ஒரு சமயம் இந்த உலகத்திலே உள்ள எறும்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அகில உலக எறும்புகள் மாநாடு நடத்தின.

அதில் ஓர் எறும்பு தொண்டர் பேசும் போது ''எறும்புச் சகோதரர்களே! சகோதரிகளே!

இந்த உலகத்துலே நமக்குப் பெரிய எதிரி எது என்று கேட்டால் அது யானைதான்!

நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டமா எங்கேயாவது போய்க் கொண்டிருப்போம். அப்பொழுது திடீரென்று ஒரு யானை வந்து எங்க மேல கால வைச்சு மிதிக்குதென்று வையுங்கோ. என்ன ஆகும்? ஆயிரக்கணக்கான நம் தோழர்கள் செத்துப் போறோம்! இதைத் தடுக்க என்ன வழி என்று நாம் யோசிக்க வேணும்!'' என்றது.

அடுத்து ஒரு எறும்பு பிரதிநிதி பேச வந்தார்.

'' நாம் எல்லோரும் சேர்ந்து நமது எதிரியான யானையைக் கொல்ல ஒரு வழி கண்டு பிடிக்க வேணும்! என்று சொல்லி உட்கார்ந்தார்.

அதற்கு பின் அந்த எறும்புகள் எல்லாம் பல குழுக்களாக பிரிந்து ஆலோசனை பண்ணி கடைசியில் ஒரு முடிவு எடுத்தனர். அவர்களுக்கு ஓர் அகில உலக தலைவரை தேர்ந்தெடுத்து, அவரை கடவுளை வேண்டி தவம் செய்ய வைத்து, கடவுளிடம் ஒரு வரம் வாங்குவது என்பதே அது.

உடனே கூடி ஆலோசித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தலைவரும் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

ஆனால் தலைவர் எறும்புக்கு தான் தலைவன் என்ற கர்வம் வந்து விட்டது.

''எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான்... கடவுளிடம் வரம் வாங்கிக் கொடுக்க வேண்டிய கடமை என்னுடையது. எப்பேற்பட்ட வரம் வாங்கப் பேறேன் என்று கொஞ்சம் பொறுத்து இருந்து பாருங்கள்! என்றது.

நிறையக்காலம் தவம் இருந்தது தலைவர் எறும்பு.

ஒரு நாள் கடவுள் காட்சி கொடுத்தார். ''எறும்பே உன் தவத்தை மெச்சினேன்... என்ன வேண்டும் கேள்!'' என்றார்.

உடனே எறும்பு ''ஒன்றும் பெரிசா இல்ல சாமி... நான் கடிச்சா சாகணும்! அவ்வளவுதான்!'' என்றது.

'' சரி ! தந்தேன்!'' என்றார் கடவுள்.

வரம் கிடைத்தவுடன் எறும்புக்கு ஒரே மகிழ்ச்சி. வாங்கிய வரம் பலிக்குதா என்று பரிசோதனை செய்ய நினைத்தது.


யாரைக் கடிக்கலாம் என்று யோசித்தது. எதிரில வரம் கொடுத்த கடவுள் தான் நின்றார்.

'' அதுதான் வரம் வாங்கியாச்சு... இனி இவர் என்னத்துக்கு?'' என்று நினைத்தபடி ஒரு கடி கடித்தது.


அவர் உடனே ''பட்'' என்று கையாலே ஒரு தட்டு தட்டினார்.

எறும்பு ''அப்பாடா'' என்று கத்திக் கொண்டு விழுந்து ''என்ன கடவுளே வரம் பலிக்கலே...'' என்றது.

கடவுள் சிரித்துக் கொண்டே '' நீ என்ன வரம் கேட்டாய்? நான் கடிச்சா சாகோணும் என்று தானே! இப்ப நீ கடிச்சாய் ! சாகப் போறாய்! என்றார்.



# புகைப்பழக்கம்



சிகரெட் குடிக்கும் பழக்கம் இல்லாத ஊருக்கு சிகரெட் விற்பதற்காக வியாபாரி ஒருவர் வந்தார். சிகரெட் விற்பனையாகததால் புகைப்பிடிப்பவர் எவரையும் நாய் கடிப்பதில்லை, பெண் குழந்தை பிறப்பதில்லை, வீட்டிற்கு திருடன் வரமாட்டான், முதுமை நெருங்காது என்று சொல்லி விளம்பரம் செய்ய ஆரம்பித்தான். இதைப்பார்த்த மக்கள் புதுமை இருப்பதாக நினைத்து சிகரெட் வாங்கி கொண்டார்கள். சிகரெட் விற்பனை முடிந்து ஒரு வருடமாகியது சிகரெட் வாங்கிய ஒருவர் அனுபவத்தில் வியாபாரி கூறியது பொய்யென புரிந்து கொண்டார். உடனே வியாபாரியை தேடிக் கொண்டு போனார். அந்த வியாபாரி கொஞ்சம்கூட பயப்படவில்லை. தான் கூறியது பொய்இல்லை என கூறினான். அது எப்படி புகைப்பிடிப்பவனை நாய்கடிக்காது என்றாயே அது பொய்தானே என்று கேட்டான். அதற்கு வியாபாரி புகைப்பிடிப்பவன் உடம்பில் இருக்காது. தள்ளாடி நடப்பான், அதனால் எப்போதும் கையிலொரு ஊன்றுகோல் இருக்கும். கையில் குச்சியிருப்பதால் நாய் நெருங்காது என்று சொன்னான். பெண்குழந்தை பிறக்காது என்றாயே அதுவும் பொய்தானே என்றான். அதற்கும் வியாபாரி உண்மையில் எந்தக் குழந்தையும் பிறக்காது அதனால் தான் பெண்குழந்தை பிறக்காது என்றேன்.

புகைப்பவன் வீட்டுக்கு திருடன் வரமாட்டான் என்றாயே? ஆமாம் புகைப்பிடிப்பவன் இரவு முழுவதும் இருமிக்கொண்டே விழித்திருப்பான். அதனால்தான் அப்படிச் சொன்னேன் என்றான். அப்படியென்றால் முதுமை வராது என்றாயே அது எப்படி சாத்தியமாகும். முதுமை வருவதற்கு முன்னே அவன் இறந்து விடுவான். அதனால் தான் முதுமை நெருங்காது என்றான் வியாபாரி. இவற்றைக் கேட்டு நியாயம் இருப்பதாக நினைத்துக் கொண்டு அவர் வீடு திரும்பினார். இக்கதையிலிருந்து வியாபாரத்தின் தந்திரத்தையும் புகைப்பிடித்ததனால் கெடுதலையும் அறிந்து கொண்டோம்.

சிகரெட் குடிக்கிறவர்கள் எந்த நேரமும் அதை நிறுத்தலாம். 70 வயதான ஒருவர் அதுவரைக்கும் சிகரெட் குடித்தவர்... அந்த வயதில் அதை கைவிட்டால் அவர் அதிக நாள் வாழ்வார்.

இவ்வளவு காலம் குடிச்சோம் இனிமேல் நிறுத்தி என்ன பயன் என்று நினைக்க வேண்டியதில்லை. அமெரிக்காவில் இதைப்பற்றி பரிசோதித்துப் பார்த்தார்கள்.

ஏற்கனவே குடித்த சிகரெட் வயதான காலத்திலே செய்யும் என்று நினைக்க வேண்டாம். எந்த நேரமும் அதை கைவிடலாம். எந்த நேரம் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டாலும் அதுக்குப் பிறகும் நன்றாக வாழலாம் இது தான் நிபுணர்கள் கருத்து.

# வாழ்வின் துயரங்கள்



அப்பாவைத் தேடி மகள் வந்தாள். அவளது முகம் ஒரு மாதிரியாக இருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

'' என்னம்மா விஷயம்?'' என்று விசாரித்தார். அவள் தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாக சொன்னாள்.

''இவைகளிலேயிருந்து நான் எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரியவில்லை அப்பா!'' என்று சொல்லிக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அப்பா எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். அதற்குப் பிறகு ' என் பின்னாலே வா! என்று சொல்லி மகளை கூட்டிக் கொண்டு சமையல் அறைக்குப் போனார். மூன்று பாத்திரங்களிலே தண்ணீரை ஊற்றி... எரியும் அடுப்பில் அவற்றையெல்லாம் எடுத்து வைத்தார். சிறிது நேரத்திலே தண்ணீர் கொதிக்க ஆரம்பித்து விட்டது. ஒரு கரட்டை எடுத்து ஒரு பாத்திரத்திலும், ஒரு முட்டையை எடுத்து இன்னொரு பாத்திரத்திலும் , கொஞ்சம் கோப்பித்தூளை எடுத்து இன்னொரு பாத்திரத்திலும் போட்டார்.எதற்காக அப்பா இப்படியெல்லாம் செய்கிறார் என்று அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை! இருந்தாலும் அமைதியாக அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்திலே அந்தப் பாத்திரங்களை எல்லாம் கீழே இறக்கினார். கரட்டையும், முட்டையும் எடுத்து வெளியே வைத்தார். கோப்பியை ஒரு கோப்பையில் ஊற்றினார்.

''மகளே! இவையெல்லாம் என்னவென்று தெரிகிறதா?'' என்று கேட்டார் அப்பா. '' என்னப்பா... இது கூடவா தெரியாது... அது கரட் அடுத்தது முட்டை... இது கோப்பி!'' என்றாள் மகள்.

''சரி அந்தக் கரட்டை தொட்டுப்பார் எப்படியிருக்கிறது?'' ''முட்டை எப்படியிருக்கிறது என்று பார்! '' என்றார். சிறிது கடினமாக இருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே அப்பா கேட்க முன்னரே அந்தக் கோப்பியை எடுத்து குடித்துவிட்டாள்!

குடித்துவிட்டு.... '' இது நல்ல சுவையாக இருக்கிறது!'' அது சரி இப்போது எதற்காக இந்த வேடிக்கை! என்று கேட்டாள்.

மகளே! சிறிது நேரத்திற்கு முன்னால் இந்த மூன்று பொருளையும் ஒரே மாதிரி தண்ணீரில்தான் கொதிக்க வைத்தோம். ஒரே நேரத்திலே கீழே இறக்கினோம். ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி மாறியிருக்கிறது. என்றார்.

கரட் ஆரம்பத்தில் எவ்வளவு கடினமாக இருந்தது. ஆனால் தண்ணீரில் கொதிக்க வைத்ததும் தன்னுடைய இயல்பிற்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது. இந்த முட்டையினுள் திரவ நிலையில் இருந்த கரு கொதிக்க வைத்ததும் கடினமாகி விட்டது. கோப்பி, தண்ணீரை சுவைமிக்க பானமாக மாற்றியிருக்கிறது என்றார்.

''மகளே! வாழ்க்கையில் கஷ்டங்கள் இப்படிக் கொதிக்க வைப்பது மாதிரிதான். அதை நாங்கள் எந்த உருவத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில்தான் விஷயம் இருக்கிறது! இப்பொழுது நீ சொல் நீ கரட்டாவா? முட்டையாகவா? கோப்பித்தூளாகவா? என்றார். மகள் முகத்திலே தெளிவு பிறந்தது. நாம் கொஞ்சம் சாமார்த்தியமாக நடந்து கொண்டால் வாழ்க்கையில் வருகின்ற சங்கடங்களை சாதகமாக மாற்றிக்கொள்ள முடியும்.

*சொன்னவர்: தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி II

அலகு ரீதியான பரீட்சை நோக்கு வினாக்கள்

## ✱ வணிக நிதி, மனிதவள முகாமைத்துவம்

### பகுதி – I

11. பின்வரும் வகுதிகளுள் எது கொழும்பு பங்குச்சந்தையினது பங்குகளின் அதியுயர் புரள்வினை தற்பொழுதுக் கொண்டுள்ளது?
 1) பெருந்தோட்டக் கம்பனிகள்.
 2) ஹோட்டல்கள், பிரயாணக் கம்பனிகள்.
 3) பானங்கள், உணவு வகைகள், புகையிலைக் கம்பனிகள்.
 4) நிர்மாண வேலைகள் இயந்திரவியல் கம்பனிகள்.
 5) வங்கிகள், நிதி, காப்புறுதிக் கம்பனிகள்.

12. தொகுதிக்கடனானது அரசக்கடன் பத்திரங்களுடன் ஒப்பிடும்போது முதலீட்டாளர் பெறக்கூடிய நன்மையாகக் கருதமுடியாதது எது?
 1) வட்டியை இலகுவாகப் பெறலாம்.
 2) நிதியை பாதுகாப்பாக பெற முடிதல்.
 3) உயர்வான இணைப்புப் பெறுமதி.
 4) முதலீட்டை பண்முகபடுத்தலாம்.
 5) அரச பாதுகாப்பு உத்தரவாதம்.

13. வேலை நியமக் குறிப்பீடு (Job Specification) ஒன்றிலே உள்ளடக்கப்படும் ஒரு தகவல் பின்வருவனவற்றுள் எது?
 1) வேலையின் தன்மை.
 2) கடமைகளும் பொறுப்புக்களும்.
 3) தொழில் நிபந்தனைகள்.
 4) முதலீட்டை பன்முகப்படுத்தலாம்.
 5) அரச பாதுகாப்பு உத்தரவாதம்.

14. ஊழியர் சேலாபநிதியத்திற்கான நடைமுறைப்பங்களிப்பைக் குறித்து நிற்பது,

| | தொழில் தருனர் | ஊழியர் |
|---|---|---|
| 1) | 6% | 4% |
| 2) | 9% | 6% |
| 3) | 12% | 8% |
| 4) | 12% | 10% |
| 5) | 15% | 10% |

15. தகமை வாய்ந்த பொருத்தமான நபர்களை அகத்தே இருந்து ஆட்சேர்ப்பு செய்யும் முறையாக அமைவது,
 1) மரபுரிமைத் திட்டங்கள்.
 2) செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தல்.
 3) கடந்தகால ஊழியர்களின் பரிந்துரைப்பு.
 4) வேலைகள் காட்சி விழாக்கள்.
 5) வேலையிலமர்தல் இணையத்தளங்கள்.

16. புதிய ஊழியர்களை நிறுவனம், வேலை, பிற ஊழியர்கள் என்பவற்றுக்கு அறிமுகம் செய்யும் செயன்முறை எவ்வாறு அகைக்கப்படும்?
 1) பயிற்சி.
 2) அபிவிருத்தி.
 3) செயலூக்கமளித்தல்.
 4) தொழில் இசைவாக்கம்.
 5) மதிப்பீடு.

17. பின்வருவனவற்றுள் எது ஒரு ஓர (Fringe Benefit) நன்மையாக கருதப்படும்?
 1) மிகையூதியம்.
 2) தரகுக்கூலிகள்.
 3) இலாபப் பங்கீடுகள்.
 4) பங்கு உடைமைகள்.
 5) இலவச ஆகாரங்கள்.

18. பின்வருவனவற்றுள் எது ஒரு மனித வளத் திட்டமிடல் செயற்பாடு அன்று,
 1) ஊழியர் கேள்வி நிரம்பலை மதிப்பிடல்.
 2) ஊழியர் மிகை பற்றாக்குறையை இனங்காணல்.
 3) மனிதவளத் திட்டத்தைத் தயாரித்தல்.
 4) தொழில் விவரணத்தை தயாரித்தல்.
 5) திட்ட மதிப்பிடலும் மேம்படுத்தலும்.

19. கைத்தொழிற் தொடர்புகளைப் பேணுவதற்கு உள்ள பிரதான தடைகளுள் ஒன்று,
 1) அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளும் பிரமாணங்களும் ஆகும்.
 2) வேலைதருநரின் தொழிற்சங்க நடவடிக்கை.
 3) மனித வளத்திட்டத்தை தயாரித்தல்.
 4) தொழில் விவரணத்தை தயாரித்தல்.
 5) திட்ட மதிப்பிடலும் மேம்படுத்தலும்.

20. மனித வளங்களின் ஒரு தனியான ஒரு சிறப்பியல்பு யாது?
 1) இதற்கு ஒரு விலை உண்டு.
 2) இதற்கு ஒரு சந்தை விலை உண்டு.
 3) இதற்கு தீர்மானம் எடுக்கும் இயலுமை உண்டு.
 4) இது ஓர் உள்ளீடு.
 5) இது நோக்கங்களை அடைவதற்கு இன்றியமையாதது.

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

✱ **21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்க.**

21. இலாபத் தன்மையில் .................................................. பூச்சியமாகும்.

22. வசூலிக்க வேண்டிய கடன்படுநர் தொகுதியை விற்பனை செய்தல் .................. என அழைக்கப்படும்.

23. வணிகத்தின் விரைவுச் சொத்திற்கும் நாளாந்த தொழிற்பாட்டுச் செலவிற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் விகிதம் .............................. ஆகும்.

24. திறைசேரி உண்டியலுக்கான முதல்நிலைச் சந்தையில் தரகர்களின்றி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இலத்திரன் முறைமை ........................................... ஆகும்.

25. பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனிகளின் பங்குகளும் தொகுதிகடன்களும் பரிமாற்றப்படும் இடம் .............................................. என அழைக்கப்படும்.

26. எதிர்காலத்தில் உடன்பட்ட விலையில் கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு .......................... வழங்கப்படும்.

27. வணிக நிறுவகத்தின் அடிப்படையான குறிக்கோள் நோக்கம் என்பவற்றை அடைவதற்குரிய எதிர்கால ஊழியத் தேவையைத் தீர்மானித்தல் .......................... என அழைக்கப்படும்.

28. வணிகங்கள் மூலதனத்தில் ஒரு பகுதியினை ஊழியர்களுக்கு பகிர்ந்து வழங்கல் ................................. என அகைக்கப்படும்.

29. ஒரு வேலையில் இருந்து அதற்குச் சமமான மற்றொரு வேலைக்கு மாறுதல் ...................... என அழைக்கப்படும்.

30. ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளம், கூலி, ஊக்குவிப்பு தவிர்ந்த ஏனையவை ............................ என அழைக்கப்படும்.

✱ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

31. உரிமையாளரின் செல்வம் எவ்வாறு கணிக்கப்படும்?
..............................................................................................
..............................................................................................

32. திரவத்தன்மையை பெறுவதற்கான நிதிக்கருமங்கள் எவை?
..............................................................................................
..............................................................................................

33. மூன்று பிரதான அரசாங்க பிணையங்களைக் (Securities) குறிப்பிடுக.
..............................................................................................
..............................................................................................

34. செயற்படும் வரையறுத்த பொதுக் கம்பனியொன்று தனது மூலதனத்தை அதிகரிப்பதற்காக பங்குகளை வழங்குதல் எவ்வாறு அழைக்கப்படும்?
..............................................................................................
..............................................................................................

35. பங்குச்சந்தையின் கொடுக்கல் வாங்கல்களை முறைப்படுத்தல் மற்றும் பதிவு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளும் கம்பனி எது?
..............................................................................................
..............................................................................................

36. ஒரு நம்பிக்கை அலகைத் தோற்றுவிக்கும் மூன்று தரப்பினரைக் குறிப்பிடுக.
..............................................................................................
..............................................................................................
..............................................................................................

37. தொழில் பகுப்பாய்வின் பிரிவுகள் இரண்டும் எவை?
..............................................................................................
..............................................................................................

38. கீழ்மட்ட ஊழியர்களுக்கு அவர்களின் ஆற்றல், திறன் என்பவற்றை அதிகரிப்பதற்கான கற்றல் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?
..............................................................................................

39. தொழிலுக்கு தெரிவு செய்யப்பட்ட ஊழியர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட பயிற்சி காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
..............................................................................................

40. பயிற்சி அளிக்கும் முறைகள் நான்கைக் குறிப்பிடுக.
..............................................................................................
..............................................................................................
..............................................................................................
..............................................................................................

(நிறைவுற்றது)

ஆசிரியர்: A.T.நந்தன் B.Com (Hons), MBA (Reading), CMA (SL).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010 க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான
# பொருளியல்: மாதிரி வினாத்தாள்

## பகுதி – I

01. நிரம்பல்கோட்டின் இடப்பக்க நகர்வுக்கான காரணங்களாக அமையக்கூடியவை,
   1) போட்டி நிரம்பல் பொருட்களின் விலையில் ஏற்படுகின்ற வீழ்ச்சி.
   2) கூட்டு நிரம்பல் பொருட்களின் விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு.
   3) உற்பத்திக் காரணிகளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
   4) குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியினை குறைப்பது என உற்பத்தியாளர்கள் தீர்மானித்தல்.
   5) தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்து காணப்படுதல்.

02. பின்வரும் கூற்றுக்களில் தவறானவை எவை?
   1) X பொருள் குறைந்த பிரதியீடுகளைக் கொண்டிருக்குமாயின் அது நெகிழ்ச்சியுள்ள கேள்வியைக் கொண்டிருக்கும்.
   2) Y பொருள் இழிவுப் பொருளாயின் அது கட்டாயம் கிபன் பண்டமாக இருக்கும்.
   3) A பொருளின் விலை அதிகரிக்கும்போது B பொருளின் கேள்வி குறையுமாயின் Aயும் Bயும் பதிலீட்டுப் பொருட்களாகும்.
   4) Z பொருளின் கேள்வி நெகிழ்ச்சியற்றதாயின் இதனது விலை அதிகரிக்கும் போது இப்பொருளின் மீதான நுகர்வோன் செலவு அதிகரிக்கும்.

03. ஊழியப்படை என்பதை விளக்குக.
   1) சேவை செய்வோர். 2) வேலையற்றோர்.
   3) தொழிலாளர் வினைத்திறன்.
   4) 10 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை.
   5) 15 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட மக்கள் தொகை.

04. $Qd = 20 - 4p$ என்ற கேள்விச் சார்பில் ஒருமை நெகிழ்ச்சிக்குரிய விலை எது?
   1) 2.00 2) 2.50 3) 3.00 4) 4.00 5) 5.00

05. தனியுரிமைப் போட்டிச் சந்தையின் சிறப்பியல்பு அல்லாதது,
   1) தொழிலில் பிரவேச சுதந்திரம் காணப்படுதல்.
   2) ஓரினத் தன்மை வாய்ந்த பொருட்கள்.
   3) பொருட்கள் வேறுபடுத்தல்.
   4) விளம்பரங்கள் அதிகம்.
   5) விலையை உருவாக்கும் தன்மை.

06. கேள்வியின் விலை நெகிழ்ச்சி அற்றதெனக் கொள்க. விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு விலையினை,
   1) குறைத்தல் வேண்டும். 2) அதிகரித்தல் வேண்டும்.
   3) மாற்றத் தேவையில்லை.
   4) குறைத்துப் பின்னர் அதிகரித்தல் வேண்டும்.

07. பொருத்தமானவற்றை தெரிவுசெய்து பொருளியல் கூற்றை பூர்த்தி செய்க.
   1) நுகர்வோனது வருமானம் 40% ஆல் அதிகரிக்க X பண்டத்தின் கேள்வி 12% ஆல் அதிகரிக்குமாயின் X பண்டமானது .................................... ஆகும்.
   2) X பொருளின் விலை 15% ஆல் அதிகரிக்கின்றபோது Y பண்டத்தின் கேள்வி 18%ஆல் அதிகரிக்குமாயின் இவ்விரண்டு பொருட்களும் ...................... ஆகும்.
   3) X பொருட்களின் விலை 18% ஆல் அதிகரிக்கின்றபோது Y பொருட்களின் கேள்வி 15% அதிகரிக்குமாயின் இவ்விரண்டு பொருட்களும் .................... ஆகும்.
   (ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப் பொருள், நெருங்கிய பிரதியீட்டுப் பொருள், குறைந்த பிரதியீட்டுப் பொருள், இணைப்புப் பண்டம், தொடர்பற்ற பண்டம்)

08. பின்வருவனவற்றில் பொருத்தமற்றது எது?
   1) X பண்டத்தின் விலை அதிகரிக்கின்றபோது நுகர்வோனது மொத்த செலவு 10% அதிகரிக்கின்றது.
   2) X பண்டம் நெகிழ்ச்சி வாய்ந்த பண்டம்.
   3) X பண்டத்தின் உற்பத்தியாளரது வருமானம் 10% அதிகரிக்கின்றது.
   4) X பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சியற்றது.

09. நெகிழ்ச்சியற்ற கேள்வி என்பது,
   1) பண்டத்தின் விலை 12% ஆல் அதிகரிக்கின்றபோது அப்பண்டத்தின் கேள்வித் தொகை மாற்றம் 18% ஆல் குறைவடைந்தது.
   2) பண்டத்தினது விலை மாற்ற வீதாசாரத்திலும் பார்க்க கேள்வித்தொகை மாற்ற விகிதாசாரம் சிறிதாக உள்ளது.
   3) பண்டத்தின் விலை அதிகரிக்கும் வீதத்திலும் பார்க்க அதனது கேள்வித் தொகை அதிகரிப்பு வீதம் சிறிதாக உள்ளது.
   4) பண்டத்தின் விலை வீழ்ச்சி அடைய உற்பத்தியாளரது வருமானமும் வீழ்ச்சியடைதல்.

10. ஏனைய காரணிகள் மாறாதபோது X பொருளின் விலை குறைவடைகின்றபோது,
   1) கேள்விக்கோடானது வலப்பக்கம் நோக்கி நகரும்.
   2) நிரம்பல் ஒடுக்கம். 3) நிரம்பல் நீட்டம்.
   4) கேள்விக் கோடானது இடப்பக்கம் நகரும்.
   5) நிரம்பல் கோடு இடப்பக்கம் நகரும்.

11. ஓர் உற்பத்தியாளன் தனது பண்டத்தின் விலையை அதிகரித்தபோது விற்பனை வருமானம் பூச்சியமாகப் பேணப்பட்டது. அப்பண்டத்தினது விலைசார் கேள்வி நெகிழ்ச்சியானது,
   1) பூச்சிய நெகிழ்ச்சி. 2) நெகிழ்ச்சி வாய்ந்தது.
   3) நெகிழ்ச்சியற்றது. 4) அலகு நெகிழ்ச்சிவாய்ந்தது.
   5) முடிவிலி நெகிழ்ச்சி.

12. பின்வருவனவற்றில் தவறானது எது?
   1) அலகு நெகிழ்ச்சிவாய்ந்த கேள்விக்கோட்டின் வழியே அதன் சரிவானது மாற்றமடையாது.
   2) கேள்விக்கோட்டின் சரிவு பூச்சியமாயின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி பூச்சியமாகக் காணப்படும்.
   3) சரிவு கூடிய, கேள்விக்கோடு கூடிய நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
   4) சரிவு குறைந்த, கேள்விக்கோடு கூடிய நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.

13. X பண்டத்தின் கேள்விக்கோட்டை நகர்த்தாத காரணிகள் எனக்கொள்ளக்கூடியது,
   1) X பொருளின் விலை.
   2) பிரதியீட்டுப் பொருளின் விலை மாற்றம்.
   3) நிரப்புப் பொருளின் விலை மாற்றம். 4) சுவை மாற்றம்.

14. கேள்வியின் விலை நெகிழ்ச்சி நிலையானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்கள்,
   1) முடிவிலி நெகிழ்ச்சி வாய்ந்த கேள்விக் கோட்டில்.
   2) பூச்சிய நெகிழ்ச்சி வாய்ந்த கேள்விக் கோட்டில்.
   3) நேர்கோட்டு கேள்வி வளையி ஒன்று கீழ் இருந்து மேல் நோக்கி இடமிருந்து வலமாக சரிந்து செல்லும்போது.
   4) செவ்வக அதிபர வளையியாக காணப்படும்போது.

15. கிபன் பண்டமொன்றின் பிரதான இயல்பு,
   1) வருமானம் அதிகரிக்க பொருளுக்கான கேள்வி குறையும். வருமானம் குறைவடைய கேள்வி அதிகரிக்கும்.
   2) தரம் குறைந்த பண்டங்கள்.
   3) விலை குறைய கேள்வித்தொகை குறைவடையும். விலை அதிகரிக்கக் கேள்வி கூடும்.
   4) விலை மாறும்போது கேள்வி தொகை மாற்றமடையாது.

16. அரச தலையீடற்ற மூடிய பொருளாதாரம் ஒன்றில் மொத்த சமநிலை வருமானம் ($Y = 8000$) 8000M, நுகர்வு மொத்த வருமானத்தில் 80 சதவீதம் ($MPC = 0.8$). இந்த வெளியீட்டு மட்டம் (Y) தொடர்ந்து செல்வதற்கு என்ன தேவை பூர்த்தியாக வேண்டும்?

17. இலங்கை வரிமுறைமையில் காணப்படுவது,
   1) நேர்வரிகள் மிக முக்கியமான முதன்மை வாய்ந்த வருமான மூலம்.
   2) நேரில் வரிகள் முதன்மை வாய்ந்த வரி வருமானம்.
   3) வரி ஏய்ப்புகள் அதிகம்.
   4) பொருட்கள் சேவைகள் வரியே மிக முக்கியமானது.

18. சந்தைத்தோல்வி ஏற்பட காரணமாக அமையாதது,
   1) பொதுப்பண்டமாக இருத்தல். 2) புறச்செலவுகள்.
   3) வெளிவாரி நன்மைகள். 4) நுகர்வோன் இறைமை.
   5) தனியுரிமை காணப்படல்.

19. $C = 100 + 0.8 (Y - T)$ (C = நுகர்வு சார்பு) எனின், சேமிப்பு சார்பு,
   1) $S = 100 - 0.2 (Y - T)$ 2) $S = -100 - 0.8Y - 0.8T$
   3) $S = -100 + 0.2 (Y - T)$ 4) $S = 100 - 0.2 (Y - T)$

20. வரி வருமானமானது அண்மை ஆண்டுகளில் GDPஇன் எத்தனை % ?
   1) 30% 2) 14% 3) 20% 4) 24%

## பகுதி – II

★ இப்பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும், 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

### பிரிவு 'அ'

01. 1) பொருளியலில் அருமை எனும் எண்ணக்கருவை விளக்குக.
   2) அமையச் செலவானது வழக்கமாக நேர்க்கணியமானதாகும். எனினும், சில சந்தர்ப்பங்களில் அமையச் செலவானது பூச்சியமாகக் காணப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் யாவை?
   3) நடைமுறைக்குச் சாத்தியமான ஆக்க இயல்தகவு வளையி ஒன்றினை வரைந்து அதன் சந்தர்ப்பச் செலவினை நிறுவுக.

02. ஒரு பொருளாதாரம் தனக்கு கிடைக்கத்தக்க வளத்தைக்கொண்டு 400 மில்லியன் அலகு கோதுமை உற்பத்தியினையோ அல்லது 150 மில்லியன் அலகு புடைவை உற்பத்தியினையோ மேற்கொள்ள முடியுமெனக் கொள்க.
   1) உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றினை வரைக.
   2) பொருளாதாரம் எப்பண்டத்தின் உற்பத்தியில் தங்கியிருப்பது சிறந்தது என நீர் கருதுகிறீர்? இதனை நிறுவிக் காட்டுக.
   3) புடைவை உற்பத்தியில் 100 மில்லியன் அலகும், கோதுமை உற்பத்தியில் 300 மில்லியன் அலகும் என்ற உற்பத்திச் சேர்க்கை இடம்பெறுகின்றது எனின், இதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
   4) பூரண சிறப்புத் தேர்ச்சி என்றால் என்ன? உற்பத்தி சாத்திய வளையியில் விளக்குக.
   5) பொருளாதாரமானது 15% வளர்சசி அடைகின்றது ஆயின், இதனை உற்பத்தி இயல்தகவு எல்லையில் விளக்குக.

03. ஓர் பொருளின் சமநிலை விலை 10/= ஆக இருக்கும்போது சமநிலைத் தொகை 400 அலகுகளாகும். சமநிலை விலையில் கேள்வியின் நெகிழ்ச்சிக் குணகம் 2 ஆகவும், நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் 0.5 ஆகவும் உள்ளது. இப்பண்டத்திற்கு அரசு மானியம் வழங்குகின்றபோது இம் மானியம் வழங்கல் காரணமாக சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.
   1) மானியத்தின் பின் புதிய சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.
   2) ஓர் அலகிற்கு வழங்கப்பட்ட மானியத்தின் அளவு யாது?
   3) அரசாங்கத்திற்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது?
   4) நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகியோர் ஓர் அலகிற்குப் பெறும் மானியத்தின் அளவு யாது?

04. நீர் கற்ற பொருளாதார எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக.
   1) 15% ஆல் விலை அதிகரிக்கின்றபோது A பண்டத்தின் உற்பத்தியாளரது வருமானமும் 15% ஆல் அதிகரிக்கின்றது. Y பண்டத்தின் உற்பத்தியாளரது வருமானம் 20% ஆல் குறைவடைகின்றது.
   2) X பண்டத்தினது விலை 12% ஆல் குறைவடைகின்றபோது Y பண்டத்தினது கேள்வி 10%ஆல் அதிகரிக்கின்றது. ஆனால், Z பண்டத்தின் கேள்வி 15% ஆல் அதிகரிக்கின்றது. T பண்டத்தின் கேள்வி 8% ஆல் வீழ்ச்சியடைகின்றது.
   3) பொதுவாக மக்களது வருமானம் அதிகரிக்கின்றபோது ஒரு பகுதி மக்கள் X பண்டத்திற்கான கேள்வியில் 15% அதிகரிப்பை ஏற்படுத்த மற்றைய பிரிவினர் 8% பண்டத்திற்கான கேள்வியைக் குறைத்தனர். இதைப்பற்றி விளக்குக.

### பிரிவு 'ஆ'

**இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.**

05. 1) தன்னிச்சையான நுகர்வு, தன்னிச்சையான முதலீட்டு மட்டம் என்னும் கருத்தை விளக்குக.
   2) பேரண்ட பொருளாதார தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
   $C = 180 + 0.8Yd, I = 150, G = 250, T = 100.$
   C - நுகர்வு, I - முதலீடு, G - அரச செலவு.
   a. சமநிலை தேசிய வருமான மட்டம் யாது?
   b. முதலீடானது 50M ஆல் அதிகரிக்கின்றபோது சமநிலை மட்டம் எவ்வாறு மாற்றமடையும்?
   c. நிறை தொழில்மட்டத் தேசிய வருமானம் 3250M ஆக இருப்பதற்கு முதலீடானது எவ்வளவால் எவ்வாறு மாற்றமடைய வேண்டும்?

06. 1) மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் வருமான வட்டப்பாய்ச்சல் மாதிரி ஒன்றை வரைந்து அவற்றின் பிரதான எடுகோளை விளக்குக.
   2) தேசிய வருமானக் கணிப்பீட்டில் காணப்படும் குறைபாடுகள் யாவை?
   3) தேசிய வருமானத்தரவுகள் அபிவிருத்தியை அளவிடப் போதுமானதா?

07. 1) நிறைபோட்டிச் சந்தை ஒன்றில் சந்தைத்தோல்வி (Market Failure) எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை விளக்குக.
   2) எல்லைச் செலவு (Marginal Cost), சராசரி மாறும் செலவு (Average Variable Cost) என்பவற்றை வேறுபடுத்துக.
   3) அளவுத்திட்ட சிக்கனங்களும் சிக்கனமின்மையும் விளக்குக.
   4) செலவுக்கோட்பாட்டில் உத்தம இயலளவு, மிகை இயலளவு, மேலதிக இயலளவு ஆகியவற்றை விளக்குக.

(நிறைவுற்றது)

ஆசிரியர்:- V.முரளி B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



பொறுமை, நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள். மாற்று மத நண்பர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடியும். உறவினர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மற்றவர்களின் நிர்ப்பந்தங்களுக்கு ஆள்படலாம்.

### இடபம்




மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். சிக்கலான பிரச்சினை ஒன்றை சாமர்த்தியமாக செயற்பட்டு வெற்றிகரமாக முடிப்பீர்கள். பெண்கள் வழியில் சுபச் செலவுகளை சந்திக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தேடி வரலாம். வழக்கமான பணிகளை தடையின்றி முடிப்பீர்கள்.

### மிதுனம்



வெளியூர்களிலிருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு, முக்கிய விடயமாகப் பேசலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளால் சோர்வடையலாம். சிக்கனமான இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு ஏற்படும். பணிபுரியும் இடத்தில் சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபடலாம். கனவுத் தொல்லையுண்டு.

### கடகம்



சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். அலைந்து திரிந்து முடிக்க நேரிடுமென நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

### சிங்கம்



தொழில் ரீதியான விமர்சனங்களை எதிர் கொள்ளலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். பல நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை எதிர்பாராமல் திடீரென சந்திக்கலாம். நீங்கள் செய்ய நினைத்த காரியம் ஒன்றை செய்யவிடாமல் குடும்ப உறுப்பினர்கள் தடை போடலாம்.

### கன்னி



பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் ஒருவர் உங்களின் செயற்பாடுகளை பாராட்டலாம். அடமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கும் வாய்ப்பு உருவாகும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். புதிய அனுபவம் பெறலாம்.

### துலாம்



நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். மற்றவர்கள் கைவிட்ட வேலை ஒன்றை நீங்கள் செய்வீர்கள். உறவினர்களுக்காக உங்களின் வேலைகளை விட்டு விட்டு அலைவீர்கள். பல நாள்களாக செல்ல நினைத்த இடங்களுக்கு செல்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும்.

### விருச்சிகம்



திடீர் பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் காத்திருக்கும். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி வருத்தம் அடையலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சிலரின் ஏச்சுக்கு ஆள்படலாம்.

### தனுசு



பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்களை, நண்பர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். பயணத் தடைகளால் கோபம், எரிச்சல் அடையலாம். நல்லவரென நம்பிய ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம்.

### மகரம்



உற்சாகம், தெம்புடன் செயற்படும் நாள். அரசியல் தொடர்புடையவர்கள் முக்கிய செய்திகளைக் கேட்கலாம். பிறரின் தயவை எதிர்பாராமல் அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்வீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனைவி வழி உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்.

### கும்பம்



அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் பெறும் நாள். மற்றவர்கள் செலவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. கணவன், மனைவி இடையே அன்யோன்யம் உண்டாகும். புதுமை படைக்கும் நாள்.

### மீனம்



சேமித்த பணத்தை திடீரென செலவழித்து விட்டு, மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். பிள்ளைகள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். சிறிய விடயத்திற்கு பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் பணிபுரியும்
செல்வி மங்களராணி அவர்களின்
அன்புத் தந்தை
**சம்பந்தக்குருக்கள்**
**சட்டநாதக்குருக்கள்**
(மூத்த விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள்)
09.07.2010 அன்று இறைபதம் எய்தினார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகளுக்கு இலங்கை முதலீட்டுச் சபை யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், அலுவலர்கள்,**
**இலங்கை முதலீட்டுச் சபை,**
**யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயம்.**

(98212)

## மரண அறிவித்தல்



**சின்னத்துரை லெட்சுமணராஜா** (நாச்சிமார் கோயிலடி)

64,1/1, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை லெட்சுமணராஜா நேற்று முன்தினம் (12.07.2010) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐசே. சின்னத்துரை- இராசம்மா தம்பதியரின் புத்திரனும் மனோன்மணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை- நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சின்னத்தங்கம் (மகேஸ்வரி), ராஜகோபால், மகேஸ்வரி (கனகம்மா), பாலச்சந்திரன், புலேந்திரன், தவமணிதேவி, வரதராஜா ஆகியோரின் சகோதரனும் சசிகலாதேவி (லண்டன்), சந்திரகுமார் (அமெரிக்கா), சற்குணராஜன் (பௌதிகவியல் ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), சந்திரசேகரன், சசிகரன் (கனடா), சசிரேகா (அபிவிருத்தி உதவியாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதராஜா (லண் டன்), அகிலா (அமெரிக்கா), ரஜனி, லதா (கனடா), வாசவன் (ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், நளாஜினி, தாட் சாயினி (லண்டன்), பிரணவன், குமரன் (அமெரிக்கா), வினோஜ், வசீகரன், விதுசன் (கனடா), மிஜங்கன், விஹுக்ஷன், சஞ்ஜீவினி ஆகி யோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2010) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
இல.1014, பெரியகுளம் ம.வி. முன்,
K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி.
(100539)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 14

மாணிக்கவாசகர் சுவாமி குருபூசை தினம் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழக்கம் பரை, சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவ பூமி முதியோர் இல்லத்தில் நடைபெற வுள்ளது.

அன்றையதினம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும்.

(204)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 14

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 24ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(204)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**தியாகராசா**
**வள்ளிநாயகிதேவி**

தோற்றம் 05.07.1954 மறைவு 24.06.2009



அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் இருப்பிடமாய்
பண்பின் பொக்கிஷமாய்
இடர் தீர்க்கும் மருந்தாய்
இதயத்தில் உறைந்த எம் தாயே!
துணையிருப்பாய் தொடர்ந்திருப்பாய்
என்றிருந்தோம் கவலையற்று
உம் செல்வங்களை விட்டுப்போக
என்ன குறை நாம் விட்டோம்
சொல் தாயே!
தீரவில்லை எம் சோகம்
ஆறவில்லை எம் மனங்கள்
ஆறுதலாய் யாருமில்லை
அரவணைக்க வா தாயே!
வழிந்தோடும் விழிநீரை
துடைத்திட வராது
எங்கு சென்றீர்!
எம் நினைவுகளை மறந்து
காத்திருப்போம் பல ஜென்மம்
மீண்டும் உம்
கருவறையில் வந்துதிக்க
அதுவரை பொறுத்திருப்போம்!
உம் இனிய நினைவுகளுடன்
ஆருயிர் தாயே உம் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

ஆறாத்துயரில்:
**குடும்பத்தினர்.**
தம்மளை, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
(100522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோய் ஒரு சமூக வியாதியா!






மனநோய் ஒரு சமூக வியாதியா! மனநோய் ஒரு சமூக வியாதி. ஆடையைக் கிழித்துக்கொண்டு அலைபவர்கள் மட்டும் மனநோயாளிகள் அல்ல. ஆசைகள் நிறைவேறாதவர்கள், விருப்பங்களை அடக்கிக் கொண்டவர்கள், அடக்கபடுபவர்கள் என எல்லோரும் எப்போதாவது மனநோய் அறிகுறிகளை வெளிபடுத்துவார்கள்.

சமுதாயத்தில் ஏற்ற, இறக்கங்கள் பின்பற்றப்படும்வரை மனவியாதிகள் இருக்கும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். உளவியலின் தந்தையாகப் போற்றப்படும் சிக்மட் பராய்டு, பண்பாட்டு உணர்ச்சியால் உணர்வைக் கட்டுபடுத்துவதும் மனநோய் பாதிப்புக்குக் காரணம் என்று கூறினார். இன்பமும் துன்பமும் மனதால் வருகிறது என்பதை உணராதபோது அவன் சுயநிலை இழக்கிறான். உளவியல் பாதிப்பு வெளிபடத் தொடங்குகிறது. மற்றவர்களால் மனநோயாளி என ஒதுக்கப்படுகிறான். உடல் திடகாத்திரமாக இருந்தும் மனம் திடமாக இல்லாவிட்டால் அவனைச்சமுகம் மனிதனாகக் கருதாது.

மனவியாதியும் மற்ற வியாதிகள்போல குணபடுத்தக்கூடியதே. ஆனால் சமுகம், பாதிக்கபட்டவருடன் அவரது குடும்பத்தையே ஒதுக்குவதால் யாரும் துணிந்து மனநல சிகிச்சையை முதலிலேயே நாடுவதில்லை. சிந்தனை, உணர்ச்சி, பண்பியல் இவற்றின் குறைபாடுகளே மன நோயின் அறிகுறிகளாகும். வழக்கத்துக்கு மாறாக பேசுவது, சொன்னதையே சொல்வது சிந்தனை குழப்ப அறிகுறிகளாகும். கல்வி அறிவிற்கும், கலாச்சாரத்திற்கும் பொருந்தாத முடநம்பக்கை, அச்சம் காரணமாக எழும் தேவையற்ற பயம், நம்பக்கை, இயல்பான உணர்வுகள் அடங்காமல் வெளி படுவது மனநோய் வெளிபாடுகளாகும். கடவுள் தோன்றுவதாகவும், ஏதோ ஒலி கேட்பதாகவும், வாசனை வருவதாகவும், யாரோ தங்களை தொட்டுத் துன்புறுத்துவதாகவும் கூறுவதும் சில அறிகுறிகள் தாம். ஞாபகசக்தி குறைவதும், தூக்கம் குறைவதும் மன பாதிப்புகளின் வெளிபாடுகளே. அறிகுறிகளை சரியாக கவனிக்காவிட்டால் மனநோய் முதிர்கிறது. இதில் எண்ணம் தொடர்பான முதிர்ந்த மனநோய்கள் இருவகைபடும். அவை: முளை பாதிப்பது, முளை பாதிக்காத மனம் சார்ந்த பாதிப்பு.

இதன் முதல்கட்டமாக மனச் சிதைவு ஏற்படுகிறது. பகை, வெறுப்பு, அலட்சியம், அகம்பாவ எண்ணம் கொண்டவர்களுக்கு பின்னாளில் சந்தேகம் சார்ந்த மனச் சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது. மனநலக் குறைவு உடல் நோய்களையும் தோற்றுவிக்கும். ஏனெனில் மனமும், உடலும் இணைபுள்ளவை. உடலில் நோய் ஏற்பட்டால் கோபம், எரிச்சல், சோர்வு போன்ற மனப் பாதிப்புகள் வெளிப்படும். அதுபோல மனஅதிர்ச்சி ஏற்படும்போது வியர்வை, நடுக்கம் போன்ற உடல் பாதிப்புகள் ஏற்படும்.

எனவே உளவியல் மாற்றங்களால் சில வியாதிகளும் தோன்றும். உணர்வு கொந்தளிப்பால் ஆஸ்துமா, குடற்புண் உள்ளிட்ட ஜீரண மண்டல வியாதிகள் ஏற்படும். பயம், நாணம், கோபம் போன்ற உணர்வு அடக்கத்தால் தோல் வியாதி, இரத்த அழுத்தமும், சுரப்பிகளில் பாதிப்பும் ஏற்படுகிறது. பயம், அதிர்ச்சி போன்றவற்றால் மூளை நாளங்கள் பாதிப்பு, மாதவிடாய் கோளாறுகள் தோன்றலாம். மூளையில் ஏற்படும் பலவித நோய்களாலும் மனநோய் உருவாகும். ஜன்னி நோய் ஒரு வித பதற்ற நிலை மனவியாதியே. மதுப்பழக்கம், நாளமில்லாச் சுரப்பிகளின் பாதிப்பு இதற்குக் காரணமாகும். சிலருக்கு நினைவுகள் அடிக்கடி மாறுவதால் மனக்குழப்பம் ஏற்படலாம். இரத்த ஓட்டம் குறைவு, மூளையில் உருவாகும் கட்டியால் நாள்பட்ட மூளைப்பாதிப்பு நோய் ஏற்படலாம். இதனால் மனம் ஆற்றல் இழந்துபோகும். உணர்ச்சி வசப்படுவதால் பலவித வலிப்பு நோய்கள் ஏற்படுகின்றன. இதை மருந்துகளால் குணபடுத்தலாம்.

மனவளர்ச்சி மற்றும் சூழ்நிலைக் குறைபாடுகள் குழந்தைகளின் கற்றல் திறனில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது பின்னாளில் வேறு மனநோய்களைத் தோற்று விக்கலாம். பொய், களவு, சண்டைக்குச் செல்லுதல், தீ வைத்தல் போன்றவற்றில் ஈடுபடும் குழந்தைகள் சமுக விரோதிகளாக வளரும் ஆபத்து உண்டு. இதற்குக் காரணம் மனப்பாதிப்புகளே. இவர்கள் புத்திசாலிகளாகக் காணப்படுவார்கள். ஆனாலும் தாங்கள் விரும்பியதை அடைவதிலேயே குறியாக இருப்பார்கள். பாரம்பரியம், சுற்றுச்சூழல், மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் அவர்கள் பாதிக்கப்படக் காரணமாக அமைகின்றன.

குழந்தைப் பருவ ஏக்கங்கள், கோபங்கள், பெற்றோரின் கண்டிப்பு ஒருவரை மதுபழக்கத்திற்கு அடிமையாக்கலாம். மது மன நிலையை மாற்றுவதால் மனநோய் தோன்றும். ஒவ்வொரு மனநோயாளிக்கும் மிகவும் தேவையானது ஒரு நண்பனே என்கிறார் உளவியல் நிபுணர் கிளிபோர்டு பயர்ஸ்.

- தரு -

# உயிருள்ள சிற்பங்கள்

உளியின் வலியைத் தாங்கியதால்
உதவாத கற்கள் கூட
உலகமே வியக்கும்
சிற்பங்களாகின்றன

இறைவன் என்ற சிற்பி
உன்னை செதுக்குகின்றான்
ஆகவே......
வாழ்க்கையின் வலிகளை
தாங்கிக் கொள்ளுங்கள்.......

உலகமே வியக்கும்
உயிருள்ள சிற்பமாக
நாளை நீங்கள்.

த.தர்சினி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

# கண் வைத்தியர்களுக்கு ஆப்பு: கைத் தொலைபேசி மூலம் கண் பரிசோதனை



கண்களைப் பரிசோதித்து கண்ணாடி அணிவது எல்லாம் ஒரு காலம் ஆனால் இப்போது கைத்தொலைபேசி மூலம் எளிதாக மருத்துவமனைக்கே செல்லாமல் நம் கண்ணைப் பரிசோதிக்கலாம்.

கண்களைப் பரிசோதிக்க எத்தனையோ பல புதிய வழிமுறைகள் இருந்தாலும் அத்தனையும் தாண்டி இப்போது புதிதாக ஒரு கைத்தொலைபேசியை மற்றும் சிறிய கருவி துணைகொண்டு நம் கண்ணைப் பரிசோதித்துக்கொள்ளலாம் எந்த மருத்துவரும் தேவையில்லை எந்த மருத்துவமனைக்கும் செல்ல வேண்டாம். காலத்தின் வேகமான வளர்ச்சியால் விஞ்ஞானிகள் இந்தப் புதுவிதக் கருவியை உருவாக்கியுள்ளனர். இந்தக் கருவியை நம் கைத்தொலைபேசியில் பொருத்திவிட வேண்டும் இதற் க்கான விண்ணப்பமும் இலவசமாகக் கிடைக்கிறது. இதை நிறுவிக்கொண்டு நம் கண்ணை எளிதாகப் சோதிக்கலாம். எந்தக் கண்ணாடி லென்ஸ் அளவு என்ன என அனைத்தையும் நமக்குக் காட்டிவிடும் இந்த கருவியின் ஹார்டுவேர் சிக்கிராப் 2010 கொண்டும் இதற்க்கான பெயர் நெட்ரா என்றும் வைத்துள்ளனர்.

அனைத்து ஸ்மார்ட்போன் மற்றும் சேம்சங்,கூகுள் நெக்சஸ் கைத்தொலைபேசியில் இது சோதிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திலே அனைவரின் கவனத்தை மட்டுமல்ல நம்பிக்கையையும் பெற்றுள்ளது. இந்த மாத இறுதியில் இந்தக்கருவி விலைக்குக் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இரத்த அழுத்தமா...! கூல் கூலாத் தண்ணி குடிங்க



நிறைய தண்ணீர் குடிப்பதால் பல்வேறு பலன்கள் இருப்பது நமக்குத் தெரியும். லேட்டஸ்டாக, இரத்த அழுத்தத்தைச் சீராக வைக்க, நரம்பு உறுதி, சக்தி அதிகரிப்புக்கு தண்ணீர் உதவுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ளது வண்டர்பல்ட் பல்கலைக்கழக மருத்துவ மையம். அதன் ஆராய்ச்சியாளர்கள் குழு, தேவையான அளவு தண்ணீர் குடிப்பதால் ஏற்படும் மருத்துவ நன்மைகள் பற்றி ஆராய்ந்தனர். தண்ணீர் குடித்ததும் அது இரத்த மணிகளில் அடைப்புகளைக் கரைந்து ஓடச்செய்வது ஆய்வில் தெரியவந்துள்ளது. அதன்மூலம், உடலில் இரத்த அழுத்தம் சீராகப் பராமரிக்கப்படும்.

எனவே, இரத்த அழுத்த நோயாளிகள் மயக்கம், தலைசுற்றல், வாந்தி உணர்வு போன்ற அறிகுறிகளை உணர்ந்தால், ஒரு டம்ளர் குளிர்ந்த தண்ணீர் குடிப்பது நல்லது. அத்துடன், நரம்பு மண்டலத்தின் செயற்பாட்டையும் தண்ணீர் உறுதிப்படுத்துகிறது. அன்றாட வேலைகளின்போது ஏற்படும் சக்தி இழப்பைக் குறைக்கிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து ள்ளனர்.

இதுபற்றி வண்டர்பல்ட் பல்கலைக்கழக மருத்துவ மைய பேராசிரியர்கள் கூறுகையில், இரத்த அழுத்தம் குறித்த விழிப்புணர்வை தண்ணீர் ஏற்படுத்துவதும், நரம்பு மண்டலத்தை உறுதியாக்குவதும் தெரியவந்துள்ளது. இந்தப் பரிவில் கடந்த 10 ஆண்டுகளாக நடந்த ஆராய்ச்சிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது என்றனர்.

- நன்றி:- மருத்துவ இணையம்.

# நீண்ட நேரம் கணனி பார்ப்பவர்களுக்குத் தூக்கம் பறிபோகும்



கணனி மற்றும் ஐபாட் திரையை அதிக நேரம் பார்ப்பவர்களுக்கு, நிம்மதியான தூக்கம் வருவதில்லை என, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கணனித் திரையை நீண்ட நேரம் பார்ப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு ஒன்றை நடத்தினர். அதில், கணனித் திரைகளை நீண்ட நேரம் பார்ப்பவர்களுக்கு, நாளடைவில், தூக்கம் வருவதில் சிக்கல் ஏற்படுவதாகத் தெரிய வந்தது. கணனித் திரையிலிருந்து வெளிப்படும் அதிக சக்தி வாய்ந்த ஒளிக்கற்றைகள், மனித மூளையின் வழக்கமான செயற்பாடுகளைப் பாதிப்பதும் தெரியவந்தது.

ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி, கணனி போன்ற மின்னணு சாதனங்களிலிருந்து வெளிப்படும் நீல நிற வெளிச்சம், மெலட்டோனின் ஹார்மோன் செயற்பாட்டைப் பாதித்து, தூக்கத்தைக் கெடுப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மனிதனின் கண்கள், நீல நிறத்தை பகல் பொழுதாக எடுத்துக்கொள்ளும் தகவமைப்பைப் பெற்றுள்ளது என, அவர்கள் தெரிவிக்கின்றனர். இரவில் நிம்மதியாகத் தூங்க, நல்ல புத்தகங்களைப் படிப்பது சிறந்த வழி. தொடர்ந்து கணனி பார்க்கும்போது, அதிலிருந்துவரும் வெளிச்சத்தைக் கொண்டு மெலட்டோனின் ஹார்மோன் இரவில் தூக்கம் வருவதைத் தவிர்த்து, விழிப்புடன் இருக்க, மூளையைத் தூண்டும். இதனால், தூக்கம் வருவதில் நாளடைவில் சிக்கல் எழும் என, நார்த்வெஸ்ட் பல்கலைக்கழக மூளை அறிவியல் துறை பேராசிரியர் பல்லீஸ் சீ தெரிவித்துள்ளார்.

- நன்றி:- தொழில்நுட்ப இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி, அமைச்சர்கள் வருகையை ஒட்டி
# கிளிநொச்சியில் பாதுகாப்பு இறுக்கம்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சிக்கு இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் 44 அமைச்சர்கள் வருகை செய்வதையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்துக்கு அண்மையில் உள்ள ஹோட்டலில் இன்று காலை இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டம் அதன்பின் நடைபெறவுள்ள வடக்கின் வசந்தம் திட்டக் கூட்டம் ஆகியவற்றில் பங்குகொள்ள ஜனாதிபதி, அமைச்சர்கள் வருகின்றனர்.

இவர்களின் வருகையால் என்றுமில்லாத அளவுக்குப் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வுகளை ஒட்டி சில வீதிகளும் பகலில் போக்குவரத்துக்கு மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை அடுத்து வன்னியில் பல நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் பங்குபற்ற விருப்பதால் நகரை அடுத்துள்ள பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு அமைச்சுக்களின் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் என நூற்றுக் கணக்கில் அதிகாரிகள் நேற்றுக் காலையில் இருந்து கிளிநொச்சிக்கு வந்தவண்ணம் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-405)

## சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைகள் நாளை

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினூடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சையும் கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுனர் பரீட்சார்த்த ப்ரீட்சையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாவட்டச் செயலக மண்டபத்திலும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

எனவே பரீட்சார்த்திகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுகளுடன் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு சமூகமளிக்குமாறு மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.(50-201)

## புலமைப் பரிசில் மாணவருக்கு மாந்தையில் செயலமர்வு

மன்னார், ஜூலை 14

இளைஞருக்கான நாளை அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் வழி நடத்தலின் விளைவாக மன்னாரிலும், மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலும் கடந்த 10ஆம் திகதி ஐந்தாம்தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயலமர்வு ஒன்று இடம்பெற்றது. இச்செயலமர்வில் 900 மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.

மன்னார் பிராந்தியக் கட்டளை அதிகாரி மைத்திலி டயஸின் வேண்டுகைக்கிணங்க, 215 ஆம் படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் நலிந்த மாறாவித்தராண இச்செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தார்.

வடமாகாணத்தில், மன்னார் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலேயே இச் செயலமர்வு நடைபெறுவதாகவும், மன்னார் இராணுவம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகவே இச் செயலமர்வு நடைபெறுவதாகவும் மைத்திரி டயஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இச் செயலமர்வில் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் சுமார் 500 மாணவர்களும், அடம்பன் மகா வித்தியாலயத்தில் சுமார் 400 மாணவர்களும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். (50-80)

## நெடுங்கேணி பிரதேச செயலகத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடம் இன்று திறப்பு

### பஸில் ராஜபக்ஷ திறந்து வைப்பார்

வவுனியா, ஜூலை 14

வவுனியா வடக்கு - நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தின் மாடிக்கட்டடம் யுத்தத்தினால் சேதமடைந்திருந்தது. தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணியிலுள்ள இக்கட்டடத்தைத் திறந்து வைக்க இன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் உட்படப் பிரமுகர்கள் வருகைதர உள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரதேச செயலர் எஸ்.பரந்தாமன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

இதேவேளை இப் பிரதேச செயலர் பிரிவில் 5000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன. இவர்களுக்கு தகரம், 8 பைக்கற் சிமெந்து என்பன உள்ளிட்ட வழமையான உதவிகளைப் பிரதேச செயலர் வழங்கி வருகின்றார்.

ஐ.ஒ.எம். நிறுவனம் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தடி, தறப்பாள் என்பவற்றை விநியோகித்து வருகின்றது. பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும் முழுமூச்சுடன் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றனர். (1-121)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி சிவகுமார் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கரைச்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிற்பகல் 12.30 இற்கு பாடசாலையின் உயர்தர மாணவர்மன்றத் தலைவர் எஸ்.யாதவபாலன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மதிய போசனத்தைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்களின் உரையோடு பாடசாலை அதிபர் அ.பங்கையற்செல்வன் அவர்களின் உ.ரையும் இடம்பெற்றது.

பிரதம விருந்தினரான கிளிநொச்சி மாவட்ட நீதிபதி தனதுரையில் மாணவர்கள் சட்டத்தை மதிக்கும் பழக்க வழக்கங்களைப் பாடசாலைகளிலேயே பழக வேண்டும் என்றும் மாணவர்கள் அதிகளவில் உயர்கல்விக்காகச் சட்டத்துறையை தெரிந்தெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (50-405)




## தமிழகத்திலிருந்து திரும்பிய நான்கு அகதிகள் மன்னாரில் கைது

மன்னார், ஜூலை 14

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்ற குடும்பம் ஒன்று நேற்றுமுன்தினம் தலைமன்னாரிலுள்ள மணல் தரையில் வந்திறங்கிய வேளையில் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னார் காவல்துறையினர் இவர்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் நீண்ட காலமாக அகதியாகத் தங்கவைக்கப்பட்டிருந்த நால்வர் தோணியொன்றில் இலங்கைக்கு தப்பிவந்த வேளையில் தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரையும் இம்மாதம் 22ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கும்படி மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி கே.ஜீவராணி கட்டளையிட்டார். (1-80)

## கிளிநொச்சியில் பெய்த மழையால் மீளக்குடியமர்ந்த மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சியில் பெய்த மழையால் கிளிநொச்சிப் பகுதியில் மீள்குடியேறிய மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் கூரைகளற்ற வீடுகளிலும், தறப்பாள்களிலுமே அதிகம் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை திடீரென பெய்த மழை பெரும் அவலத்துக்குள்ளாக்கியது. இவர்களது வீடுகளுக்கும், தறப்பாள்கள், கொட்டில்களுக்குள்ளும் நீர் புகுந்து பல பாவனைப் பொருள்களைப் பாழாக்கியது.

புதிதாக மீள்குடியேறியோர் தமது காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்ததால் பொருள்களை மரங்களுக் குக் கீழே வைத்திருந்தனர். மழைவரும் என அவர்கள் எதிர்பாராத வேளையில் மழை பெய்ததால் பெரும் அசௌகரியங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. (1-405)

## மருத்துவ நடமாடும் சேவை மன்னாரில் திங்களன்று ஆரம்பம்

மன்னார், ஜூலை 14

மன்னாரில் மூன்றுநாள் வைத்திய நடமாடும் சேவையொன்று நேற்று முன்தினம் திங்கள் முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மன்னார்- வண்ணாமோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இச் சேவை நடைபெறுகின்றது.

இலங்கை 'நாற்சதுர சுவிசேச சபை', இலங்கை இராணுவம் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரையிலும் இச்சேவையை நடத்துகின்றது. இதற்காக அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து மற்றும் இலங்கையின் பிரபல வைத்தியர்கள் இச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் சார்பில் மன்னார் பிராந்தியத்தின் 215 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் லிக்கும் லியனகே, சிவில் நிர்வாக அதிகாரி கேணல் நலிந்த மஹாவித்தாரண, 212 ஆவது படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் மாயாசிங்க உள்ளிட்ட பல உயர் அதிகாரிகளும், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதுபோன்ற மேலும் பல நடமாடும் சேவைகள் மல்லாவி, பூநகரி, நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், நட்டாங்கண்டல் ஆகிய இடங்களில் முறையே 15,17, 18,19,20, 21,22,23,24 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-80)

## 12 உப அஞ்சல் அலுவலகங்களை வன்னியில் மீளத்திறக்க ஏற்பாடு

### பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் தகவல்

மன்னார், ஜூலை 14


வன்னியில் மூடப்பட்டிருக்கும் நிலையிலுள்ள 12 உப அஞ்சல் அலுவலகங்களை மீளவும் திறப்பதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்படும்.

வவுனியா மாவட்டப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஐந்து உப அஞ்சல் அலுவலகங்களும், முல்லைத்தீவில் நான்கு உப அஞ்சல் அலுவலகங்களும், பரந்தனில் மூன்று உபஅஞ்சல் அலுவலகங்களும் மீளத்திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் குஞ்சுப்பரந்தன், விசுவமடு, அளம்பில் போன்ற பகுதிகளில் உள்ள மூன்று உப அஞ்சல் அலுவலகங்கள் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-224)





கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்றுப்புலம் மற்றும் கோணாவில் பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்களை அண்மையில் அங்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சந்தித்து அவர்களுடைய குறைநிறைகளைக் கேட்டறிவதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சதுமலை தெற்கு, சாவற்கட்டை முகவரியாகக் கொண்ட கமலேஸ் விக்கினராசா என்பவரது தே.அ.அட்டை (813655012V) கூழாவடிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 0776280964

## வீடு தேவை

யாழ்.நகரில் இருந்து 7Km தூரத்திற்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு விலைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
071 1595220, 077 2844844 (100646)

## துர்க்கா திருமண சேவை

1977 ஆம் ஆண்டு, பூசம், செவ்வாய் அற்ற, மொத்த பாவம் 68, கணனி பொறியியலாளர், கனடா சிற்றிசன் தற்போது வந்துள்ள மணமகனிற்கு அழகிய, B.Sc. படித்த மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
021 3211814, 021 4591417

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குழி, இல.57, பழைய பூங்கா வீதியில், 2½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகளைக் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 5843873

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **763**
சீட்டிழுப்பு திகதி **12.07.2010**

எழுத்து: **N**

வெற்றி இலக்கங்கள்: **01 26 52 69**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 19,233,640.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 10 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 308 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 610 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15004 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8522 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 213881 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 33648 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,217,860.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 19,737,280.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்மகிழ்: 25.06.1924

விண்மகிழ்: 14.06.2010

## அமரர் சரவணமுத்து இராமநாதன்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

கடந்த 14.06.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (14.07.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அதில் பங்குபற்றுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தியோருக்கும் கடிதங்கள், தந்திகள், தொலைபேசி, பத்திரிகையூ டாக அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மேலும் தேவைப்பட்ட போதெல்லாம் வைத்திய ஆலோசனைகள் வழங்கியுதவிய வைத்திய நிபுணர்களுக்கும் எமது சிரம்தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீலியம்பனை, மல்லாகம்.
தொ.பேசி: 0213216300

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி நடேசமூர்த்தி J.P.

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, அச்சுவேலி)

தோற்றம் 22.07.1954

மறைவு 25.06.2009

பாரினில் பல உறவுகள் இருந்தென்ன
பலகோடி சொத்து சுகங்கள் இருந்தென்ன
உங்கள் அன்பு உறவுக்கு நிகராய் எது உண்டு
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை
எம் துயர் ஏங்கித் தவிக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, தோப்பு, அச்சுவேலி.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மன்னார் சென்.சேவியர் கல்லூரி, பருத்தித்துறை தேவரையாளி இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரிகளின் அணித் தலைவர்களுக்கு யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தின் கணக்காளர் கே.கமலரூபன் வெற்றிக் கிண்ணங்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
*(படங்கள்: தமிழினியன்)*

# நிதுஷாந்தின் அதிரடி கைகொடுக்க 82 ஓட்டங்களால் வென்றது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையில் நடைபெறும் சுற்றுப்போட்டியில் நிதுஷாந்தின் அதிரடி கைகொடுக்க வெற்றியைத் தனதாக்கிக்கியது சென்.ஜோன்ஸ் 'பி' அணி.

மானிப்பாய் இந்துக் கல்லூரியும், சென்.ஜோன்ஸ் 'பி' அணியும் மோதிய ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் 'பி' அணி 82 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி (பி) அணியின் இறுதி துடுப்பாட்டவீரர் நிதுஷாந்தின் இறுதி நேர அதிரடியால் 45.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நிதுஷாந் ஆட்டமிழக்காமல் 8 பவுண்டறிகள் அடங்கலாக 43 ஓட்டங்களினையும் துவாரகன், துஷ்யந்தன், ஜெனிபர் ஆகியோர் முறையே 22,21,14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழினியன், டில்ஷான், சுப்ரஷன், வினோதராஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களினையும், சபேசன்,சுமன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் 179 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரி (பி) அணியினரின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களினை மட்டும் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வினோதராஜ் மட்டுமே சிறப்பாக ஆடி 24 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் வாகீசன் 10 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும், சி.சயன் 7 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும், திசான், விதுஷன் ஆகியோர் இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (1)

# மெய்வன்மைச் சங்கத்தின் தடகளப் போட்டி; அநுராதபுரத்தில் நடத்த ஏற்பாடுகள்

வலி.வடக்கு,ஜூலை14

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் அடுத்தமாத நடுப்பகுதியில் நான்கு மாகாணங்களுக்கான தடகளப் போட்டிகள் அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளின் கல்வி வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகளுக்கு இடையே நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்காக வட மாகாணக் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

16 வயது, 18 வயது ஆண்கள், பெண்கள் பிரிவினர்களுக்காக நடத்தப்படும் போட்டிகளில் ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் தலா இருவர் ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவதுடன் இதில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களே மாகாணங்களுக்கு இடையே அநுராதபுரத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவுள்ளார்கள்.

16 வயதுப் பிரிவினருக்கு இப்போட்டிகளில் 100 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், 100 மீற்றர் தடைதாண்டல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டு போடுதல், தட்டெறிதல் மற்றும் 4+100,4+200 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளும்,

18 வயதுப் பிரிவினருக்கு 100 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர். ஆண்கள் 110 மீற்றர் தடை தாண்டல். பெண்கள் 100மீற்றர் தடை தாண்டல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டு போடுதல், தட்டெறிதல், 4+100 மீற்றர், 4+400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இது சம்பந்தமான சுற்று நிரூபங்கள் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் உரிய கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஊர்காவற்றுறையில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை,ஜூலை14

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ சன்சமூக நிலையத்தின் ஐம்பத்தொன்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகங்களுக்கிடையே பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையமும், காந்திஜி விளையாட்டுக்கழகமும் இணைந்து போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளன.

உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், நீச்சல், ஓட்டப் போட்டிகள் உட்பட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளிலுள்ள பல்வேறு விளையாட்டுக் கழகங்களும் இப்போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றன. (1-21)



செல்வி சயனொளிபவன் சாமலி — செல்வி சற்குணநாதன் கஜிதா

செல்வி ஜோர்ஜ் சங்கீதாஜோய்ஸ் — செல்வி ஜேசுதாசன் சோபிகா

செல்வி யோகபால் துஸ்யந்தி — செல்வி ஸ்ரீ காந்தரூபன் துஸ்யந்தி

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் தடகளப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ள பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை மாணவிகளைப் படங்களில் காணலாம்.
*(படங்கள் : 38)*

# வடமாகாணப் பாடசாலைகளின் தடகளப் போட்டிகள்; சாதனை படைத்த மேலும் சில வீர, வீராங்கனைகள்

வலி.வடக்கு,ஜூலை14

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. மேலும் சில முடிவுகள் வருமாறு,

**15 வயதுப் பிரிவு - ஆண் 100 மீற்றர்**

ஜே.ரமேஷ் சந்தியன் (மன்னார் சென்.சேவயர் ஆண்கள் கல்லூரி), மே.இம்மானுவேல் வைடிலன்சூசை (மன்னார் சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலம்), எஸ்.நிருத்தியன் (வவுனியா செக்கடிப்புலன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), அ.சரிஸ் டிலக்சன் (மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி).

**200மீற்றர்**

ஜோ.ரமேஷ் சத்தியன் (மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), க.பபுதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.தனுஷன் (வவுனியா நெலுக்குளம் மகா வித்தி யாலயம்), பே.இம்மானுவேல் வைடிலன் சூசை (மன்னார் சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்).

**400 மீற்றர்**

இ.ரதீஸ்வரன் (மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட சாலை), ம.மதுசன் (வடமராட்சி புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ் மகா வித்தியால யம்), த.அஜிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.ஜெதர்சன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**குண்டு போடுதல்**

க.துஷ்யந்தன் (கோப்பாய் தமிழ் வித்தியாலயம்), ஞா.மதுசன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி),மோ.விதுஜன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), நா.துர்க்காதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தட்டெறிதல் - 33.60 மீற்றர்**

ஞா.மதுசன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), பி.டினோசன் (வவுனியா பூம்பு கார் கண்ணகி வித்தியாயலம்), பி.சிவதர் சன் (வவுனியா அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலயம்), ஜே.ஈ.ஜெபிசெலன் (மன்னார் அல் அசூர் மகா வித்தியாலயம்).

**அஞ்சல் ஓட்டம் 4+100 மீற்றர்**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பெண்கள் - 100 மீற்றர்**


ம.ஜோய் காருண்யா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), வை.சிந்துஜா (மன்னார் கற்கிடந்த குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), இ.துஷா (மன்னார் புனிதவளனார் றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலை),ச.கஸ்தூரியா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்**

ம.ஜோய் காருண்யா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), பி.ஜெயந்தினி (வவுனியா கணேஸ்வரம் மகா வித்தியாலயம்), வி.ஜெனிதா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ஜெ.சிந்துஜா (மன்னார் கற்கடந்த குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை).

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில்பிறேம ஜயந்த, பிரதியமைச்சர் சரண குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹரி குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் ஆகியோர் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், எரிபொருள் நிலையத்தில் அமைச்சர் வியாபார நடவடிக்கையை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:நந்தன்)


MANGOS
Restaurant & Café

## சைவ உணவு விடுதி

கோவில் வீதி நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்.
Tel:-021 222 8294

யாழ் நல்லூரில் மீண்டும் றம்மியமான புதுப்பொலிவுடன்
மாங்கோஸ் உணவு விடுதி இன்று (14.07.2010)ஆம் திகதி பகல்,இரவு உணவுகளுடன்
கவர்ச்சிகரமான கூடாரங்களையும் இருக்கை வசதிகளையும் கொண்டு
சிறப்பாக ஆரம்பமாக உள்ளதால்
வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- இந்திய,இலங்கை சைவ சிற்றுண்டிகள்.
- மதிய உணவுவகைகள்
- இந்திய சைவ இரவு உணவுகள்.
- அனைத்து தோசை வகைகள்

* பூரி.
* பரோட்டா.
* சப்பாத்தி.
* கொத்து.
* பால்அப்பம்.
* இட்லி.

* மசாலா தோசை.
* வெங்காயத்தோசை.
* நெய்த்தோசை.
* பிளேன் தோசை.
* வெங்காய ஊத்தப்பம்.
* நெய் றோஸ்ட்.

வெகு விரைவில் உங்கள் விழா விருந்துபசாரங்களை இருக்கை வசதிகளுடனான உணவு பரிமாற்றங்களுடன் சிறப்பாக பெற்றுக்கொள்ளலாம்



## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775148602



## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில் கண்டிவீதியில் அறவளி நிறுவனத்திற்கு அருகாமை -யில் அமைந்துள்ள $9\frac{1}{4}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112 361185


## சட்டவியல் கற்கைநெறி மீள்பதிவுகள் 22ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கைத் திறந்த பல்லைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சட்டவியல் கற்கை நெறிக்கான மீள் பதிவுகள் எதிர் வரும் 22ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (50-201)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அபிவிருத்தி உத்தியோகத்தர்
வாசவன் சசிரேகா வின் பாசமிகு தந்தை

### சின்னத்துரை லெட்சுமணராஜா

அவர்கள் கடந்த 12.07.2010 அன்று இறைபதமடைந்தமையினால் எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயரடைந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரியின் வித்தக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்வியியற் கல்லூரி சமூகம்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
(100550)


## JOB OFFER

A start-up consultancy firm based in Jaffna is looking for ,
1) ***A Junior Programmer.:***
Job Scope
Able to design and develop computer programs that automate specific business processes.
Assist the Senior Programmer in day to day programming, and development work.
***Education:***
a.Bachelors degree in computer science / computer applications / IT. Fresher also welcome to apply.
OR
b.HND in Computer Science / IT With I year experience in Visual Basic Programming.
***Skills:***
c.The person should have good knowledge of the software development tools like visual basic, SQL Server, Crystal reports etc.
d.The candidate should have continuous learning habits and good analytical skills.
e.Database management knowledge highly desirable.
2)***Accounts Assistant***
Fresh graduates/ HNDA /AAT welcome
Reply with resume and **expected salary** to jffna @ activesoftsg.com
Closing Date: 25th July 2010

**Director:**
**Active Soft (Pvt) ltd.**



மற்றுமொரு புதிய ஆரம்பம்

இப்பொழுது
கிளிநொச்சியிலும்
வவுனியாவிலும்
உங்களது சேவையினை வழங்க...

## திருமுருகன் கொம் நெற்

கடந்த 10 ஆண்டுகளாக யாழ் மக்களுக்கு சேவையாற்றி வருகின்ற எமது நிறுவனம் கிளிநொச்சியிலும் - வவுனியாவிலும் எமது கிளை நிறுவனங்களை திறந்து வைப்பதில் மிகவும் பெருமகிழ்வடைகின்றது.

துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL WORLDWIDE EXPRESS
D-Link Building Networks for People
EPSON EXCEED YOUR VISION
Debug
Authorized Distributor in North

## புதுக்கடைத் திறப்பு விழா

எமது கிளை ஸ்தாபனங்களான இல. 44, மில் றோட், வவுனியாவில் 14.07.2010 புதன்கிழமை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபவேளையிலும் இல. 05, திருநகர், பிரதான வீதி, கிளிநொச்சியில் 15.07.2010 வியாழக்கிழமை அதே சுபநேரத்திலும்

LH. PIRABATH NIROSHAN
**Assistant General Manager**
Debug

அவர்களினால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. இதுவரை காலமும் எமது ஒவ்வொரு வெற்றியிலும் பங்காற்றிய எமது வாடிக்கையாளர்களுக்கு நெஞ்சம் நெகிழ நன்றியைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து எமது நிறுவனத்திற்கு பங்காற்றி மேன்மேலும் வளர்ச்சி பெற தங்கள் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாகத்தினர்.


## மரண அறிவித்தல்

### திருமதி விக்கிணேஸ்வரி சபாரத்தினம்



மயிலிட்டி தெற்கு, தென்மயிலையைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டி வவுணத்தம்பி வீதியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும் தற்போது இல.128, சங்கமித்தை மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான விக்கிணேஸ்வரி சபாரத்தினம் 10.07.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் சீவரத்தினம், சண்முகரத்தினம், அப்பையா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17.07.2010 சனிக்கிழமை கொழும்பு உதியணி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0112542910 (100607)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பேசியது மட்டும் அரசுக்கு வன்முறை; மீனவரை இலங்கை சுடுவது நன்முறையா?

## பொய் வழக்குகளை சட்டப்படி சந்திப்போம் என்கிறார் சீமான்



சென்னை, ஜூலை 14

எங்கள் மீது தமிழக அரசு போடும் பொய் வழக்குகளை நாங்கள் சட்டப்படி சந்திப்போமே தவிர ஒருபோதும் ஓடி ஒளிய நாங்கள் ஒன்றும் கோழைகளல்லர் என்பதை தமிழக அரசுக்குத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்று சீமான் கூறியுள்ளார்.

சீமானை பொலிஸார் கைதுசெய்து வானில் ஏற்றியபோது, அவர் தனது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றை செய்தியாளர்களிடம் கொடுத்தார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உங்களைச் சந்திப்பதற்கு முன்பு ஒரு வேளை நான் கைதுசெய்யப்பட்டால் சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள முடியாமல் போய்விடும் என்பதால் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். வன்முறையைத் தூண்டினேன் - பிரிவினையைத் தூண்டினேன் - இலங்கை - இந்திய நட்பைக் கெடுக்கும்படியாகப் பேசிவிட்டேன் என்றுதான் என் மீது வழக்கு போடப்பட்டுள்ளது.

எமது நாட்டில் மீனவர்கள் 501 பேரை இலங்கை அரசு சுட்டுவீழ்த்தியது வன்முறையைத் தூண்டும் செயல் இல்லாது, நன்முறையைத் தூண்டும் செயலா? எங்கள் மீனவர்கள் சுடப்படுவதைத் தடுங்கள் என்று பாதிக்கப்பட்டவர்களின் குரலாக நான் கத்தியதில் வன்முறை வந்து விட்டதா?

உலகமே இன்றைக்கு இலங்கையின் மஹிந்த ராஜபக்ஷ அரசு ஈழத்தமிழருக்கெதிராக போர்க்குற்றம் புரிந்திருக்கிறதா, இல்லையா என்பதை நிச்சயக்க ஐ.நா. மன்றம் மூலம் குழு அமைத்து ஆராயச் சொல்கிறது. ஆனால் இலங்கை அரசின் அமைச்சர் ஒருவர் விசாரணை நடத்த ஐ.நா. குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோமென மிரட்டுகிறார். சாகும்வரை உண்ணாவிரதமிருக்கிறார். அதை முடித்து வைப்பதற்கு இந்நாடகத்தின் சூத்திரதாரியான ராஜபக்ஷவே செல்கிறார்.

போர்க்குற்றம் செய்யாதவர்கள் என்றால் இப்படியெல்லாம் ஐ.நா.வை அவமானப்படுத்துவது ஏன்? விசாரணை நடத்த ஒத்துழைக்க மறுப்பதேன்? சுதந்திரமாகவும் நியாயமாகவும் விசாரணை நடத்த அனுமதித்தால் இலங்கை போர்க்குற்றவாளி நாடாக அறிவிக்கப்படும் என்ற அச்சத்தால் ஐ.நா. குழுவின் விசாரணைக்கு இவர்கள் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்பதுதானே உண்மை.

மிகச் சிறிய நாடான இலங்கை ஐ.நா. மன்றத்தையே அவமானப்படுத்தும்போது மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா அதைக் கண்டிக்க அஞ்சுவது ஏன்?

எங்கள் மீது தமிழக அரசு போடும் பொய் வழக்குகளை நாங்கள் சட்டப்படி சந்திப்போமே தவிர ஒருபோதும் ஓடி ஒளிய நாங்கள் ஒன்றும் கோழைகளல்லர் என்பதை தமிழக அரசுக்குத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழரின் மறுவாழ்வில் இலங்கை அரசு மெத்தனம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு



குற்றாலம், ஜூலை 14

ஈழத் தமிழர்கள் மறுவாழ்வுப் பணிகளில் இலங்கை அரசு மெத்தனமாக உள்ளது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு குற்றம் சாட்டியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் குழு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு கலந்து கொண்டு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தமிழர்கள் முள்வேலிக்குள் அகப்பட்டு அவதிப்பட்டு வருகின்றனர். அல்லல்படும் தமிழர்களின் மறுவாழ்வுக்காக இதுவரை இலங்கை அரசு எதுவும் செய்யவில்லை.

இதற்குக் காரணம் இந்திய அரசு மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து ராஜ உபசாரம் நடத்துவதே.

இந்திய அரசு வழங்கிய நிவாரண நிதி ஈழத் தமிழர்களின் கைகளுக்குச் சென்றடைந்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. - இப்படி அவர் தெரிவித்தார்.

# தமிழக மீனவரைக் காக்க நடவடிக்கை எடு; அல்லது மீனவர் கையில் துப்பாக்கி கொடு!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டத்தில் கோஷம்

சென்னை, ஜூலை 14

''தமிழக மீனவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடு, அல்லது தமிழக மீனவன் கையில் துப்பாக்கி கொடு'' - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி குரல் எழுப்பியுள்ளது.

மேலும், இலங்கையுடன் எந்த ஒப்பந்தம் செய்து கொண்டாலும் மத்திய அரசு தமிழக முதல்வர் கருணாநிதியுடன் கலந்து பேச வேண்டும் - என்று அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறினார்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை அப்புறப்படுத்தக் கோரி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், ''தமிழக மீனவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடு, அல்லது தமிழக மீனவன் கையில் துப்பாக்கி கொடு'' என்று கோஷங்கள் எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்திற்கு இடையே தொல். திருமாவளவன் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

வேதாரண்யத்தைச் சேர்ந்த மீனவர் செல்லப்பன் கடந்த 2 தினங்களுக்கு முன்னால் இலங்கைக் கடற்படையினரால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் அவர்கள் கச்சதீவுக்கு அருகே தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியும், மீன் வகைகள் மற்றும் படகுகளைச் சூறையாடியும் சென்றுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதாக மத்திய அமைச்சர் சிதம்பரம் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், இதுவரை பேச்சு நடத்தப்படவில்லை.

தொடர்ந்து, 25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக மீனவர்கள் பலர் காணாமல் போகின்றனர்.

இலங்கை அரசின் இந்தப் போக்கை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். மாறாக இலங்கைக்கு இந்தியா துணைபோவது கடும் வேதனையளிக்கிறது. இனி இலங்கையுடன் மத்திய அரசு எந்த ஒப்பந்தம் செய்து கொண்டாலும் தமிழக முதல்வர் கருணாநிதியுடன் கலந்து பேச வேண்டும்.



இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா. செயலர் நியமித்த ஆலோசனைக் குவிற்கு எதிராக அரசில் உள்ளவர்களே போராட்டம் நடத்துகிறார்கள்.

எனவே, இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கைத் தூதரகங்களையும் இழுத்து மூட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால், சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை பொதுமக்களே இழுத்து மூடும் நிலை ஏற்படும்.

இப்படி திருமாவளவன் கூறினார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழர் என்பதில் சந்தேகம் கொண்டோரே செம்மொழி மாநாட்டுக்கு வரவில்லை



சென்னை, ஜூலை 14

தாங்கள் தமிழர்கள் என்பதில் சந்தேகம் வந்தவர்கள்தான் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டிற்கு வரவில்லை-என்று முதல்வர் கருணா நிதி குற்றம் சாட்டியுள்ளார்.

கருணாநிதி எழுதிய 'போர்வாளும் பூவிதழும்' என்ற நாட்டிய நாடகம், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் சென்னை மியூசிக் அகட்டமியில் திங்கட்கிழமை நடைபெற்றது.

கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பரத நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் குழுவினர் அரங்கேற்றிய நாடகம் 2 ஆவது முறையாக சென்னையில் அரங்கேற்றப்பட்டது. விழாவில் ஆன்மிகச் சொற்பொழிவாளர்கள் வேளுக்குடி கிருஷ்ணன், திருச்சி கல்யாணராமன் ஆகியோர் 'ஆழ்வார்கள் வளர்த்த தமிழ்' என்ற தலைப்பில் பேசினர்.

விழாவில் கருணாநிதி பேசியவை வருமாறு -

வேளுக்குடி கிருஷ்ணன், திருச்சி கல்யாணராமன் ஆகியோர் புதியவர்கள். இந்த விழாவில்தான் எனக்கு அறிமுகமானார்கள். அவர்களது உரையைக் கேட்டதும் இவ்வளவு நாளாக அதனைக் கேட்க முடியவில்லையே என்ற ஆதங்கம்தான் ஏற்பட்டது.

அவர்கள் பேசிய கருத்துகள் சிலவற்றில் எங்களுக்கு வேறுபாடுகள் இருந்தாலும் தமிழால் நாங்கள் ஒன்றிணைந்தோம். அங்கே சுற்றினாலும் அவர்கள் தமிழில் வந்துதான் முடித்தார்கள். அந்தத் தமிழ்தான் நம்மை ஒருங்கிணைக்கிறது. அதனால் அரசியல், மதம் என்று எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைத்துத் தரப்பினரும் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் பங்கேற்றனர். தமிழர்கள் என்பதில் சந்தேகம் வந்தவர்கள் மட்டும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

செம்மொழி மாநாட்டில் ஏற்பட்ட தமிழ் உணர்வு அணையாமல் கொழுந்துவிட்டு எரிய வேண்டும் என்பதற்காகவே போர்வாளும் பூவிதழும் என்ற நாட்டிய நாடகம் இங்கே அரங்கேற்றப்படுகிறது.

கோவையில் ஏற்பட்ட தமிழ் உணர்வு நின்று விடாமல் என்றும் தொடர வேண்டும்.

- இப்படி முதல்வர் [illegible]

# எந்தச் சட்டம் வரினும் ஈழத்தமிழர்கள் ஆதரவு எழுச்சியை அடக்க முடியாது!

## பழ.நெடுமாறன் ஆவேசம்



சென்னை, ஜூலை 14

இலங்கைத் தமிழர் ஆதரவாளர்களை மிரட்டும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று தமிழக அரசு மிரட்டுகிறது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வெளிநாட்டுப் பிரச்சினையை மையமாக வைத்து, மத்திய - மாநில அரசுகளுக்கு எதிராகவும், தேச ஒற்றுமைக்கு எதிராகவும் பேசுபவர்களைத் தண்டிக்க புதிய சட்டம் கொண்டு வர அரசு தயங்காது என்று அமைச்சர் துரைமுருகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம், வியட்நாம் விடுதலைப் போராட்டம் போன்றவற்றுக்கு ஆதரவாக இந்தியாவில் காங்கிரஸ், தி.மு.க. உட்பட பல்வேறு கட்சிகள் போராடியுள்ளன.

கடந்த காலத்தில் தடா, பொடா போன்ற கொடிய சட்டங்களுக்கு எதிராக மக்கள் கொதித்தெழுந்து போராடியதையும், அதனால் அந்தச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டதையும் துரைமுருகனுக்கு நினைவுபடுத்துகிறேன்.

எத்தனை அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டுவந்தாலும், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் திரண்டெழுந்து வரும் எழுச்சியை அடக்க முடியாது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமான் கைதுக்கு வைகோ கண்டனம்



சென்னை, ஜூலை 14

இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் கொடுமையைக் கண்டித்துப் பேசிய, நாம் தமிழர் இயக்கத்தின் தலைவரும், இயக்குநருமான சீமான் கைது செய்யப்பட்டதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்த இலங்கை அரசு, கடற்படையை ஏவி தமிழக மீனவர்களையும் சுட்டுக் கொல்லும் கொடுமையைக் கண்டித்து, நாம் தமிழர் இயக்கத்தின் தலைவரும், இயக்குநருமான சீமான் பேசியதற்காக பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து அவரைக்கைதுசெய்துள்ளனர்.

தமிழக முதல்வர், இலங்கை அரசுக்கு எதிராகப் பேசினால் சட்டம் ஒழுங்கு தன் கடமையைச் செய்யும் என தனது அமைச்சரை விட்டுக் கூறுகிறார்.

இயக்குநர் சீமானைக் கைதுசெய்ததை வன்மையாகக் கண்டிப்பதோடு, கருத்து உரிமையை ஒடுக்க, அடக்குமுறையை ஏவுகின்ற அரசை எதிர்த்துப் போராடுவதற்கு ஜனநாயக சக்திகள் ஆர்த்தெழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் ஜனாதிபதிக்கு எதிரான போர்க்குற்றங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஊர்ஜிதம்!

திஹாக், ஜூலை 14

சூடான் ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீதான இனப்படுகொலை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் திங்கட்கிழமை ஊர்ஜிதப்படுத்தி தீர்ப்பளித்தது.

ஆபிரிக்க நாடான சூடானில் ஓமர் அல்-பஷீர் ஜனாதிபதியாக இருக்கிறார். அங்குள்ள டாபூர் பகுதியிலுள்ள பழங்குடியின மலைவாழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர்.

அவர்களின் போராட்டத்தை சூடான் அரசு இராணுவம் மூலம் அடக்கி வருகிறது. இந்நிலையில் கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரலில் நடந்த தாக்குதலின்போது போராட்டத்தில் ஈடுபட்ட பர், மசாலித், ஷகாவா ஆகிய இன மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீது நெதர்லாந்தில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்ற வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, ஜனாதிபதி ஓமர் அல்-பஷீருக்கு கடந்த ஆண்டு கைது அழைப்பாணை உத்தரவு பிறப்பித்தார்.

மனிதாபிமானத்துக்கு எதிராக இனப்படுகொலை செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து ஓமர் அல்-பஷீரின் சார்பில் அவரது சட்டத்தரணி லூயிஸ் மொரேனோ நகாம்போ கடந்த 4 மாதத்துக்கு முன்னர் மேன்முறையீடு செய்தார்.

இந்த வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. இதை விசாரித்த நீதிபதிகள் ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீது இனப்படுகொலைத் தொடர்பாக 3 குற்றச்சாட்டுகளைப் பதிவுசெய்து கீழ் நீதிமன்றம் அளித்த அறிவிப்பை உறுதிசெய்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கொன்று குவித்தமை, அதன் மூலம் அப்பகுதி மக்களுக்கு மனரீதியாக வருத்தத்தை ஏற்படுத்தியமை, அடக்குமுறையை பயன்படுத்தியமை ஆகிய 3 குற்றச்சாட்டுகளையும் உறுதிசெய்தனர்.

போர்க்குற்ற வழக்குத் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்ட முதல் ஜனாதிபதி இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் அணை உடையும் அபாயம்! 9,000 பேர் வெளியேற்றம்!!

பீஜிங், ஜூலை 14

சீனாவில் நிரம்பி வழியும் அணையொன்று உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் முதல் கட்டமாக ஒன்பதாயிரம் மக்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் .

சீனாவில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழையால், ஒன்பது மாகாணங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 400இற்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர்.

குங்ஹாய் மாகாணத்திலுள்ள வென்குவாங் அணை, பலத்த மழையின் காரணமாக நிரம்பி வழிகிறது. இந்த அணையின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளதால் உடையும் அபாயம் உள்ளது.

இதன் காரணமாக கோல்முட் பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இந்த அணை உடைந்தால் 130 கிலோமீற்றர் தூரத்துக்கு 4 மீற்றர் உயரத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்கும் அபாயம் உள்ளது.

# டைட்டானிக் நடிகையின் 100ஆவது பிறந்த நாள் விழா

லிவர்லி ஹில்ஸ், ஜூலை 14

டைட்டானிக் படத்தில் நடித்த நடிகையின் 100ஆவது பிறந்தநாள் விழாவை, எதிர்வரும் 22 ஆம் திகதி லிவர்லி ஹில்ஸ் நகரில் ஆஸ்கார் விருதுக்குழு நடத்தவுள்ளது.

டைட்டானிக் என்ற பெயரிலான மிதக்கும் நகரம் என்று சொல்லத்தக்க ஆடம்பரக் கப்பல் பயணிகளை ஏற்றிக்கொண்டு பிரிட்டனிலுள்ள சவுத்தாம்ப்டன் நகரிலிருந்து அமெரிக்காவுக்கு 1912ஆம் ஆண்டு புறப்பட்டது. இந்தக் கப்பல் ஆபிரிக்க கடலில் சென்றபோது, பனிப்பாறையில் மோதி தண்ணீரில் மூழ்கியது.

இதில் பயணம் செய்த பயணிகளில் பெரும்பாலானோர் தண்ணீரில் மூழ்கி பலியாயினர். இந்தக் கப்பலில் பயணம் செய்து உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் குளோரியா ஸ்டூவர்ட்.

இந்த உண்மைச்சம்பவம் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு அது உலகம் முழுவதும் வெளியாகி வசூலில் சாதனை படைத்தது. இந்தப் படத்தில் குளோரியா ஸ்டூவர்ட் நடித்திருந்தார். அவரின் 100ஆவது பிறந்த தினவிழா இந்த மாதம் வருகிறது.

இதையொட்டி ஆஸ்கார் விருது வழங்கும் நிறுவனம் அவருக்கு பாராட்டு விழா நடத்தத் திட்டமிட்டுள்ளது.




# லண்டன் குண்டுவெடிப்பில் முகம் கருகிய பெண் மீண்டும் முகப் பொலிவு பெற்றார்

## ஊடகங்களுடன் அனுபவப் பகிர்வு

லண்டன், ஜூலை 14

லண்டனில் ஐந்தாண்டுகளுக்கு முன் நடந்த குண்டுவெடிப்பில் முகம் முழுவதும் தீயில் கருகி காயமடைந்த பெண், தற்போது முற்றிலும் குணமடைந்துள்ளார். குண்டுவெடிப்பின்போது தனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை தற்போது இவர் முதல் முறையாக மனம் திறந்து கூறியுள்ளார்.

லண்டனில், 2005 ஜூலை 7இல், தீவிரவாதிகள் தொடர் குண்டுவெடிப்புகளை நிகழ்த்தினர். போக்குவரத்தைச் சீர்குலைக்கும் வகையில், லண்டன் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் ரயில் போக்குவரத்தை குறிவைத்தும் ஒரு தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், ரயிலில் சென்றுகொண்டிருந்த பலர் பலியாயினர். பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் டாவினியா டர்ரெல் என்ற இளம் பெண்ணும் ஒருவர்.

குண்டுவெடிப்பில் இவரது முகத்தின் பெரும்பாலான பகுதிகள், தீயில் கருகிவிட்டன. அடையாளம் காண முடியாத அளவுக்கு முகம் சிதைந்துவிட்டது.செல்சியா, வெஸ்ட்மினிஸ்டர் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில், இவருக்கு மாதக் கணக்கில் தொடர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இவர் முற்றிலும் குணமடைந்துள்ளார். இவரது முகத்தின் பழைய பொலிவு மீண்டும் திரும்பியுள்ளது. சிறு சிராய்ப்புகள் ஏற்பட்டமை போல இருக்கிறதே தவிர வேறு எந்தத் தழும்பையும் காண முடியவில்லை. தற்போது எரிக் டக்ளஸ் என்பவரை இவர் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

குண்டுவெடிப்பு நடந்து ஐந்தாண்டுகள் முடிந்துள்ள நிலையில், முதல் முறையாக குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஊடகங்களுடன் டாவினியா டர்ரெல் பகிர்ந்து கொண்டார்.

அவர் கூறியவை வருமாறு:-

குண்டுவெடிப்பை இப்போது நினைத்தாலும் நடுக்கமாக உள்ளது. பாட்டிங்டன் பகுதியிலுள்ள அலுவலகத்துக்கு ரயிலில் சென்றுகொண் டிருந்தேன். அப்போது, பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. என் இடதுபக்கம், பெரிய [illegible] வெடித்தது போல உணர்ந்தேன்.



ஒரே அலறல் சத்தமாக கேட்டது. என் முகம் முழுவதும் தீயில் கருகிவிட்டது. வார்த்தையில் கூறமுடியாத அளவுக்கு வலி இருந்தது. அங்கு வந்த மீட்புக் குழுவினர், என் முகத்தில் முகமூடி அணிவித்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

வைத்தியசாலையில் இருந்தபோது என் எதிர்காலமே பறிபோய்விட்டது போல் உணர்ந்தேன். மன ரீதியாகவும் மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டது. எனக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், முகத்தை பழைய நிலைக்கு கொண்டு வந்து விடலாம் என ஆறுதல் கூறினர்.

ஆச்சரியப்படும் வகையில் என் முகம், படிப்படியாக பழைய நிலைக்கு வந்துவிட்டது. இப்போது மகிழ்ச்சியாக உள்ளேன். இவ்வாறு டாவினியா டர்ரெல் குறிப்பிட்டார்.

# கொலம்பியாவில் கடும் துப்பாக்கிச் சமர்: 4 பெண்கள் உட்பட 12 தீவிரவாதிகள் பலி!

பொகோட்டா, ஜூலை 14

கொலம்பியாவில் புரட்சிப் படையின் கொரில்லா பிரிவினருக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற இரு வேறு மோதல்களில் கொரில்லா படையினர் 12 பேரும், இராணுவச் சிப்பாய்கள் 6 பேரும் பலியாகியுள்ளனர்.

மத்திய கொலம்பிய - வெனிசுலா எல்லையில் இந்த மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

கொலம்பியாவில் அரசுக்கு எதிராக மார்க்சிஸ்ட் புரட்சிப் படையினர் போராடி வருகின்றனர். இவர்கள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி இராணுவத்தினரையும், பொலிஸாரையும் கொல்கின்றனர். பொதுச் சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கின்றனர்.

இந்நிலையில், மத்திய கொலம்பியாவில் பதுங்கியிருந்த புரட்சிப் படையின் கொரில்லா பிரிவினர் மீது இராணுவம் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, இரு தரப்புகளுக்குமிடையே மூண்ட கடும் துப்பாக்கிச் சண்டை பல மணிநேரம் நீடித்தது.

முடிவில் கொரில்லா படையின் கொமாண்டர் ஒருவர் உட்பட 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் 4 பேர் பெண்கள். இந்தத் தாக்குதலில் வான் படையினரும் ஈடுபட்டனர்.

அதே நேரத்தில் வெனிசுலா எல்லைப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது புரட்சிப் படையினர் திடீர் தாக்குதல் நடத்தி, 6 சிப்பாய்களைக் கொன்றனர்.

மார்க்சிஸ்ட் புரட்சிப் படையினர் 1960 ஆம் ஆண்டு முதல் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்படையில் சுமார் 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் சிப் பாய்கள் வரை உள்ளனர்.

ஏழைகளைச் சுரண்டும் பணக்காரர்களுக்கு எதிராகவும், கொலம்பிய அரசியலில் தலையிடும் அமெரிக்காவை எதிர்த்தும் போராடுவதை இவர்கள் தங்கள் கொள்கையாக அறிவித்துள்ளனர்.


July 16 முதல் நெல்லியடி நகரில்

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

Spoken English

பயிற்சிமையம்.

நவீன நுட்பங்களுடன் ஆங்கிலம் பேச பயிலலாம்.




veta ®

Experts In English Training

An ISO 9001:2000 Certified Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| நெல்லியடி | | யாழ்ப்பாணம் | |
|---|---|---|---|
| Tue, Thu | 9.00 a.m. | Sat, Sun | 9.00 a.m. |
| Sat, Sun | 3.00 p.m. | Mon, Wed | 4.30 p.m. |
| Mon, Wed, fri | 5.00 p.m. | | |

DMI COMPUTER EDUCATION

M.M.V. வீதி, நெல்லியடி. (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக)

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம்.Tel. : 021-222 4403



# வலி.தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

## அறிவித்தல்

ஆதன இல:- 31, 31/1, கல்லூரி ஒழுங்கை, வட்டாரம் 5, மானிப்பாய்.

மேற்படி ஆதனங்கள் எவராலும் உரிமை கோரப்படாது அடர்ந்து வளர்ந்த பற்றைகள் நிறைந்து காணப்பட்டதால் டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைக்காக உடனடியாக துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காணி உரிமையாளர்கள்/பராமரிப்பாளர்கள் இவ் அறிவித்தல் திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கு தங்கள் காணி உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களோடு சமுகமளித்து உரிய செலவுகளை மீளச்செலுத்தவேண்டும். இக் காலப் பகுதியில் யாரும் உரிமை கோராதவிடத்து குறித்த காணிகள் பிரதேச சபைக்குப் பராதீனப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
2010.07.12

(சி/569242)



# வேலை வாய்ப்புடன் விசா

Australia, Malasia, Singapore Student Business Citizen Work Permit விசா சுலபமாகப் பெற்றுத் தரப்படும், வேலை ஏற்பாடும் செய்து தரப்படும்.உடனடியாகபுறப்படலாம்முன்கூட்டியே பணம் கட்டத் தேவை இல்லை.

தொடர்பு : 0775267655



# பனை அபிவிருத்திச்சபை

பனைசார் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுடன் கலந்துரையாடல்

காலம் :- 22.07.2010 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

இடம் :- பனை அபிவிருத்திச் சபை, தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும்.

வருக! வந்து பயன்பெறுக!

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
முதலாம்மாடி,
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

13.07.2010 (சி/569235)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய யாழ்.அரச அதிபராகப் பதவியேற்க வந்த திருமதி இமெல்டா சுகுமாரை, ஓய்வுபெற்றுச் செல்லும் அரச அதிபர் கே.கணேஷ் வரவேற்பதை முதலாவது படத்திலும் இமெல்டா கடமைகளைப் பொறுப்பேற்கும் பத்திரத்தில் கையொப்பமிடுவதை இரண்டாவது படத்திலும் திணைக்களத் தலைவர்களுடன் புதிய அரச அதிபர் கலந்துரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படங்கள் ரட்ணம், உமா, டிலீப்)

# ரணிலைத் தனது பொறிக்குள் சிக்க வைத்துவிட்டார் ஜனாதிபதி

## ஜே.வி.பி. குமுறுகிறது

கொழும்பு, ஜூலை 14

வாழ்க்கைச்செலவு உயர்வு, சம்பள அதிகரிப்பு வழங்காமை போன்ற எரியும் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்பவே அரசு அரசமைப்புத் திருத்தம் தொடர்பான பேச்சுகளை ஐ.தே.கட்சியுடன் ஆரம்பித்துள்ளது. ரணிலைத் தனது பொறிக்குள் சிக்கவைத்துவிட்டார் ஜனாதிபதி என ஜே.வி.பி. நேற்றுக் குற்றம் சாட்டியது.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு வரவு - செலவுத் திட்ட விவாதம் முடியும் தறுவாயில் மக்களைத் திசைதிருப்ப ஐ.நா.அலுவலகத்துக்கு முன்னால் முதலாவது நாடகத்தை அரங்கேற்றியது. இந்த நாடகம் துரதிஷ்டவசமாக எதுவித பயனுமின்றி முடிவடைந்தது. இப்போது அரசு அரசமைப்புத் திருத்தம் தொடர்பான பேச்சு என்ற நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

அரசு மக்களின் பிரச்சினைகளுக்கு காலம் கடத்தும் விதமாகவே இந்த நாடகத்தை அரங்கேற்றுகிறது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சி மறுசீரமைப்பு பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளார். அரசமைப்புத் திருத்தம் தொடர்பான அரசு - ஐ.தே.க. பேச்சுகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சாதகமாக அமைந்துவிட்டன.

மொத்தத்தில் கட்சி மறுசீரமைப்பு பிரச்சினையில் சிக்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை அரசமைப்புத் திருத்தம் தொடர்பான பேச்சு என்ற ரீதியில் ஜனாதிபதி தனது பொறிக்குள் சிக்கவைத்துள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்களை அரசு வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போகிறது என ஏற்கனவே தெரிவித்திருந்தது. அந்தத் திருத்தங்களில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் நீடிக்கும் வகையிலான திருத்தமே பிரதானமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்கு மக்கள் மத்தியிலும் எதிர்க் கட்சிகளிடமிருந்தும் மட்டுமல்லாமல் அரசுக்குள்ளேயே பலத்த எதிர்ப்புகள் எழுந்தன. இதன் காரணமாக ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டியதாயிற்று. இப்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை ஏற்படுத்தும் விதத்திலான அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர இணக்கம் தெரிவித்து ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்தப்படுகின்றது. இதில் கூறப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையானது நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையிலானதா அல்லது நிறைவேற்று ஜனாதிபதி என்பதுபோல் நிறைவேற்றுப் பிரதமர் என 'லேபல்'மாற்றும் ஏமாற்று வேலையா?

நாட்டின் அரசமைப்பு என்பது ஸ்ரீல.சு.கட்சியினதோ, ஐ.தே.கட்சியினதோ யாப்பு அல்ல. அதை இந்தக் கட்சிகளும் ஆராய்வதற்கு....

* நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறை.
* 17ஆவது அரசமைப்புத் திருத்தம்.
* தேர்தல் முறை.

இம்மூன்று விடயங்கள் குறித்தே ஐ.தே.கட்சியுடன் அரச தரப்பு பேச்சு நடத்துவதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து அரசின் கருத்துகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதில் நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் முறை என்பது என்ன? வெறுமனே பெயர் மாற்றமா என்பது குறித்த விளக்கம் இல்லை.

17 ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதை நடைமுறைப்படுத்தினால் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும்.

தேர்தல் நடைமுறையில் குறைபாடுகள் உள்ளன. புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அரசமைப்புத் திருத்தம் குறித்து அரசு ஐ.தே.கவுடன் நடத்தும் பேச்சுகள் வெறும் ஏமாற்று வித்தையே. இந்த விடயத்தில் அரசு நேர்மையாக நடக்கும் என நாம் நம்பவில்லை. அரசு இன்னும் அதிகாரத்தில் இருப்பதற்கே இவை அனைத்தையும் மேற்கொள்கின்றது. (சி)

## முல்லைத்தீவு வலய ஆசிரியரின் சம்பளம்

முல்லைத்தீவு,ஜூலை14

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமை புரிந்து வரும் முல்லைத்தீவு வலய பாடசாலை ஆசிரியர்கள் ஜூலை மாதச் சம்பளப் பத்திரத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமையும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் கையொப்பமிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு வலயப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

அதேசமயம் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் தங்களது நிரந்தரப் பாடசாலையில் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதுடன் உடனடியாகவே கடமையையும் பொறுப்பேற்குமாறும் பணிப்பாளர் தேவேந்திரன் அறியத்தந்துள்ளார். (ஒ)

## யாழில் கடமை புரியும் கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு

கிளிநொச்சி,ஜூலை14

இணைப்புப் பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான ஆடிமாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலில் கையொப்பமிட ஏற்பாடாகியுள்ளது.

சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் யாழ்.மேலதிக மாகாணக் கல்வி பணிமனையில் மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை கையொப்பமிடலாம் என்றும் சம்பளப் பட்டியலில் கையொப்பமிட வரும்பொழுது ஆடி மாதத்திற்குரிய லீவு (B-100) விபரத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (ஒ)

## சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுக்கூட்டம்

இன்று நடைபெறவிருந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் என சம்மேளனத் தலைவர்செசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஒ-207)

# ஒரு ஜோக்கரின் உண்ணாவிரதம் நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டது

## பெரும் தேசத் துரோகம் என்கிறார் அநுர எம்.பி.

கொழும்பு, ஜூலை 14

ஒரு 'ஜோக்கரின்' உண்ணாவிரத நாடகம் சர்வதேச ரீதியில் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இது ஒரு தேசத் துரோகச் செயலாகும் என ஜே.வி.பி. பேச்சாளர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் குற்றம் சாட்டினார்.

கொழும்பு பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஐ.நா.செயலாளர் நாயகம் தனது அதிகாரத்துக்கு அப்பால் சென்று இலங்கையின் யுத்தக்குற்றம் தொடர்பாக ஆலோசனை வழங்க நிபுணர் குழுவை நியமித்ததை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். பான் கீ - மூன் நிபுணர் குழுவை கலைக்கும்வரை சாகும்வரையான உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்துவிட்டு 'சேலைன்' ஏற்றிய வீண்ணம் இருந்தவர்கள் எதைச் சாதித்தார்கள்? இந்தப் போராட்டத்தினால் பான் கீ-மூன் தான் நினைத்ததைச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு போராட்டத்தில் எடுத்த எடுப்பிலேயே இறுதி ஆயுதத்தைப் பாவித்துவிட்டால் அத்துடன் போராட்டம் முற்றுப்பெற்றுவிடும்.

இந்தப் போராட்டத்தினால் இருக்கும் பிரச்சினையுடன் மேலும் ஒரு புதிய பிரச்சினைக்கு நாடு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை இயங்க விடாமல் அரச அமைச்சரொருவர் தடுத்தமைக்கு விளக்கமளிக்க வேண்டுமென எட்டு நாடுகள் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளன.

உண்ணாவிரதம் மேற்கொண்டு ஆறு மணித்தியாலங்களின் பின்னர் உண்ணாவிரதமிருந்தவரைப் பரிசோதித்த வைத்தியர் அவரது சிறுநீரகம் செயல் இழக்க ஆரம்பித்துள்ளது எனத் தெரிவித்தார். அவர் மிருக வைத்தியராகத்தான் இருக்கவேண்டும்.

மொத்தத்தில் இந்த நகைச்சுவை உண்ணாவிரதம் எமது நாட்டை சர்வதேசத்தின் முன்னிலையில் கேலிக்குரியதாக்கிவிட்டது.

- இவ்வாறு அவர் சொன்னார். (சி)

# நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கான திரைப்படக் காட்சி

## திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை14

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை பயில்கின்ற மாணவர்களின் நன்மை கருதி அவர்களது பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடக பாடங்களை அடிப்படையாகக் கொண்ட மூன்று திரைப்படங்கள் நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை மூன்று நாள்களுக்கு இல.285, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அகலத்திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

மூன்று நாள்களும் காலை 9.30 மணிக்கு திரைப்படக் காட்சிகள் ஆரம்பமாகும். இதன்போது உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியர்களின் நாடங்கங்களான சோபோக்கிளிஸின் 'அன் ரிக்கனி', ஹென்றிக் இப்சனின் 'ஒரு பாவையின் வீடு', வில்லியம் ஷேக்ஸ் பியரின் 'யூலியஸ் சீசர்' ஆகியவற் றின் திரைப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. இதற்கமைவாக நாளை வியாழக்கிழமை 'அன் ரிக்கனி'யும் வெள்ளிக்கிழமை 'ஒரு பாவையின் வீடும்' சனிக்கிழமை 'யூலியஸ் சீசரும்' காண் பிக்கப்படவுள்ளன. இதன்போது இவை தொடர்பான அறிமுக உரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

மிகவும் அரிதாகக் கிடைக்கக் கூடிய இத்திரைப்படங்கள் மாணவர்களுக்கு தாம் கற்கும் பாடங்கள் தொடர்பான தெளிவை ஏற்படுத்துவ தற்கு துணைபுரியக்கூடியவையென்பதால் மாணவர்கள் இச்சந்தர்ப்பந்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன் ஆர்வமுள்ள ஏனையவர்களும் இத்திரைப் படங்களை பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(50)

# இலங்கைப் பணிப்பெண்களின் வேலை நிறுத்தம் தொடர்கிறது

பாஹ்ரெயினில் இலங்கைப் பணிப் பெண்களின் வேலைநிறுத்தம் தொடர்கிறது. இது குறித்து ஆராய குவைத் தூதரகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தைச் சேர்ந்த விசேட பிரதிநிதிகள் இருவர் பாஹ்ரெயின் செல்கின்றனர்.

பாஹ்ரெயினில் இலங்கைத் தூதரகம் இல்லாமையால் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இரண்டு அதிகாரிகள் பாஹ்ரெயினுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

தூதரகத்துக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்காது இலங்கைப் பணிப்பெண்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தூதரகப் பிரிவுகளுடன் கலந்துரையாடுவதற்கு முன்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதன் மூலம் பிரச்சினைகள் தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருத்துவ மாது மரணம் தொடர்பாக

# திணைக்கள விசாரணை நடைபெற்று சரியான நடவடிக்கை எடுக்கப்படும்

### சுகாதாரப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வேலணை வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது சரவணை தர்சிகா கொலை தொடர்பாக திணைக்கள மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விசாரணையின் அடிப்படையில் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக திணைக்கள நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மருத்துவ மாதுக்கள் தொழிற்சங்கம், பொதுச்சுகாதார சேவைகள் சங்கம் ஆகியன கையளித்த 7 அம்சக்கோரிக்கைகளுக்குப் பதில் அளித்து அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவும், ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கடிதத்தில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பாகத் தமது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளன. (ஒ-1-14)

## வன்னியில் பல பகுதியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 30 வருடங்கள் நாட்டில் நிலவிய பயங்கரவாதமும் போர்ச்சூழலும் பெரும் தியாகத்தால் உடைக்கப்பட்டுள்ளன. தற்போது நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளன.

இந்த சமாதானத்தையும் அமைதியையும் நீண்டகாலத்துக்கு நாம் பேணிபாதுகாக்க வேண்டியுள்ளது. காடுகள் அடங்கிய மிகவும் பின்தங்கிய பிரதேசங்களான இப்பகுதிகளில்தான் புலிகள் பயிற்சி முகாம்களை அமைத்து பயிற்சிகளை மேற்கொண்டனர். அத்துடன், தமது செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர். அந் நிலைமை மேலும் தொடராமல்- ஏற்படாமல் இருப்பதற்கு நாட்டின் பாதுகாப்பை நாம் உறுதிசெய்யவேண்டும்.-

அதிக எண்ணிக்கையான ஆயுதங்களைக் காவிச்சென்று போரில், தாக்குதலில் ஈடுபடும் தேவை இப்போது இல்லை. எல்லா இடங்களிலும் குறுகிய இடைவெளிகளில் நின்று பணியாற்ற வேண்டிய தேவையும் இல்லாமற் போய்விட்டது.

இனி நாம் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இந்தப்பிரதேசங்களில் முன்னர் எப்போதும் இல்லாதவாறு புலனாய்வுத் தகவல்களைப் பெறுவதில் தேர்ச்சியும் அனுபவமும் பெறவேண்டும்.

வெள்ளாங்குளம், விடுதலைப்புலிகள் பயிற்சிப் பாசறைகள் நிறைந்து காணப்பட்ட பிரதேசம் ஆகும். ஆகையால் இந்தப்பகுதி எங்களுடைய வீரர்களுக்கும் சிறந்த பயிற்சிக்குரிய இடமாக்கப்பட வேண்டும் - என்றார்.

வெள்ளாங்குளம் செல்வதற்கு முன்னர் - வன்னி மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அறிவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று வவுனியாவுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

காலையில் வவுனியாவிற்கு வருகை தந்த அவர் அங்கு பணியாற்றும் படையினருடன் கலந்துரையாடிபாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததுடன் படையினரின் சேமநலன்களையும் கேட்டறிந்தார். (அ)

## ஜனாதிபதி தலைமையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் இடம்பெறும். ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் அரச அதிகாரிகள் 30 பேர் கலந்துகொள்வர்.

**பொதுமக்கள் மத்தியில் ஜனாதிபதி உரை**

தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றுவார்.

கிளிநொச்சி றொட்றிக்கோ விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

ஐந்து மாவட்டங்களில் இருந்தும் 1,500 பேர் இந்நிகழ்வில் பங்குகொள்வர். இவர்களில் 1,300 பேருக்கு ஜனாதிபதி விசேட உதவிகளை வழங்குவார்.

இவர்களை அங்கு அடிழைத்துவர 28 பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று ஆளுநரின் அலுவலகம் தெரிவித்தது.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் பெயர்ப் பலகையைத்திறந்து வைத்தல், அங்கு அமைக்கப்பட்டுள்ள போர்வீரர்களின் நினைவுச் சின்னத்தில் மரியாதை செலுத்தல் போன்ற நிகழ்வுகளிலும் ஜனாதிபதி பங்குபற்றவிருக்கிறார்.

இதேவேளை -

ஜனாதிபதி விஜயத்தை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்கனவே தீவிரமாக்கப்பட்டுள்ளன. நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்புச் சோதனைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நகருக்குள் தேவையில்லாத வகையில் பொதுமக்கள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. (ஒ-1-405)

## வேலணை வைத்தி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணமான குடும்பநல மாதுவின் சகோதரி மற்றும் அவருடன் பணியாற்றிய மருத்துவ மாது ஆகியோரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வாக்குமூலங்களின் அடிப்படையில் பிரஸ்தாப வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய டாக்டரை கைது செய்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் இறந்த பெண்ணின் பிரேத பரிசோதனையை நடத்திய சட்டவைத்திய அதிகாரியை இன்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-1)

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பமொன்றுக்குப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வீடொன்று பின்வரும் பிரதேசங்களில் வாடகைக்குத் தேவை.

நல்லூர், கொக்குவில், யாழ். நகரப்பகுதி, கோண்டாவில், நாவடி, கன்னாகப் பகுதிகள்

தொடர்பு: 071 6182182

**ஐரோப்பா பயணம்**

உடனடியாக ஐரோப்பிய விசா பெறுவதற்கான சகல ஆலோசனைகளுக்கும். குமாரன் 0729699270

U.K.இல் கல்வி கற்க உடன் சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும். லக்ஷ்மி 0757388275

*Yumandi Developers & Consultant (pvt) Ltd*

Reg.No N(PVS) 49481

**CERTIFICATE COURSE IN OFF-SET PRINTING**

**அச்சக துறை சம்பந்தமான கற்கைநெறி**

**செயன்முறை விளக்கங்களுடன் பிரிவு - 2 ஆரம்பமாகவுள்ளது.**

தொடர்புகளுக்கு

இல.82/13, செட்டித்தெரு, நல்லூர்.

யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 1388

*குறிப்பு: ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்*

## தனுனவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டைத் தொடர்ந்தே நீதிமன்றம் அசோகா திலகரட்ணவை அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆஜராகுமாறு உத்தரவிட்டது.

## அவுஸ்திரேலியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றடைந்தார்.

கிறீன் கட்சியின் செனட் வேட்பாளராக நியமிக்கப்பட்டமை குறித்துக் கருத்துக் கூறிய அவர் -

தமிழ்ச் சமூகத்துக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே இத்தேர்தலில் போட்டியிடுவதாகவும் -

குறிப்பாக ஆஸ்திரேலியாவில் ஈழத் தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் பெற்றுக் கொடுப்பதே தனது அரசியல் கொள்கை என்றும் தெரிவித்துள்ளார். (சி)

## இலங்கை அகதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யோசனைக்கு எதிராக கிழக்குத் திமோர் நாடாளுமன்றத்தில் 34 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள்.

பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருக்கின்றபோதும் அது குறித்துத் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் தமது அரசுக்கே உள்ளது எனக் கிழக்குத் திமோரின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழையும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்குத் தஞ்சம் வழங்குவது குறித்துத் தீர்மானம் ஒன்றை எடுக்கும் வரை அவர்களைக் கிழக்குத் திமோரில் தங்க வைப்பதற்கு ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் யோசனை முன்வைத்திருந்தார்.

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் புகலிடக் கோரிக்கையாளர் தற்போது கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# சாகும்வரை உண்ணாவிரதம் என்றால் திலீபனிடம் கற்றுக் கொள்ளுங்கள்!

### சிறிதுங்க ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14

உண்ணாவிரதம் என்றால் என்ன என்பதை தியாகி திலீபனிடம் ஜனாதிபதியின் இயக்கத்தில் நடித்த விமல் வீரவன்ஸ கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸவின் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசு தவறு செய்யவில்லை என்றால் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கு முகம் கொடுக்க ஏன் தயங்குகின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

நிபுணர் குழுவை கலைக்கும் வரை உண்ணாவிரதத்தைத் தொடரப் போவதாகவும் அதன் போது தனது உயிர் பிரிந்தால் போராட்டத்தை தொடருமாறு தனது ஆதவாளர்களிடம் கோரிக்கை விடுத்த விமல் வீரவன்ஸ, ஐ.நா.வின் நிபுணர்குழு கலைக்கப்படாத போதும் தம்முடைய சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார்.

பொதுமக்களை ஏமாற்றி மஹிந்த ராஜபக்ஷவும் விமல் வீரவன்ஸவும் மேற்கொண்ட நாடகம் இன்று அம்பலமாகியுள்ளது.

அது மாத்திரமல்லாமல் இந்த செயற்பாட்டால் எமது நாடு உலக நாடுகள் மத்தியில் கேலிக்கிடமாகியுள்ளது. எமது நாட்டில் இரண்டு மூன்று தினங்கள் உண்ணாமல் இருப்பவர்கள் பலர் உள்ளனர்.

இவர்கள் மத்தியில் விமல் வீரவன்ஸ மேற்கொள்வதை எப்படி உண்ணாவிரதம் என்று கூறுவது? விமல் சாகும்வரையில் ஒரு போதும் உண்ணாவிரதம் இருக்கப் போவதில்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் தாம் அமைத்த நிபுணர் குழுவைக் கலைக்கப் போவதும் இல்லை.

சாகும் வரையிலான உண்ணாவிரதமென்றால் என்னவென்பதை தியாகி திலீபனிடம் இவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

மாறாக பொதுமக்களை ஏமாற்றி இப்படியான கோமாளி நாடகங்களை அரங்கேற்றி எமது நாட்டிற்கு களங்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்றார் சிறிதுங்க. (அ-சி)

# 'பேஸ்புக்' இணையத்துக்கு எதிராக 50 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூலை 14

'பேஸ்புக்' இணையதளத்துக்கு எதிராக இலங்கையில் 50 இக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

'பேஸ்புக்'கில் காணப்படுகின்ற பெண்களின் படங்களை உடல் மாற்றம் செய்து தவறான இணையதளங்களில் வெளியிடப்படுகின்றன எனப் பொலிஸ் திணைக்களத்தில் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுக்கு முறைபாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விதமாக பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையில் 'பேஸ்புக்'கை தடை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் இலங்கையில் பல்லாயிரக்கணக்கானோர் 'பேஸ்புக்'கை பயன்படுத்துகின்றனர். இதனைத் தடைசெய்வதன் மூலம் இணையத் தளப்பாவனையில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்று தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார். (அ-சி)

## வடக்கு - கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்க வேண்டும். மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டும் ஆகிய விடயங்கள் குறித்தே நாம் இந்திய அரசுடன் பேசவுள்ளோம்" என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

"இந்திய அரசுடன் பேச்சு நடத்திய பின்னர் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸிடம் பேச்சு நடத்துவோம்" என்றும் கூறியிருந்தனர்.

**ஹக்கீமின் தனிப்பட்ட பேச்சு**

தற்போது எமது தலைவர் ஹக்கீம் கல்முனையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்குச் சென்றுள்ளர். அவர் இவ்வாரமளவில் கொழும்புக்கு வருவார். அவர் வந்தவுடன் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவோம்.

வடக்கு- கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்று ஹரிஸ் எம்.பி கூறியது, அது அவரின் தனிப்பட்டகருத்தே.

வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டாலும் சரி இணைக்கப்படாவிட்டாலும் சரி எமக்குத் தேவை இனம் சார்ந்த அதிகாரப்பகிர்வே. இது தான் முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை.

வடக்குக் கிழக்கிலுள்ள மூவின மக்களும் சார்ந்த அதிகாரப்பகிர்வே எமக்குத் தேவை.- இப்படி ஹசனலி எம்.பி தெரிவித்தார்.(ஒ)

## யாழ். அரசாங்க அதிபராக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமார் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பதவியேற்பு திகதிக்கு முதல் நாள் அமைச்சின் திடீர் அறிவிப்பின் பிரகாரம் இமல்டா சுகுமாரின் பதவியேற்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து யாழ்.அரச அதிபராக கே.கணேஸ் பணியாற்றுமாறும் அறிவிக்கப்பட்டது. அதன்படி கடந்த இரு வாரங்களாக கணேஸ் அந்தப் பதவியைத் தொடர்ந்தார்.

இந்த நிலையில் பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நேற்றுக் காலை வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய திருமதி இமெல்டா சுகுமார் நேற்று யாழ். மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்றார். அதனைத் தொடர்ந்து அரச அதிபர் கே.கணேஸ் தனது பொறுப்புகளை புதிய அரச அதிபரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஒ-14-19)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

## அரசமைப்புத் திருத்தங்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குதல், 17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையை மாற்றுதல் போன்ற மூன்று விடயங்களை அடிப்படையாகக்கொண்டு திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவுக்கும் அரசுக்குமிடையில் பேச்சு இடம்பெற்றது.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறக்கூடிய வகையிலான நிறைவேற்றுப் பிரதமர் முறைமையைக் கொண்டுவருவது தொடர்பான பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதேபோல், பிரதிநிதித்துவ முறைமையும், தொகுதிவாரி முறைமையும் கலந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முறைமை ஒன்றை உருவாக்குதல் தொடர்பாகப் பேசப்பட்டது. பிரதிநிதித்துவம் குறையும் தொகுதியில் எவ்வாறு பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது என்பது பற்றியும் பேசப்பட்டது.

இந்தப் பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இந்த விடயங்கள் தொடர்பாக எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்துவார். - என்றார். (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org